# வைகறை வெளிச்சம்

ஜூன் 2016 - ஷஅபான் - ரமழான் - 1437

ஆசிரியர்
**மு. குலாம் முஹம்மது**

துணை ஆசிரியர்
**கே.எம். இல்யாஸ் ரியாஜி**

**தனி இதழ் : ரூ. 20/-**

**ஆண்டுச் சந்தா:**

**உள்நாடு : ரூ. 240/-**

**வெளிநாடு : ரூ. 1500/-**

பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்
**DARUL ISLAM FOUNDATION TRUST**
என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

விளம்பரங்களுக்கு
**VAIGARAI VELICHAM**
52/1, Mannady Street,
Room No.7, Mannady,
Chennai - 600 001.
Cell.: 8148129887

E-mail: darultrust@yahoo.com
Web : www.darulislam.in

**All disputes arising out of any publication in this monthly will come under the jurisdiction of chennai courts.**

بسم الله الرحمن الرحيم

| | |
|---|---|
| இந்திய முஸ்லிம்களின் அரசியல் | 6 |
| கடந்த 16 ஆண்டுகளாக 'IB' என்ற மத்திய உளவுத்துறையும், இந்துத்துவ தீவிரவாதிகளுந்தான் குண்டு வெடிப்புகளை நடத்தி வருகின்றார்கள்! | 12 |
| தொடரும் மோடியின் கையாலாகத்தனம் | 17 |
| டெல்லியை உலுக்கிய 'தப்லீக் ஜமா அத்' கைதுகள்! | 19 |
| பறிபோகும் பாபரி மஸ்ஜித்! | 21 |
| 2008 மாலேகான் குண்டு வெடிப்பு! காவிமயமான என்.ஐ.ஏ. | 24 |
| தி.மு.க. – காங்கிரஸ் கூட்டணியை சீர்குலைக்க மத்திய உளவுத்துறை சதி! | 28 |
| அன்பகத்தின் அன்பான வேண்டுகோள்! | 30 |
| கிருஷ்ணா – கோதாவரி நிலவாயு ஊழல்! | 37 |
| இந்தியன் எக்ஸ்பிரஸ் மோடியைப் பற்றி என்ன சொல்லுகின்றது? | 42 |
| கருப்பாயி என்கிற நூர்ஜஹான் – நேர்முகம் | 43 |
| ஒரு பெண்ணியவாதி இஸ்லாத்தை ஏற்றார்! | 48 |
| சர்க்கரை நோயாளிகள் ரமழான் மாதத்தில் பின் பற்ற வேண்டிய முறைகள் | 51 |
| கற்காலம் – ஒரு வரலாற்றுப் பொய் | 54 |
| கோடையும் குழந்தைகளும்! | 56 |
| எது முதலில்? | 60 |
| முஸ்லிம்களின் வீழ்ச்சியால் உலகம் இழந்ததென்ன? | 63 |

*"மனிதர்களுக்காக, தோற்றுவிக்கப்பட்ட (சமுதாயத்தில்) சிறந்த சமுதாயமாக நீங்கள் இருக்கின்றீர்கள். (ஏனெனில்) நீங்கள் நல்லதைச் செய்ய ஏவுகின்றீர்கள். தீயதை விட்டும் விலக்குகின்றீர்கள். இன்னும் அல்லாஹ்வின் மேல் திடமான நம்பிக்கை கொள்கின்றீர்கள்."*

**அல்குர்ஆன் : 3:110**

**http:/www.facebook.com / vaigaraivelichammgm**

அல்லாஹ்வின் அழகிய திருப்பெயரால்

# தேர்தல்கள் – வெற்றி யாருக்கு?

தேர்தல்கள் முடிந்துவிட்டன. முடிவுகள் அறிவிக்கப்பட்டுவிட்டன. ஒரே விஷயத்தில் மட்டும் முடிவுகள் இன்னும் அறிவிக்கப்படவில்லை. அதுதான் அநாதையாக நிற்கும் அந்த 570 கோடிகள்.

570 கோடிகளைக் கொண்டு வருவதற்கு ஒரு லாரி போதும். இன்னுஞ் சொன்னால் அந்த பெரிய லாரியில் 570 கோடிக்கு மேல் பிடிக்கும். அப்படியானால் நான்கு லாரிகளில் எத்தனை கோடிகள் பிடிக்கும்.

இந்த சாதாரண கணக்கை, பெங்களூர் உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவரைத் தவிர எல்லோரும் புரிந்து கொள்வார்கள் என்றே நம்புகின்றோம்.

இந்த நான்கு லாரி பணத்திற்கு ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா என்ற அரசு வங்கி பொறுப்பேற்றிருப்பதிலிருந்து இது ஆளும் பாரதீய ஜனதா கட்சியின் பணம் என்பது தெளிவாகின்றது.

இந்த பணநாயகத்தில், இந்த நான்கு லாரி பணமும் சில தொகுதிகளையாவது பெற்றுத் தரும். அதன் மூலம் ஆளும் தேசிய கட்சியின் மானம் காப்பாற்றப்படும் என திட்டம் வகுத்திருக்கின்றார்கள். அதனால் மோடியின் அடியாட்களான 'அம்பானிகள்' இந்தப் பணத்தை அனுப்பி இருக்கலாம். மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இந்தப் பணம் நகர்ந்ததால் தான் உடனேயே அரசு வங்கி ஒன்று பொறுப்பேற்றது. மாநில கட்சிகளால் இப்படி அரசு வங்கியை பொறுப்பேற்றிட செய்திட இயலாது. பிடிப்பட்டதுதான் 570 கோடி. பிடித்தவர்களின் கண்களில் மண்ணைத்தூவிக் கொண்டு சேர வேண்டிய இடம் போய்ச் சேர்ந்த பணம் எத்தனை கோடியோ?

காய்ந்த வயிற்றுக்கு கஞ்சி வார்த்திட வழி இன்றி அல்லாடும் மக்கள் அதிகரித்துவரும் நாட்டில் 570 கோடி அநாதையாக நிற்கின்றது.

மாணவர்கள், கடன் வாங்கி படித்துவிட்டு வேலை கிடைக்காததால் அந்தக் கடனை அடைக்க முடியாமல் தவித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

விவசாயிகள் கடன் தொல்லை தாளாமல் தங்களையே மாய்த்துக் கொண்டு நிற்கின்றார்கள். இவர்களின் கடன்களை ரத்துச் செய்வோம் என்று சொன்னாலே அந்தக் கட்சிக்கு வாக்குகள் வந்து குவியும் என்ற நிலை.

இப்படி மக்கள் கடன்களால் நொந்தும், வெந்தும் கொண்டிருக்கும் நிலையில் லாரி லாரியாகக் கோடிகள் கரை சேர முடியாமல் தள்ளாடுகின்றன.

ஆக, இங்கே நடந்து கொண்டிருப்பது பண நாயகம் என்ற நமது முந்தைய தலையங்கத்தில் சுட்டிக் காட்டியது உண்மைபடுத்தப்பட்டிருக்கின்றது. இதில் எஞ்சி நிற்பவை 570 கோடிகள்.

ஜனநாயகம் எப்படி மது, குடி, சூது, விபச்சாரம், ஒருபால்புணர்ச்சி இவற்றையெல்லாம் ஆகுமானவையாக்கும் என்பதை நாம் பல்வேறு தலையங்கங்களிலும் சுட்டிக்காட்டி வருகின்றோம். இன்ஷா அல்லாஹ், இன்னும் தொடர்ந்து ஜனநாயகத்தை தோலுரித்துக் காட்டுவோம்.

இந்த தேர்தலில் போட்டியிட்ட முஸ்லிம்களால் நடத்தப்படும் கட்சிகள் பல தோற்றன என்பதை விட மண்ணைக் கவ்வின என்றே சொல்லவேண்டும். இதற்காக

அவர்கள் அள்ளிக் கொட்டிய பணம் கொஞ்ச நஞ்சமல்ல. ஆனால் அவர்கள் எந்த நிலையிலும் இவ்வளவு வேகமாக இவ்வளவு பெரிய அளவில் பணத்தை இஸ்லாத்தை நிலைநாட்டுவதற்காக செலவிட்டதே இல்லை. குறைந்த பட்சம் இஸ்லாத்தைப் பரப்பிடுவதற்காக செலவிட வேண்டும் என எண்ணியதே இல்லை. அதை செய்திருந்தால் நாட்டு மக்கள் அனைவருக்கும் அனைவரையும் படைத்த இறைவனின் வழிகாட்டுதல்கள் கிடைத்திருக்கும்.

இதில் வெந்த புண்ணிலே வேலைப்பாய்ச்சுவது என்னவெனில் இவர்களில் பலர் இந்த கொள்கையில் தோய்த்தெடுக்கப்பட்டவர்கள்.

சிலர் இஸ்லாத்தை இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்திட வேண்டும். அதுவே, “முஸ்லிம்களின் அடிப்படைக் கடமை” என்ற கொள்கைகளை இந்தியாவில் பரப்பியவர்கள்.

இவர்கள் இனியாவது, அந்த இலட்சியத்தை நோக்கி நகர்வார்களாக! இஸ்லாம் தான் நமது பாதை, அதற்காகவே நமது பயணம் என வாழ்ந்திட தலைப்படுவார்களாக!

அவர்கள் முஸ்லிம்கள் என்ற அடிப்படையில் ஒரு சில கட்சிக்குத் தலைவர்களாக இருந்திட வேண்டியவர்களல்ல. மாறாக மொத்த மனித சமுதயாத்திற்கும் வழிகாட்டிட வேண்டிய உன்னத சமுதாயத்தின் தளகர்த்தர்கள்.

அகிலங்களையெல்லாம் படைத்த அல்லாஹ் கூறுகின்றான்:

“மனிதர்களுக்காக, தோற்றுவிக்கப்பட்ட (சமுதாயத்தில்) சிறந்த சமுதாயமாக நீங்கள் இருக்கின்றீர்கள். (ஏனெனில்) நீங்கள் நல்லதைச் செய்ய ஏவுகின்றீர்கள். தீயதை விட்டும் விலக்குகின்றீர்கள். இன்னும் அல்லாஹ்வின் மேல் திடமான நம்பிக்கை கொள்கின்றீர்கள்.”

**அல்குர்ஆன் : 3:110**

இன்னும் இறைவன் கூறுகின்றான்.

“நாம் உங்களை ஒரு நடுவுநிலையுள்ள சமுதாயமாக ஆக்கியுள்ளோம். (அப்படி ஆக்கியது) நீங்கள் மற்ற மனிதர்களுக்குச் சாட்சியாளர்களாக இருப்பதற்காகவும், ரசூல் உங்கள் மீது சாட்சியாளராக இருப்பதற்காகவுமேயாகும்”

**அல்குர்ஆன் 2:143**

அந்த சிறந்த சமுதாயமாக வாழ்வோம்! இன்ஷா அல்லாஹ்! அதற்காகவே நமது நேரத்தையும், பொருளையும் செலவு செய்வோம்.

இம்மையிலும், மறுமையிலும் வெற்றிகளைத் குவிப்போம்.

**எம்.ஜி.எம்.**

# வைகறை வெளிச்சம்

## வாசகர்கள் அனைவருக்கும் எமது அன்பார்ந்த

## ரமழான் வாழ்த்துக்கள்!

# இந்திய முஸ்லிம்களின் அரசியல்



1800களிலேயே இந்துத்துவ வாதிகள் குறிப்பாக சனாதனவாதிகள் இந்திய அரசியலில் தங்கள் ஆதிக்கத்தை நிலை நாட்டிட வந்துவிட்டார்கள். விடுதலைப் போரின் போது ஆங்கிலேயர்களுடன் அழுத்தமாக நின்றார்கள். ஆனால் விடுதலை கிடைக்கும் என்ற நிலை வந்தபோது, அவர்கள் சுதந்திர இந்தியாவை எப்படி இந்துத்துவாவின் பக்கம், இன்னும் குறிப்பாகச் சொன்னால் சனாதனத்தின் பக்கம் கொண்டு செல்வது என்பதைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள்.

இவர்களின் சனாதன பாசிச சிந்தனைகள் எல்லாம் ஆண்டாண்டு காலமாக இந்த மண்ணில் உருவாக்கப்பட்டு வளர்க்கப்பட்டவை.

ஆங்கிலேயேன் இந்த நாட்டை ஆண்ட நாள்களில் அவனுக்கு எல்லா விதத்திலும் துணை நின்றார்கள் இவர்கள். காரணம் அவர்கள் தங்கள் பாசிச சிந்தனைக்குப் பக்கத்தாளம் போட்டார்கள் என்பதுதான். விடுதலைப் போருக்கு முந்தைய கால கட்டத்தில் இவர்கள் எப்படி நடந்து கொண்டார்கள் என்பதை ஏறெடுத்து பார்த்தால், இவர்களுக்கு இந்த நாட்டின் மீது எந்தக் கவலையுமில்லை, தங்கள் பாசிச சிந்தனையைத் தவிர என்ற உண்மைப் புலப்படும்.

ஆமாம்! விரிந்து,பரந்து விசாலமான சிந்தனையைக் கொண்டவர்கள் என நம்பப்பட்டவர்கள் ஆங்கிலேயோர்கள் என்ற "வெள்ளைக்கார கொக்குகள்" இவர்களின் ஆட்சி மன்றம் (Privy Council) பிரிவி கவுன்சில்.

அந்த நீதிமன்றமே நாடார்களுக்கு கோயில்களில் பிரவேசிக்க உரிமை இல்லை என 1899 இல் தீர்ப்பு வழங்கிற்று. (இதனால் 3000 நாடார் அன்று இஸ்லாத்தை ஏற்று எல்லா உரிமைகளையும் பெற்றார்கள்). (ஆதாரம் : நாடார் பெருங்குடியினர் ஏன் மதம் மாறினார்கள் - ஆசிரியர் : வழக்கறிஞர் லஜபதிராய். எம்.எல்., வைகை சட்ட நிறுவனம், மதுரை)

ஆக ஆங்கிலேயர்கள் இவர்களின் சனாதன கொள்கைக்கு துணை நின்றார்கள் என்பது தெளிவு. இதனால் ஆங்கிலேயர்களை விழுந்து, விழுந்து ஆதரித்தார்கள்.

ஆனால் இந்தியா விடுதலை அடையும் எனத் தெரிந்தவுடன், இந்துத்துவ கொள்கைகளின் பக்கம் நாட்டையும் விடுதலையையும் கொண்டு வந்திட முயற்சிகளை மேற்கொண்டார்கள். இதற்காகவே இவர்கள் காங்கிரஸ் கட்சியில் இருந்தார்கள். காங்கிரஸ் இந்துத்துவா கொள்கைக்கு எதிராகச் செல்லும் எனத் தெரிந்த போதெல்லாம் அவர்கள் காங்கிரஸ் கட்சியின் காலை வாரிட தயங்கியதே இல்லை.



**படத்தில் இருப்பவர்கள் இடமிருந்து வலமாக - மதன் மோகன் மாளவியா, கே.எம். முன்ஷி, செத் கோவிந்த தாஸ், புருஷோத்தம் தாஸ் டான்டன்**

அவர்களின் சிந்தனையை 1917களில் ஒரு முகப்படுத்தி இந்தியாவை இந்து ராஷ்டிரமாக ஆக்கிட அடிப்படைத் திட்டங்களை நிலைப்படுத்தினார்கள். இவற்றையெல்லாம் இவர்களைப் பற்றி ஆய்வுகளை நடத்திய ஆய்வாளர்கள் அக்ஷாயா முகுல், Gita Press and the making of Hindu India என்ற ஆய்வு நூலில் தெளிவு படுத்தி உள்ளார்.

## பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்

காங்கிரஸ் கட்சி தங்கள் இந்துத்துவ கொள்கைக்குத் துணை நிற்கவில்லை என்றால் காங்கிரஸ் கட்சியின் காலை வாரிட இந்துத்துவ வாதிகள் தவறியதே இல்லை.

இந்த உண்மையை உறுத்தி செய்யும் ஒரு நிகழ்வை, வரலாறு இப்படிப் பதிவு செய்கின்றது.

"In 1920 . . . the entire Nationalism debate was getting vitiated by religious schisms, exacerbated by series of communal riots on the issue of cow protection, through out the Hindi heart lent of united provine and Bihar. Congress leaders like Madan Mohan Malaviya, (Who had founded the Hindu Maha Sabha) Purushottam Das Tandon, K.M. Munshi, Seth Govind Das and others who were not enthused with Congress politics lent support to the Gita Press / Kalyan Enterprise. The coming together of Sanathan Dharma leaders like Malaviya, and Arya Samaj in 1923 at Banaras and the decision to make common clause on Cow protection and reconversion to Hinduism (Shudhi) bolstered the conservation Hindu groups further"

**Gita Press and the Making of Hindu India**

அதாவது,

"1920களில் தேசியத்தைப் பற்றிய விவாதங்கள் முற்றாக மத விவாதங்களால் ஆக்கிரமிக்கப்பட்டது. இவற்றை ஊதி வளர்ப்பதைப் போல் பல வகுப்புக் கலவரங்கள் நடைபெற்றன. இந்த வகுப்புக் கலவரங்கள், பசுவை பாதுகாப்பது என்ற போர்வையில் நடைபெற்றது. இவை இந்தியாவின் மத்திய பகுதியிலும் பீகாரிலும் பெருமளவில் நடந்தன. மதன் மோகன் மாளவியா (இவர்தான் இந்து மகாசவையை நிறுவியவர்), புருஷோத்தம் தாஸ் டான்டன், கே.எம். முன்ஷி, செத் கோவிந்த தாஸ் போன்ற காங்கிரஸ் தலைவர்கள் கீதா பிரஸ்/ கல்யாண் (பத்திரிகை) ஆகியவற்றிற்கு பெருமளவில் ஆதரவு தந்தார்கள். காரணம், காங்கிரஸ் கட்சியின் கொள்கைகள், இவர்களுக்கு பிடிக்கவில்லை. சனாதன தர்மத்தைத் தூக்கிப் பிடிக்கும் மாளவியா ஆரிய சமாஜ் போன்றவர்கள் 1923இல் பனாரஸில் ஒன்றாய்ச் சேர்ந்து, இந்துத்துவ பழைமைவாதிகளை மேலும் பலப்படுத்தியது. இவர்கள் பசுவை பாதுகாப்பது, இந்து மதத்திலிருந்து வெளியேறியவர்களை மீண்டும் இந்து மதத்திற்கு கொண்டு வருவது என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு ஒன்றாய் இணைந்தார்கள்."

**Gita Press and the Making of Hindu India pages 3,4**

இந்த வரலாற்றுச் சுவடு ஓர் உண்மையை நமக்கு எடுத்துச் சொல்லும், அந்த உண்மை,

சனாதன தர்மம் என்ற மக்களைப் பிரிக்கும் கொள்கையைக் கொண்டவர்கள் நமது நாட்டை மதத்தின் அடிப்படையில் பிரித்து இந்து நாடாக வைத்துக் கொள்ள வேண்டும் என நஞ்சு எண்ணங்களைக் கொண்டவர்கள் தங்களைக் காங்கிரஸ்காரர்களாகக் காட்டிக் கொண்டார்கள். காங்கிரஸ்-ஐ கொண்டு தங்கள் வகுப்புவாதத்தை வளர்க்க வியலாத போது, அவர்கள் இந்துத்துவாவை பகிரங்கமாக ஆதரித்தார்கள். அல்லாத போது காங்கிரஸ்-இல் இருந்து கொண்டே தங்கள் இந்துத்துவ பாசிசத்தைப் பச்சையாகச் செயல்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

இதனால் தான் பிற்றை நாட்களில் வல்லபாய் பட்டேல் போன்றவர்கள் அத்தனை விஷமங்களை அவிழ்த்துவிட்ட போதும் அப்போதைய பிரதமர் ஜவஹர்லால் நேருவால் எதையும் செய்திட இயலவில்லை.

1949இல் பாபரி மஸ்ஜித்க்குள் சிலையை வைத்த போது அதனை உடனேயே அகற்றும் படி பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் ஆணையிட்டார்கள். அந்த ஆணையை உள்துறை அமைச்சர் பட்டேலும், உத்திரபிரதேசத்தின் அப்போதைய முதல்வர் பி. பாண்டும் கண்டு கொள்ளவே இல்லை. இந்த சனாதன வாதிகளுக்கெதிராக பிரதமர் நேருவால் எதையும் எதுவும் செய்திட இயலவில்லை.

காங்கிரஸ், யார் கையில் சிக்கி இருக்கின்றது என்பதை முஹம்மத் அலீ ஜின்னா அவர்கள் தெளிவாகத் கண்டு கொண்டார்கள் 1920களிலேயே!

## ஜனநாயகமும் - மத சார்பின்மையும்

அதனால் தான் காந்தியும், நேருவும் மதசார்பின்மை ஜனநாயகம் என்ற கோட்பாடுகளோடு நாங்கள் இந்தியாவைக் கட்டமைக்கப் போகின்றோம் எனக் கூறியபோது, முஹம்மத் அலீ ஜின்னா அவர்கள் சிறுபான்மையினர், அமுக்கப்பட்ட மக்கள் இவர்களுக்கான உரிமைகளை முன் கூட்டியே வரையறுத்து விடுவோம். அதனை



அரசியல் சாசனத்தில் எழுதி விடுவோம். இல்லையேல் இந்தியாவில் சிறுபான்மை யினருக்கும், அமுக்கப்பட்ட மக்களுக்கும் எதுவும் கிடைக்காது என்றார்.

ஏனெனில், நீங்கள் கொண்டு வரும் ஜனநாயகத்தில்,

When you get three votes, I will get one. One vote against three votes will get nothing.

அதாவது,

உங்கள் ஜனநாயகத்தில் உங்களுக்கு மூன்று வோட்டு என்றால், எங்களுக்கு ஒரு வோட்டுதான் என்றார். இந்த ஒரு வோட்டு அந்த மூன்று வோட்டுகளுக்கு எதிராக எதுவும் செய்திடாது.

## சாதிக் கூடாது

அதே போல், நீங்கள் மதசார்பின்மை Secularism என்கின்றீர்கள். இது முஸ்லிம்கள் தங்கள் மத அடையாளத்தோடு வந்தால், அவர்களை நீங்கள் இன்னும் மதசார்பற்றவர் களாக ஆகிட வில்லை என்றும் அவர்களை குறை கூறவும், அவர்களை தங்கள்

மதத்திலிருந்து வெளியே கொணடு வந்திடவும் பயன்படும்.

அதே நேரத்தில் இந்துக்கள் தங்கள் மத அடையாளங்களைப் பேணுவதை தேசிய அடையாளம் என்றும் கூறுவார்கள் என்றார்.

அதுதான் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மூன்று ஓட்டுக்குச் சொந்தமானவர்கள் பாபரி மஸ்ஜித் இருந்த இடத்தில் கோயிலைக் கட்டிட வேண்டும் என சட்டம் கொண்டு வருவோம் என தங்கள் தேர்தல் அறிக்கையிலே குறிப்பிடுகின்றார்கள்.

மத சார்பற்ற நாட்டின் தேர்தல் கமிஷன் அதற்கெதிராகக் கனைத்தும் கூட காட்டிடவில்லை.

இன்று இந்த அப்பட்டமான அநீதியை தங்கள் பெரும்பான்மை பலத்தைப் பயன்படுத்தி செயல்படுத்தி இருக்கின்றார்கள்.

மதசார்பின்மையையும், ஜனநாயகத்தை யும் நம்பி நின்றவர்கள் இன்று என்னென்ன பாடுபடுகின்றார்கள் என்பதை நாமறிவோம். முஸ்லிம்களுக்கு அரசியல் பலம் என்றொன்றில்லை. அப்படி இருந்த நிலையிலும் அஃது சாதித்தது எதுவுமில்லை என்பதற்கு குஜராத், முசபர் நகர் போன்ற இடங்களில் தங்கள் வீடுகளையும், நிலபுலன்களையும் இழந்து ஓடோடி வந்த மக்கள் நவீன எடுத்துக் காட்டுக்கள். இந்த மக்கள் அகதிகள் முகாமில் கூட வாழ்ந்திட இயலாத நிலைக்கு தள்ளப்பட்டார்கள். வஃக்ப்போர்டுக்குச் சொந்தமான இடத்தில் வாழ்ந்த முஸ்லிம்கள் மீது FIR முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்து வழக்குப் போட்டார்கள். முஸ்லிம்களின் வாக்குகளைப் பெருவாரியாகப் பெற்று ஆட்சியைப் பிடித்த முலாயம் சிங் யாதவ், அதில் இப்படி அல்லல்பட்ட முஸ்லிம்கள் தங்கள் சொந்த ஊருக்குச் சென்றிட வேண்டும் என்றால் அவர்களின் கடவுள்களை ஏற்றுக் கொள்ள வேண்டும். தாடி வைத்திடக் கூடாது, தொப்பி அணிந்திடக்கூடாது என்றெல்லாம் நிபந்தனை விதிக்கப்பட்டார்கள்.

இது எந்த ஆட்சியில் என்றால் முலாயம் சிங் யாதவின் ஆட்சியில்தான். இந்த முலாயம் சிங் -ஐ ஆட்சியில் அமர்த்திடத்தான் முஸ்லிம்கள் அல்லும் பகலும் உழைத்தார்கள்.

முஸ்லிம்களெல்லாம் அகதிகள் முகாம்களை நோக்கி விரட்டப்பட்ட போது உத்திரப்பிரதேச சட்டமன்ற தொகுதியில் 69 முஸ்லிம் சட்டமன்ற உறுப்பினர்கள் இருந்தார்கள். மூன்று முஸ்லிம் அமைச்சர்கள் இருந்தார்கள்.

அன்றைக்கு நெல்லி படுகொலைகள் தொடங்கி இன்றளவும், அரசியலில் ஈடுபட்ட முஸ்லிம்களால் விளைந்த பயன் எதுவுமில்லை. பாபரி மஸ்ஜித் -ஐ இடிக்க பாதுகாப்பாக இருந்த நரசிம்ம ராவின் அமைச்சரவையில் மூன்று முஸ்லிம் அமைச்சர்கள் இருந்தார்கள். 38 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந் தார்கள். எதுவும் செய்திட இயலவில்லை.

இதை அன்றே கண்டு கொண்டார்கள் முஹம்மத் அலீ ஜின்னா அவர்கள். அதனால் தான் அனைத்து அரசு அங்கங்களிலும், அமைப்புகளிலும் ஒதுக்கீடு வேண்டும், அதுவும் அரசியல் நிர்ணயச் சட்டத்தில் அது எழுதப்பட வேண்டும் என்றார்.

ஆனால் ஆதி முதலே இரண்டு நாடுகள் என்ற கோட்பாட்டைப் பேசி வந்த சனாதனவாதிகள் இந்துத்துவ தீவிரவாதிகள் நாட்டைத் துண்டாடி பழியை முஸ்லிம்கள் மேல் போட்டு விட்டு இந்தியாவை கையகப்படுத்திட தொடங்கி விட்டார்கள். அதன் பிறகு நாட்டில், அவர்களின் ஆட்டம் கொண்டாட்டம் என்றாகிவிட்டது. (இது போன்ற பல உண்மைகளை Muslims in India என்ற A.G. Noorani அவர்களின் ஆவணத் தொகுப்பில் காணலாம்.)

அன்று காங்கிரஸ் கட்சி வழியாகவும் பின்னர் அரசியலில் நேரடியாகவும் களம் கண்ட இவர்கள் முஸ்லிம்களுக்கு அதாவது இந்த நாட்டின் மிகப்பெரிய சிறுபான்மை யினருக்கு அத்தனை துரோகங்களையும் உரிமை மறுப்புகளையும் ஒன்றாய் செய்து கொண்டிருக்கின்றார்கள்.

இந்த பாதகங்களுக்கெதிராக அரசியல் களங்கான துடிப்பவர்கள் அந்த மூன்று ஒட்டுக்குச் சொந்தமானவர்களிடம் சீட்டுக்காக யாசகம் கேட்டு நிற்க வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டுள்ளார்கள்.

முஸ்லிம்கள் அதிகமாக வாழும் பகுதிகளில் கூட அவர்கள் சக்தி பெற்றிடக் கூடாது என்பதைக் கவனமாகக் கண்காணித்து வருகின்றார்கள்.

எங்கெல்லாம், முஸ்லிம்கள் தங்கள் வாக்குகளினாலேயே வெற்றிப் பெற்று விடுவார்கள் என்ற நிலை இருக்கின்றதோ அங்கெல்லாம் தொகுதிகள் மறு சீரமைப்பு (delimitation) என்றொன்றைக் கொண்டு வந்தார்கள். அங்கும் அவர்களைச் சிறு பான்மையினராக ஆக்கிக் காட்டினார்கள். அதற்கு மதச்சார்பின்மையை அடிப் படையாக்கிக் கொண்டு தான் இப்படிச் செய்கின்றோம் என்றார்கள்.

## உள்ளதும் போச்சடா. . . ?

இன்றைக்கு நம் நாட்டில் நடப்பி லிருக்கும் அரசியல் நிர்ணயச் சட்டத்தில் பல உரிமைகள் வாக்களிக்கப்பட்டிருக்கின்றன. அந்த உரிமைகளைப் பிடுங்கி விட வேண்டும் என சங்கப்பரிவாரத்தை அதாவது இந்துத்துவ தீவிரவாதிகளின் 47 அமைப்புகளும் நாட்டில் போராடி வருகின்றன.

இன்னும் சொன்னால் இதற்காக சதித்திட்டங்களைத் தீட்டி செயல்பட்டு வருகின்றார்கள்.

ஆனால் அரசியல் நிர்ணயச் சட்டத்தில் வாக்களிக்கப்பட்ட உரிமைகள் மீது கை வைத்தால் முஸ்லிம்களும் இதர சிறுபான்மை யினரும் நீதிமன்றங்களை அணுகலாம். நிச்சயமாக அந்த உரிமைகள் காப்பாற்றப் படலாம் என நினைத்தார்கள்.

நமது கணக்கின்படி ஆர்ப்பாட்டங் களை விட இந்த வழக்குகள் வென்று தந்த உரிமைகள் அதிகம். பல மாநிலங்களில் இட ஒதுக்கீடுகளையே இவற்றின் மூலம் பெற்றிருக்கின்றோம்.

இந்த வகையில் பல முறை நீதிமன்றங் களை அணுகியும் இருக்கின்றார்கள். சில பல முறை வென்றுமிருக்கின்றார்கள். ஆனால் கால போக்கில் நீதிமன்றங்களும் இந்துத்துவ தீர்ப்புகளை வழங்கிட தலைப்பட்டன. அல்லது இந்துத்துவாதிகள் நீதிமன்றங்களை அப்பிக் கொண்டார்கள்.

மோடி ஆட்சிக்கு வந்தபின் நீதிமன்றங்கள் சில மோடிப் பேரவையாக ஆகிவிட்டன. உள்ளதும் போச்சுடா நொள்ளக் கண்ணா என்பதே இப்போதைய நிலை.

## என்னதான் தீர்வு?

ஆயிரம் அரசியல் ஓட்டங்களிலும் அயராத உழைப்பைக் கேட்கும் அலுவல்களுக் கிடையேயும் முஸ்லிம்கள் ஒன்றை நின்று கவனிக்க வேண்டும்.

அது அவர்கள் ஓர் இலட்சிய சமுதாயம் என்ற உண்மையை உணர்ந்திட வேண்டும்.

அவர்களுக்கு அல்லாஹ் ஓர் இலட்சியத்தை அமைத்துத் தந்திருக்கின்றான். அது அவர்கள்தாம் மனிதர்கள் அனைவருக் காகவும் அனுப்பப்பட்ட மார்க்கத்திற்கு சொந்தக்காரர்கள்.

மனிதனைப் படைத்த இறைவன் அவர்கள் எந்த கொள்கையையும் பின்பற்றி எப்படி வேண்டுமானாலும் போகட்டும் என விட்டு விடவில்லை.

அவர்கள் இந்த உலகில் எப்படி வாழ்ந்திட வேண்டும் என்பதற்கு நேரிய சீரிய வழிகாட்டுதல்களை வகுத்து வழங்கியுள்ளான். அதுவே அல் குர் ஆன் என்ற அறுதிவேதம். அவர்கள் இந்த வேதத்திற்கும் இந்த வழிகாட்டுதலின் சொந்தக்காரர்கள். அவர்கள் முஸ்லிம்கள் இந்த வாழ்க்கை வழிகாட்டுதல் களை தங்களோடு வாழ்ந்திடும் சமுதாயங்கள் அனைத்திற்கும் எடுத்துச் சொல்லிட வேண்டிய இலட்சியத்தை உண்மையைச் சொன்னால் கடமையை சுமப்பவர்கள்.

இதில் அவர்கள் புரிந்து கொள்ள வேண்டிய பிரிதொரு பிரிக்க முடியாத

உண்மை என்னவெனில் இன்றைக்கு இந்தியா எதிர் கொள்ளும் எல்லாப் பிரச்னைகளுக்கும் தீர்வு இந்த இறை வழிகாட்டுதல்களில் இருக்கின்றன.

இந்தியாவின் மிகப் பெரிய பிரச்னை ஜாதியும், அதன் பெயரால் இழைக்கப்படும் அநீதிகளும்.

இந்தியா ஆங்கிலேயர்களிடமிருந்து பெற்ற விடுதலை ஆதிக்க ஜாதிகளுக்கே கிடைத்தது. நிச்சயமாக அது ஒரு பெருங்கூட்டம். இந்திய பூர்வ குடிகளுக்குக் கிடைக்கவில்லை. அதனால் ஆண்டாண்டு காலமாக விடுதலைப்போர் இங்கே நடந்து கொண்டிருக்கின்றது.

ஆனால் இஸ்லாத்தில் அவர்களுக்கான விடுதலை இருக்கின்றது. இதனை ஆத்திகர்களும், நாத்திகர்களும் ஒன்று போலவே ஏற்றுக் கொள்கின்றார்கள்.

நாத்திகத்தை தமிழகத்திலும் அகில இந்திய அளவிலும் பரப்பியவர் தந்தை பெரியார்தான். அவர்கள் தங்கள் வாழ்நாளில் 300 முன்னூறு முறை இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளுங்கள் இன இழிவு, பிறவி இழிவு இவற்றிலிருந்து விடுபடுங்கள் எனக் கூறியுள்ளார். அடுத்தாற்போல் லஞ்ச லாவண்யம் ஊழல், ஊதாரித்தனம் இவை போக்கப்பட வேண்டும் என்றால் இறை அஞ்சி வாழுகின்ற ஒருவரிடம், ஆட்சியும் அதிகாரமும் ஒப்படைக்கப்பட வேண்டும். இதற்கான அழுத்தமான கொள்கையும் வழிகாட்டுதலும் இஸ்லாத்திடமே உண்டு.

இறையச்சத்தின் வழி நின்று இந்தத் தீமைகளையெல்லாம் ஒழித்தப் பென்னம், பெரும் வரலாறும் இஸ்லாத்திற்கே உண்டு.

இதில் வரையிட்டுக்காட்டப்படும் வரலாற்று புருஷராய் திகழ்ந்தவர்கள் இறைவனின் இறுதி தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் கலீபா அபூபக்கர் (ரழி), உமர் (ரழி) என அந்தப் பட்டியல் நீளுகின்றது. இதில் கலீபா உமர் (ரழி) அவர்களின் வாழ்க்கையைப் படித்த இந்திய விடுதலை போரை ஜனரஞ்சகப்படுத்திய காந்தி அவர்கள், இந்த கலீபா உமர் (ரழி) அவர்களின் ஆட்சி இங்கே வரவேண்டும் என்றார்கள்.

இது போன்ற ஆட்சியர்கள், கோடிக்கணக்கான பணத்தை அள்ளிக் கொட்டி மக்களிடம் ஓட்டு பிச்சைக் கேட்டு ஆட்சிக்கு வந்தவர்கள் அல்ல என்பது குறிப்பிடத்தக்கது. அவர்கள் தேர்தல் களத்தில் முதலீடு செய்யாததால் பதவியில் அமர்ந்து கொண்டு இலாபங்களை அறுவடை செய்ய வேண்டும் என எதிர்பார்ப்பதில்லை. அத்தோடு அவர்கள் தங்களுடைய செயல்களுக்கெல்லாம் இறைவனிடம் கண்டிப்பாகப் பதில் சொல்லியாக வேண்டும் என்ற அச்சத்தோடு ஆட்சியில் நீதி செலுத்தினார்கள். மக்களை நிம்மதியாக வைத்திருந்தார்கள்.

அதே போல் மது, விபச்சாரம், போன்ற மனித இனத்திற்கு எதிரான குற்றங்கள் அத்தனையிலும் தெளிவான வழிகாட்டுதலும், செயல்முறை படுத்திய வரலாறும், இஸ்லாத்திற்கு மட்டுமே சொந்தம். இந்த இஸ்லாத்திற்குச் சொந்தக்காரர்கள் முஸ்லிம்கள். அவர்கள் இந்த இஸ்லாத்தை எடுத்துச் சொல்லி அதனை மக்களின் மத்தியில், நிலைநாட்டிட வேண்டிய கடமையும் கட்டுபாடும் உடையவர்கள்.

வீணாக நேரம், பணம், உழைப்பு இவற்றை அள்ளிக்கொட்டிட வேண்டிய சமுதாயம் இல்லை அவர்கள். அந்த இலட்சியத்தை நோக்கி திரும்புவார்களாக!

**எம்.ஜி.எம்.**


**முஸ்லிம் அல்லாதவர்கள் திருகுர்ஆனை இலவசமாக பெற வேண்டுமா? கீழே உள்ள தொலைபேசியை தொடர்பு கொள்ளவும்**

**8148129887**

# கடந்த 16 ஆண்டுகளாக 'IB' என்ற மத்திய உளவுத்துறையும், இந்துத்துவ தீவிரவாதிகளுந்தான் குண்டு வெடிப்புகளை நடத்தி வருகின்றார்கள்!

## மாலேகானில் முன்னாள் காவல்துறை அதிகாரி எஸ்.எம். முஷ்ரிஃப் உரை!



இந்தியாவில் வாழ்ந்து கொண்டிருக்கும் முஸ்லிம்களைப் படிப்படியாக அழித்து விடுகின்றார்கள் இந்துத்துவவாதிகள்.

இதற்கு காங்கிரஸ் கட்சியில் ஊடுருவி நிற்கும் இந்துத்துவவாதிகள் முழு ஒத்துழைப்பையும் கொடுத்து விடுகின்றார்கள்.

இதற்கு மொத்தத் திட்டத்தையும் வகுத்துக் தந்து, அதனை செயல்படுத்திக் கொண்டிருப்பவர்கள் 'IB' என்ற மத்திய உளவுத்துறை.

இவற்றை ஆதாரபூர்வமான ஆவண மாகத் தொகுத்து உச்ச நீதிமன்றத்தில் வழக்காகத் தொடர்ந்தவர் மராட்டிய காவல்துறையின் முன்னாள் ஐ.ஜி. (Inspector General of Police - IGP) அதிகாரி எஸ்.எம். முஷ்ரிஃப்.

எஸ்.எம். முஷ்ரிஃப் அவர்கள் இந்தக் களத்தில் அதாவது நீதிக்காகப் போராடும் இந்தக் களத்தில் இறங்கிட முக்கிய காரணமாக அமைந்தது. அவரோடு காவல் துறையில் பணி புரிந்த நேர்மையான அதிகாரி ஹேமந்த் கர்கரேயின் கொலை.

ஹேமந்த் கர்கரே கொலை செய்யப்பட்டதற்கான காரணம், அவர் மாலேகான் என்ற இடத்தில் நடந்த குண்டு வெடிப்புகளுக்கான காரணத்தையும் குண்டு வெடிப்புகளை நடத்தியவர்களையும் கண்டு பிடித்ததுதான்.

மாலேகானில் நடந்தப்பட்ட குண்டு வெடிப்புகளுக்கான காரணம், இந்தியாவை இந்து ராஷ்டிராவாக ஆக்கிட வேண்டும் என்பதே. இந்தியாவை இந்து ராஷ்டிராவாக மாற்றிட நாடெங்கும் குண்டு வெடிப்புகள் நடத்தப்பட்டன. அதன் ஒரு பகுதிதான் மாலேகானில் நடத்தப்பட்ட 2006, மற்றும் 2008 குண்டு வெடிப்புகள்.

மாலேகானில் குண்டு வெடிப்புகளை நடத்தியவர்கள், இந்தியாவை இந்து ராஷ்டிராவாக மாற்றிடத் துடித்த இந்துத்துவாவாதிகள். குறிப்பாக அபிநவ் பாரத் என்ற இந்துத்துவ அதிதீவிரவாதிகள்.

இந்த அமைப்பின் செயலாளர் கலோனல் பிரசாந்த் புரோகித். இவர் நமது

இராணுவத்திலிருந்து RDX வகை வெடி பொருள்களைத் திருடி நாடெங்கும் குண்டு வெடிப்புகளை நடத்தியவர்.

இந்த உண்மைகளையெல்லாம் கண்டு பிடித்தவர் மராட்டிய காவல் துறை அதிகாரி குறிப்பாக மராட்டிய தீவிரவாதத் தடுப்புப்படையின் தலைவர் ஹேமந்த் கர்கரே ஆவார். நம் நாட்டை இந்து ராஷ்டிராவாக ஆக்கிட பின்னப்பட்ட முழு சதியையும் கண்டு பிடித்தார். அத்தோடு அந்தச் சதியில் ஈடுபட்ட அத்தனை அமைப்புகளையும், அரசியல்வாதிகளையும், மத்திய உளவுத் துறையினரையும் கண்டுபிடித்தார். அத்தனை பேரையும் கைது செய்ய சில மணி நேரங்களே இருந்த நிலையில் கர்கரே கொலை செய்யப்பட்டார்.

ஆக, நாட்டில் மிகப்பெரிய வரலாற்று நிகழ்வுக்கு மையமாக அமைந்தது மராட்டிய மாநிலத்தின் முஸ்லிம்கள் அதிகமாக வாழுமிடமாகிய மாலேகோன். இந்த மாலேகானை மையமாகக் கொண்டு கொலை செய்யப்பட்ட ஹேமந்த் கர்கரேக்கு நீதி தேடிடும் முயற்சியில் தன்னை ஈடுபடுத்தி வருபவர் தன் இன்னுயிரையும் பணயம் வைத்துப் போராடி வருபவர் எஸ்.எம். முஷ்ரிஃப் அவர்கள்.

அவர்கள் மே 6ம் நாள் மாலேகான் சென்றிருந்தார். அங்கு முஸ்லிம்களும் சகோதர சமுதாயத்தவர்களும் பெருவாரி யாகக் கலந்து கொண்ட பொதுக் கூட்டம் ஒன்றில் உரை நிகழ்த்தினார்கள். இந்தக் கூட்டத்திற்கு மாலேகானை சார்ந்த குல் ஜமாஅத் தன்சீம் என்ற அமைப்பு ஏற்பாடு செய்திருந்தது. கூட்டத்தில் எஸ்.எம். முஷ்ரிஃப் அவர்கள் மத்திய உளவுத் துறையும், மராட்டிய மாநிலத்தின் தீவிரவாதத் தடுப்புப்படையும் இந்துத்துவ தீவிரவாத அமைப்புகளுடன் இணைந்து நாட்டில் தீவிரவாத தாக்குதல் களை நடத்திக் கொண்டிருக்கின்றன. இது 2001 ஆம் ஆண்டு முதலே நடந்து வருகின்றது.

இந்த நாட்டில் இந்துத்துவ தீவிரவாதிகள் IB என்ற மத்திய உளவுத்துறை இவையெல்லாம் இணைந்து இதுவரை




குறையாமல் 25 குண்டு வெடிப்புகளை நடத்தியுள்ளன. இவற்றில் பல நேரங்களில் இந்துத்துவ தீவிரவாதிகள் சிக்கிக் கொள்வார்கள் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. அந்நிலையில் மத்திய உளவுத்துறை தலையிட்டு உண்மையான குற்றவாளிகளை அதாவது, இந்துத்துவ தீவிரவாதிகளை காப்பாற்றி விடுவார்கள். இந்த முயற்சியில் மத்திய உளவுத்துறையினர் வழக்கின் போக்கையே மாற்றிவிடுவார்கள். இறுதியில் அப்பாவி முஸ்லிம்கள் சிலரைத் கைது செய்து வழக்கை முடித்துவிடுவார்கள்.

2001 ஆம் ஆண்டு முதல் 2008 வரை நடந்த குண்டு வெடிப்புகள் அத்தனையும் நன்றாகத் திட்டமிட்டு அரகேற்றப்பட்ட சதிகளே!

இந்தக் குண்டு வெடிப்புகளை மத்திய உளவுத்துறையும், தீவிரவாத தடுப்புப் படையினரும் நன்றாக அறிவார்கள் என்பது மட்டுமல்ல. அவர்களும் இணைந்துதான் இந்தக் குண்டுவெடிப்புகளை நிறைவேற்றி னார்கள்.

அண்மையில் 2006 மாலேகான் குண்டு வெடிப்பில் கைது செய்யப்பட்ட 9 முஸ்லிம் களும் விடுதலை செய்யப்பட்டார்கள். அந்த வழககில் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிகை ஒரு பெரும் பொய் மூட்டை! இதை நான் முதல் நாள் முதற்கொண்டே அறிவேன்.

இராணுவ அதிகாரி கலோனல் புரோகித் தான் நாட்டில் பல குண்டு வெடிப்புகளை நடத்தியவர். இதற்காக இவர் RDX- Variety என்ற உயர்தர வெடிப்பொருள்களை இராணுவத்தி லிருந்து கடத்தியவர். இவரிடம் இந்த RDX ரக வெடி பொருள்கள் எப்போதும் அதிக அளவில் கையிருப்பாக இருந்து கொண்டே இருக்கும்.

ஆனால், இவரை அழைத்து தீவிரவாதிகளைக் கண்டுபிடிப்பது எப்படி? என்று பயிற்சி கொடுப்பார்கள் காவல் துறையினர். குறிப்பாக, மராட்டிய மாநில காவல்துறையின் தீவிரவாத தடுப்புப் பிரிவினர் தலைவர் இரகுவன்ஷி இந்த மராட்டிய மாநில காவல்துறையின் தீவிரவாதத் தடுப்புப் படையினருக்கு இந்த புரோகித் - ஐ கொண்டு பயிற்சி கொடுத்தார். ஆனால் புரோகித் தான் உண்மையான தீவிரவாதி. 2006 ஆம் ஆண்டு மராட்டிய மாநிலம் அவ்ரங்காபாத் எனுமிடத்தில் பல வாகனங்களில் ஆயுதங்கள் கடத்தப்பட்டன. இதை கடத்தியவரே கலோனல் பிராந்த் புரோகித் தான். ஆனால் இந்த ஆயுத கடத்தலை ஆராய்ச்சிச் செய்திட புரோகித்தையே அழைத்தார்கள் மராட்டிய மாநில தீவிரவாதத் தடுப்புப் படையினர்.

ஏனெனில் மராட்டிய மாநில தீவிரவாதத் தடுப்புப் படையின் தலைவரான இரகுவன்ஷி இந்தக் கலோனல் பிரசாந்த் புரோகித் இன் நெருங்கிய நண்பர். இந்த இரகுவன்ஷியும் கலோனல் பிரசாந்த் புரோகித்தும் இந்தியாவை இந்து ராஷ்டிரா என அறிவிக்க வேண்டும் என்பதில் குறியாக இருந்தவர்கள். இவர்கள் இருவரும் அதாவது கலோனல் பிரசாந்த் புரோகித்தும், இரகுவன்ஷியும் தான் அந்த ஆயுத கடத்தலை செய்தவர்கள். கடத்தியவர்களில் ஒருவரே அந்த வழக்கை விசாரித்தார்.

உண்மையில், அவ்ரங்காபாத் ஆயுதக் கடத்தல் வழக்கு கலோனல் பிரசாந்த் புரோகித் அல்லாமல் வேறுயாராவது அந்த வழக்கை விசாரித்திருந்தால், நிச்சயமாக புரோஹித் சிக்கி இருப்பார்.




2006இல் மாலேகானில் குண்டுகளை வைத்த வழக்கில் 9 முஸ்லிம்களை அப்பாவி களை விடுதலை செய்திருக்கின்றார்கள். ஆனால் அன்றே வேண்டு மென்றே அப்பாவிகளைச் சிக்க வைத்தார்கள். பொய் வழக்குகளைப் புனைந்தவர்கள் உண்மையான குற்றவாளிகளை தப்பித்திட வழி கொடுத்த வர்கள் கைது செய்யப்பட வேண்டும். தண்டிக்கப்பட வேண்டும்.

தங்களுடைய வாழ்வின் பொன்னான நாட்களை சிறையிலே கழித்த முஸ்லிம் இளைஞர்களிடம் அரசு மன்னிப்புக் கேட்க வேண்டும். அவர்களிடம் மட்டுமல்ல, மொத்த முஸ்லிம் சமுதாயத்திடமும் மன்னிப்புக் கேட்க வேண்டும்.

அத்தோடு அரசாங்கம் அந்த முஸ்லிம்களுக்கு இழப்பீடுகளும் வழங்கிட வேண்டும்.

சட்டமன்ற உறுப்பினர் அபூ அசிம் அஸ்மி அவர்கள் தாம் குல் ஜமாஅத் தன்சீம்க்கு அதிக அளவில் நீதிக்கான இந்தப் போராட்டத்தில் உதவி செய்தார்கள்.

இந்த தன்சீம் தான் இந்த அப்பாவி முஸ்லிம்கள் விடுதலையடைவதற்குக் காரண மாக அமைந்தது.

எஸ்.எம். முஷ்ரிஃப் அவர்கள் உரையாற்றிய அதே நிகழ்ச்சியில் இந்த சட்டமன்ற உறுப்பினர் உரை நிகழ்த்தினார் கள். தனது உரையில்,

“இந்த அப்பாவி முஸ்லிம்கள் மீது பொய் வழக்கை ஜோடித்தவர்கள், அவர்களுக் கெதிராக பொய் சாட்சியங்களைத் தயாரித்த

வர்கள், இவர்களெல்லாம் தண்டிக்கப்படாத வரை நீதி நிலைக்காது" எனக் குறிப்பிட்டார்.

அத்தோடு, "நான் இந்தியாவின் முதன் நீதிபதி அவர்களையும், நமது குடியரசு தலைவரையும் மெத்தப் பணிவோடு கேட்டுக் கொள்கின்றேன். நீங்கள் இந்த அதிகாரிகள் மீது தன்னிச்சையாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அதன் வழி இந்த அப்பாவி முஸ்லிம்களின் வாழ்க்கையை பாழாக்கியவர்கள் தண்டிக்கப்படுகின்றார்கள் என்பதை உறுதி செய்திட வேண்டும்" என்று குடியரசு தலைவரைக் கேட்டுக் கொண்டார்.

ஆனால் இந்த வழக்கில் தீர்ப்பு வழங்கிய நீதிபதி வி.வி. பாட்டீல் அவர்கள் இந்த அநியாயத்தைச் செய்த காவல்துறையினர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டாம் எனத் தீர்ப்பிலேயே கூறிவிட்டார்கள்.

இதனை நாம வைகறை வெளிச்சம் மே இதழில் குறிப்பிட்டிருந்தோம். நமது மே 2016 இதழின் அட்டைப் பட கட்டுரையே இந்த 2006, மாலோகான் குண்டு வெடிப்பு அதில் 9 அப்பாவி முஸ்லிம்கள் விடுதலை அடைந்த விவகாரம் இவைதான். வாசகர்கள் அதையும் படிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றோம்.

## தீர்வு

இந்த வழக்கில் அப்பாவி முஸ்லிம்களைப் பொய் வழக்கில் சிக்க வைத்த காவல் துறை அதிகாரிகள் தண்டிக்கப்பட வேண்டும். சாதாரணமாகவே இது போன்ற வழக்குகளில் பொய்யைப் புனையும் காவல் துறையினர், உண்மையைச் சொன்னால், முஸ்லிம்களின் வாழ்க்கையை பாழாக்கியவர்கள் தண்டிக்கப்பட்டதாக வரலாறு இல்லை. இந்த வழக்கில் நீதிபதி காவல்துறையினர் மீது நடவடிக்கை வேண்டாம் எனக் கூறியுள்ளார். இதனால் கடுமையான நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டால் மட்டுமே இதில் வெற்றி பெற முடியும்., ஆனால் இதை பாதிக்கப்பட்டவர்கள் செய்ய மாட்டார்கள். காரணம், அரசு வேண்டுமென்றே மேல் முறையீட்டுக்குச் சென்று அவர்களின் வாழ்க்கையைக் கேள்விக்



குறியாக்கும். அதையும் தாண்டி அவர்கள் இதைச் செய்திட முன் வந்திட வேண்டும்.

Compensation இழப்பீடு விவகாரத்தில் அவர்கள் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதே தான் நமது நாடாளுமன்ற தாக்குதலிலும் நடந்தது.

நாடாளுமன்ற தாக்குதலில் மூளை எனப் பிரச்சாரம் செய்யப்பட்டவர். எஸ்.ஏ.ஆர். ஜீலானி என்பவர். அவருடைய விவகாரத்திலும் இதுவே நடந்தது. இதனைச் சற்று விரிவாகவே இங்கே தருகின்றோம்.

## கீழ் நீதிமன்றத்தின் தில்லுமுல்லுகள்

எஸ்.ஏ.ஆர். ஜீலானி என்ற டெல்லி பேராசிரியர் நமது கஷ்மீர் மாநிலத்தைச் சார்ந்தவர்.

டெல்லிப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக பணியாற்றி வருகின்றார். கஷ்மீரில் பிறந்து வளர்ந்தவர்.

இரண்டு குழந்தைகளுக்குத் தந்தை, இவருடைய நண்பர்கள் வட்டம் மிகவும் விரிவானது. அத்தனை பேரும் மனித உரிமை ஆர்வலர்கள்.

ஆராய்ச்சிப் பட்டத்திற்காக P.hd. க்காக தன்னை தயார் செய்து கொண்டிருந்தார். இந்நிலையில்தான் அந்தப் பேரிடி அவரைத் தாக்கிற்று.

அது நாடாளுமன்றத்தை 2001 டிசம்பர் 13 ஆம் நாள் தாக்குதலை நடத்திட

வந்தவர்களின் மூளையாக அவர் செயல்பட்டார் என்பதே அது அந்தக் குற்றச்சாட்டு.

கைது செய்யப்பட்ட அவர் சித்திரவதைகளுக்குப் பின்னால் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டார்.

அவருக்கு எதிராக எந்த சாட்சியமு மில்லை.

ஆனால் தூக்குத் தண்டனை வழங்கினார்கள். தூக்குத் தண்டனையை எதிர்த்து உயர் நீதிமன்றம் சென்றார்.

உயர் நீதிமன்றத்தில் அவருக்காக வாதாட பல வழக்கறிஞர்கள் முன் வந்தார்கள். அவர்களில் மிகவும் முக்கியமானவர்கள் மூத்த வழக்கறிஞர் இராம்ஜெத்மலானியும் மூத்த வழக்கறிஞர் ஷாந்தி பூஷன் அவர்களும்.

இவர்கள் இரண்டு பேருமே நமது நாட்டின் முன்னாள் சட்ட அமைச்சர்கள் என்பதை அனைவரும் அறிவார்கள்.

இவர்கள் சாதாரணமாக இது போன்ற வழக்குகளில் வாதாடிட மணி நேரத்திற்கு இத்தனை லட்சம் என பணம் வாங்குபவர்கள்.

ஆனால் எஸ்.ஏ.ஆர். ஜீலானி அவர்களுக்காக வாதாடிட சல்லிக்காசு கூட பெறாமல் வாதாடினார்கள்.

ஷாந்தி பூஷன் அவர்கள் எந்த ஆதாரமுமில்லாமல் இந்த வழக்கில் கண்ணை மூடிக் கொண்டு மரண தண்டனையை வழங்கி இருக்கின்றார்கள் என்பதை தான் மேற் கொண்ட ஆய்வில் அறிந்தார் மலைத்து நின்றார். நீதித்துறை இத்துணை தரந்தாழ்ந்து போகுமானால் இந்திய திருநாட்டிலுள்ள சிறுபான்மையினர் எப்படி நீதியைப் பெறுவார்கள் என அங்கலாயித்தார்.

தனது ஆதங்கத்தை அப்படியே உயர் நீதி மன்றத்தில் தனது வாதத்தின் போது கொட்டினார் இப்படி,

“இது சாட்சியங்கள் அற்ற ஒரு வழக்கு. இது முழுக்க முழுக்க ஜோடிக்கப்பட்ட வழக்கு என்பதே உண்மை என்பதை இரண்டு முன்னாள் சட்ட அமைச்சர்கள் தெளிவு படுத்தினார்கள்.

அதனால் நாடாளுமன்ற தாக்குதலின் முக்கிய குற்றவாளி எனக் குற்றம் சாட்டப் பெற்ற எஸ்.ஏ.ஆர். ஜீலானியை உயர்நீதிமன்றம் குற்றச் சாட்டிலிருந்து விடுவித்தது. வழக்குகளிலிருந்து முற்றாக விடுவித்தது.

ஆனால் வழக்கில் ஒருவரையாவது தூக்கில் போட்டால்தான் நாட்டு மக்களின் கூட்டு மனசாட்சி நிறைவேறும் என்று ஒரு புதுக் காரணத்தைக் கண்டுபிடித்து அப்சல் குரு என்ற அப்பாவியைத் தூக்கி போட்டார் கள். அதனை அடுத்தடுத்த அத்தியாயங்களில் தந்திருக்கின்றோம்.

நீதிமன்றங்கள் டெல்லி பல்கலைக் கழகப் பேராசிரியர் எஸ்.ஏ.ஆர். ஜீலானி அவர்களை விடுதலைச் செய்துவிட்டன. ஆனால், காவல் துறைக்கு அவரை உயிரோடு விட்டுவைத்திட மனமில்லை. அந்த அளவுக்கு முஸ்லிம் விரோதமும் குரோதமும் அவர்களை ஆட்டிப் படைத்தன.

எஸ்.ஏ.ஆர். ஜீலானி அவர்கள் அவருடைய வழக்கறிஞர் நந்திதா காஷ்கர் அவர்களைச் சந்தித்துவிட்டு வரும் போது அவரை காவல் துறையினர் துப்பாக்கியால் இரண்டு முறை சுட்டார்கள்.

இறைவனின் பெருங்கருணையினால் அவர் அந்த குண்டுகளிலிருந்து உயிர் பிழைத்தார்.

ஆனாலும் அவர்களுக்கு அந்த இரத்தத் தாகம் தணியவில்லை.

மீண்டும் ஒரு முறை அவரது வீட்டுக்கு வெளியே வைத்துச் சுட்டார்கள்.

இந்த முறை அவரது வயிற்றில் பாய்ந்தது குண்டு ஆனாலும் உயிர் பிழைத்தார்.

இப்படி எஸ்.ஏ.ஆர். ஜீலானியைப் கொலை செய்யும் முயற்சிகளைத் தொடர்ந்து கொண்டே இருக்கின்றார்கள்.

●

# தொடரும் மோடியின் கையாலாகத்தனம்

மோடி ஆட்சியின் சாதக பாதகங்களை பல ஆராய்ச்சி நிறுவனங்கள், ஆய்வுக்கு எடுத்துள்ளன. அனைத்தும் மோடி அரசின் வீழ்ச்சியையே சுட்டிக் காட்டுகின்றன. அவற்றுள் ஒன்று 'குல்கார்' என்பது. அது மோடி அரசின் கையாலாகத் தனத்தை இப்படிப் பட்டியல் போடுகின்றது.

நாங்கள் ஆட்சிக்கு வந்தால் பெண் களுக்கு நாடாளுமன்றத்திலும், சட்டசபை களிலும் இட ஒதுக்கீடு வழங்கிடுவோம் எனக் கூப்பாடு போட்டார்கள். பின்னர் தனது தேர்தல் அறிக்கையிலும் குறிப்பிட்டார்கள். ஆனால் அதைப் பற்றிய பேச்சே எழுந்திடவில்லை.

இங்கு வாசகர்கள் ஒன்றை கவனிக்க வேண்டும். இந்த மோடி வகையறாக்கள், காங்கிரஸ் ஆட்சிச் செய்த காலமெல்லாம் பெண்களுக்கான இட ஒதுக்கீடு மசோதாவை எதிர்த்த கட்சி பாரதீய ஜனதா கட்சி. உலகெங்கும் உள்ள இதர பாசிஸ்ட்டுகளும் இதையே இலக்காகக் கொண்டவர்கள்.

இளைஞர்கள் ஆட்சி முறை நிருவாக முறை இவற்றில் பலன் பயக்கும் வகையில் ஆராய்ச்சிகளை மேற்கொண்டால் அவர் களுக்கு அந்த ஆராய்ச்சிக்கு நிதி உதவி செய்வார்கள் என்றொரு வாக்குறுதியை அளித்தார்கள். ஆனால் அந்த வாக்குறுதியை யும் காற்றிலே பறக்க விட்டார்கள்.

இதற்கு நேர் எதிராக பல்கலைக் கழகங்களில் கஷ்டப்பட்டுக் படித்துக் கொண்டிருந்த தலித் மாணவர்களை கொலை செய்தார்கள். அல்லது தற்கொலை செய்து கொள்ளத் தூண்டினார்கள். பலரை கொலை செய்து தூக்கிலே தொங்கவிட்டு தற்கொலை என்றார்கள்.



மாவோயிஸ்ட்டுகள் தொடர்ந்து கொண்டிருப்பது பெரும் போர். அதனால் அதற்கெதிராக ஒரு பெரும் தேசிய திட்டத்தோடு இந்த அரசு வரும் என்றும் நீட்டி முழக்கினார் நரேந்திர மோடி. ஆனால் வெற்றிடம் தான் மிச்சம்.

இவரால் - மோடியால் அப்பாவி முஸ்லிம்களையும், அன்றாடம் காய்ச்சி முஸ்லிம்களையும் கூட்டாக கொலை செய்ய முடிந்தது. சிக்கிக் கொண்டு சிறைப்பட்ட கொலைகாரர்களை விடுவிக்க முடிந்தது. அவ்வளவுதான். அல்லாமல் ஆயுதந்தாங்கி சமர்களத்தில் நிற்கும் மாவோஇஸ்டுகளை எதிர் கொள்ள வக்கில்லை வகை இல்லை.

ஆனால் இன்று உத்திரப் பிரதேசத்தில் பஜ்ரங்தளம் என்ற மோடி வகையறா தீவிரவாதிகள் துப்பாக்கிப் பயிற்சி எடுத்தார்கள் எனக் கேள்விப்படுகின்றோம். இவர்கள் தேசப் பக்தியை ஒட்டு மொத்தமாகக் குத்தகைக்கு எடுத்துக் கொண்டவர்கள் என்றும் கூறுகின்றார்கள். இவர்கள் யாருக்கு எதிராக இந்தப் பயிற்சிகளை மேற்கொள் கின்றார்கள். மாவோஸ்ட்டுகள் இருக்குமிடங் களுக்கு இவர்களை அனுப்புவதுதானே!

அதே போல் விரைவு நீதிமன்றங்களை நாடெங்கும் அமைக்கப்போவதாகவும், அதன் வழி நாடெங்கிலும் கிடப்பில் கிடக்கும் வழக்குகளை விடுவிக்கப் போவதாகவும் கூச்சல் போட்டார். உறுதி தந்தார் மோடி. ஆனால் இன்று இந்த வகையில் ஒரு அடியைக் கூட எடுத்து வைக்கவில்லை.

அதே போல் நீதிமன்றங்களில் காலியாக இருக்கும் நீதிபதி பதவிகளை நிரப்புவோம் என்றும் வாய் சவடால் விட்டார். அதையும் நிறைவேற்றிடவில்லை.

அதையும் காற்றிலே பறக்கவிட்டார். நீதித்துறையைப் பொறுத்த வரை மோடி அதை பாசிச மயமாக்குவதில் மிகவும் கவனமாக இருக்கின்றார். இதனை நாம் நமது பல்வேறு தலையங்கங்களிலும் சுட்டிக் காட்டியுள்ளோம்.

இதனை அமித் ஷா என்ற பாரதீய ஜனதா கட்சியின் தலைவரை (7 தலை வாங்கிய அபூர்வ கொலைகாரன்) ஷெராப்தீன் கொலை வழக்கில் விடுதலை செய்த நீதிபதி சதாசிவத்திற்கு கவர்னர் பதவியை வழங்கியதிலிருந்து தொடங்கி வைத்தார்கள்.

அதன் பின் பல நீதிபதிகள் இந்துத்துவ சிந்தனை கொண்டவர்களை மட்டுமே நீதிபரிபாலனத்தில் அமர்த்தினார்.,

உச்சநீதிமன்ற நீதிபதி சந்திரசூடின் மகன் இப்போது உச்ச நீதிமன்ற நீதிபதியாக ஆக்கப்படுவார் என்ற பேச்சுக்கள் எழுந்துள்ளன.

இவர் தலைமை நீதிபதியானவுடன் இந்துத்துவ முறையில் நீதி பரிபாலனம் மாற்றி அமைக்கப்படும் எனப் பேசப்படுகின்றது. ஏன் அரசியல் நிர்ணயச் சட்டம் கூட இந்துத்துவாவுக்கு சட்டமாக மாற்றப்படும் என அரசியல் நோக்கர்கள் கூறுகின்றார்கள். ஆக ஒரு பெரும் ஆபத்து இந்திய தீபகற்பத்தைப் பீடிக்கவிருக்கின்றது. இந்தக் கபளீகரத்தில் பாபரி மஸ்ஜித் இருந்த இடத்தில் கோவில் கட்டும் தீர்ப்பும் வரலாம். (அல்லாஹ் காப்பாற்றுவானாக!)

## விவசாயிகளுக்குக் கொடுத்த வாக்குறுதியை மீறினார்கள்

வளர்ச்சி, வளர்ச்சி என்றொரு மாயை உருவாக்கித்தான் மக்களின் வாக்குகளைப் பெற்றார்கள். (உத்திரப்பிரதேசத்தில் 30 வகுப்புக் கலவரங்களை நிகழ்த்தி வெற்றியைத் தட்டிச் சென்றார்கள்). ஆந்திராவில் குண்டு வெடிப்பு களை நடந்த சில தொகுதிகளை வென்றார்கள். சென்னை சென்டரலில் நடத்திய குண்டு வெடிப்பு இந்தப் பின்னணியில் நடந்ததே!)

ஆனால் அது பாசிசத்தின் வளர்ச்சி, இந்துத்துவாவின் வளர்ச்சி என்பது தான் வெளிச்சத்திற்கு வந்தது.

இந்த வளர்ச்சி மாயையில் அவர்கள் விவசாயிகளுக்கு கொடுத்த வாக்குறுதி உங்களுக்கு 50 சதவிகிதம் இலாபம் கிடைக்கும் அளவில் விவசாய தானியங்களுக்கு விலை நிர்ணயிக்கப்படும் என வாக்குக் கொடுத்தார் கள். பின்னர் அதை அப்பட்டமாக மீறினார்கள். காரணங்கேட்டால் அது அங்காடி விதிகளுக்கு ஒத்துவராது என்றார்கள்.

## கறுப்புப் பணம்

வெளிநாடுகளில் முடங்கிக் கிடக்கும் கறுப்புப் பணத்தை இந்தியா கொண்டு வந்து ஒவ்வொரு குடிமக்களின் வங்கிக் கணக்கிலும் ரூபாய் 1,50,000 ஐ போடுவோம். இதை பதவியேற்ற 100 நாட்களிலேயே செய்வோம் என்றார்கள். ஆனால் இன்றளவும் அதைப் பற்றிய பேச்சே இல்லை.

பின்னர் தான் உண்மை தெரிய வந்தது. அந்த கறுப்புப் பண முதலைகள் அள்ளிக் கொட்டிய பணத்தில் தான் மோடி பிரதமரானார் என்ற உண்மை. இப்போது இந்தக் கறுப்புப் பண முதலைகளுக்குத் தான் இந்தியாவின் முக்கிய தொழில் நிறுவனங்கள் தாரை வார்க்கப்படுகின்றன என்ற உண்மை.

ஆக முழுசாகத் தோற்றுப் போன ஓர் அரசை மக்கள் சந்திக்கின்றார்கள். அதனால் விரக்தியடைந்து நிற்கின்றார்கள்.

**ஆதாரம் : தி ஹிந்து, சனிக்கிழமை, மே 28, 2016**

**எம்.ஜி.எம்.**

# மேலும் 13 அப்பாவி முஸ்லிம்கள் விடுதலை!

# டெல்லியை உலுக்கிய 'தப்லீக் ஜமா அத்' கைதுகள்!

டெல்லி சிறப்பு காவலர்களின் முகத்தில் மீண்டும் கரி.

மே 2016 பிறந்ததும் டெல்லி சிறப்புக் காவலர்கள் ஒரு பெரும் அதிசயத்தை உலக மக்களின் கண்களுக்கு முன்னால் காட்டினார்கள்.

அது ஜெய்சே முஹம்மத் என்ற ஒரு தீவிரவாத அமைப்பு டெல்லியை மையங் கொண்டு இந்தியாவை குறி வைத்து வருவதாகவும், அதன் முக்கிய அணி ஒன்றை அவர்கள் பறந்து பாய்ந்து பிடித்ததாகவும் அறிவித்தார்கள். 13 முஸ்லிம் இளைஞர் களைக் கைது செய்தார்கள். அவர்கள் தப்லீக் ஜமாஅத்தை சார்ந்தவர்கள்.

ஜெய்சே முஹம்மத் என பீதியைக் கிளப்பி அந்த மக்களின் முகத்தை மூடி தொலைக்காட்சிகளின் முன் காட்டினார்கள். வெறும் வாய்க்கு அவல் கிடைத்த கதையாக தொலைக்காட்சி ஊடகங்கள் தன் கற்பனை கதைகளை அவிழ்த்து விட்டன.

ஒரு நிமிடம் எல்லோரும் முஸ்லிம்கள் உட்பட அனைவரும் மலைத்து நின்றார்கள்.

பின்னர் தான் முஸ்லிம்களுக்கு டெல்லி பாட்லாவில் நடந்த படுகொலைகள், அதில் கொலை செய்யப்பட்ட அப்பாவி முஸ்லிம் மாணவர்கள். நாட்டில் நடந்த 25 குண்டு வெடிப்புகள் அதில் கைது செய்யப்பட்ட முஸ்லிம்கள் பின்னர் இந்துத்துவவாதிகள் கைது செய்யப்பட்டு முஸ்லிம் இளைஞர்கள் விடுதலை செய்யப்பட்டது என்பவை யெல்லாம் நினைவுக்கு வந்தது.



**அப்பாவி தப்லீக் ஜமா அத்தினரை தீவிரவாதிகள் என கைது செய்து அழைத்து சென்ற போது எடுத்த படம். இவர்கள் விடுதலையான போது அந்த படத்தை எந்த ஊடகங்களும் பிரசுரிக்கவில்லை.**

இதனால், தப்லீக் ஜமாஅத் -ஐ சார்ந்த இந்த 13 பேரையும் விசாரிக்கத் தொடங்கினார்கள். விசாரணையில் இந்த 13 முஸ்லிம் இளைஞர்களும் அப்பாவிகள் என்ற உண்மை தெரிந்திட வந்தது.

அவர்கள், விவகாரத்தை கையிலெடுத்தார்கள். அவர்களைப் பற்றிய விசாரணையைத் தொடந்தார்கள். அதில் அவர்கள் தப்லீக் ஜமாஅத் என்ற ஆன்மீக குழுவைச் சார்ந்தவர்கள் என்றும், வாழ்க்கையின் அடிப்படை தேவைகளுக்கே அல்லாடுபவர்கள் என்பது தெரிந்திட வந்தது.

இதில் மாபெரும் வேடிக்கை என்னவெனில் கைது செய்யப்பட்ட ஒரு முஸ்லிமின் வீட்டிலிருந்த தட்டுமுட்டுச் சாமான்களையும் டெல்லியின் சிறப்புக் காவலர்கள் ‘கைப்பற்றிக்’ கொண்டார்கள். இந்த சிறப்புக் காவலர்கள் பிரதமர் மோடியின் ஏவலாட்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால் தொலைக்காட்சி ஊடகங்களிலும் அச்சு ஊடகங்களிலும், அவர்களிடமிருந்து லேப்டாப்கள் என்ற மடிக்கணிகளைக் கைப்பற்றிச் சென்றதாக செய்திகளைச் சொல்லி இருந்தார்கள்.

லேப் டாப்கள், என்ற மடிக்கணினிகளும், இண்டர் நெட் கணெக்சன் என்ற இணையதள இணைப்புகளும் முஸ்லிம்களிடமிருந்தால் அவை தீவிரவாத பொருள்களாக டெல்லி சிறப்புக் காவல் படையினருக்குத் தெரிகின்றன.

லேப்டாப்களிலேயே வாழ்ந்து கொண்டிருப்பவர், என வருணிக்கப்பட்ட ஒருவரின் வீட்டில் ஒரு தொலைக் காட்சிப் பெட்டி கூட இல்லை. டெல்லியில் வாழ்ந்து கொண்டே தொலைக்காட்சிப் பெட்டி இல்லாமல் இருக்கும் மிகச் சில குடும்பங்களில் ஒன்று இந்த அப்பாவி முஸ்லிம் குடும்பம்.

ஆனால் நமது ஊடகங்களில் அவர்கள் சதா சர்வ காலமும், லேப்டாப்களைத் திறந்து வைத்துக் கொண்டு, தீவிரவாதத்தைப் பரப்பிக் கொண்டிருந்தார்கள் எனச் செய்தி.

கைது செய்யப்பட்ட அனைவரும் உடல் உழைப்பை நம்பி வாழ்பவர்கள் தாம். எந்தக் கல்வி அறிவும் இல்லாதவர்கள்.

நீதிமன்றங்கள் மோடி பேரவையாக மாற்றப்பட்டு வருகின்றன. என்றாலும் ஜமீஅத்துல் உலமாலே ஹிந்த் இன் வழக்கறிஞர் எம்.எஸ்.கான் அவர்கள் அழுத்தமாகத் தன் வாதங்களை எடுத்து வைத்தார். அதனடிப்படையில், இந்த 13 அப்பாவி முஸ்லிம்களும் விடுதலை செய்யப்பட்டார் கள்.

கீழே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்ற கதையாக டெல்லி சிறப்புக் காவல் துறையினர் நாங்கள் இதற்கெதிராக அதாவது இப்போத வழங்கியுள்ள தீர்ப்புக்கு எதிராக மேல் முறையீடு செய்வோம் என வரிந்துக் கட்டிக் கொண்டு நின்றார்கள்.

ஆனால் ஜம்மியத் இ உலமாயி ஹிந்த் அங்கேயும் டெல்லி சிறப்புக் காவல் துறையின் சதிகளை முறியடிப்போம் எனச் சூளுரைத்துள்ளார்கள்.


**இப்போது பரபரப்பான விற்பனையில்**




விலை ரு. 30 மட்டுமே

**வேர்கள் பதிப்பகம்,**

52/1, மண்ணடி தெரு, மண்ணடி,
சென்னை - 600 001.
தொடர்ப்புக்கு : 8148129887

# பறிபோகும் பாபரி மஸ்ஜித்!

## உத்திரப்பிரதேசத்தை குறி வைக்கும் பாரதீய ஜனதா கட்சி!



நம் நாட்டின் மிகப்பெரிய மாநிலம் உத்திரப்பிரதேசம். இங்கேயுள்ள பைஜாபாத் மாவட்டத்தில்தான் அயோத்தியா இருக்கின்றது. அங்கேதான் தொன்மைமிகு பாபரி மஸ்ஜித் இருந்தது.

மோடி மத்தியில் ஆட்சி பிடிப்பதற்கு முன் வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் பாபரி மஸ்ஜித் இருந்த இடத்தில் இராமருக்கு கோயில் கட்டுவோம் என்றும் குறிப்பிட்டிருந்தார். கோயிலைக் கட்டுவதற்கு சரியான வழி உத்திரப்பிரதேசத்தில் ஆட்சியை பிடிப்பது தான் என வியூகம் வகுத்து செயல்படுகின்றார்கள்.

### கலவரங்களே ஓட்டுகள்

இந்தத் திசையில் அவர்கள் 120 பெரிய கலவரங்களைத் நடத்தி முஸ்லிம்களைப் பீதிவயப்படுத்திவிட்டார்கள். 69,000 முஸ்லிம்களை அகதிகள் முகாமிற்கு அனுப்பி விட்டார்கள். அவர்கள் குடியிருந்த வீடுகளையும் நிலபுலன்களையும் பறித்துக் கொண்டார்கள். தங்களுக்குள் பங்கு போட்டுக் கொண்டார்கள்.

இது பாசிஸ்ட்டுகள் அதாவது சங்க பரிவாரத்தினர் தங்களுக்குப் போரில் கிடைத்த பொருள் எனப் பகிரங்கமாக பேசிக் கொள்கின்றார்கள்.

இவையெல்லாம் நடந்த இடந்தான் உத்திரபிரதேசத்திலுள்ள ‘முசபர்நகர்’.

இந்த கலவரங்கள் முஸ்லிம்களைப் பீதிவயப்படுத்தியதோடு இன்னொரு பெரும் விளைவையும் ஏற்படுத்தின. அது தலித்களையும் அப்படியே பீதிவயப்படுத்தினார்கள். இதனால் தலித் தனித் தொகுதிகள் என அறிப்படும் தொகுதிகளில் (Reserved Constituencies) இவர்களே வென்றார்கள்.

உத்திரப் பிரதேசத்தில் 17 தலித் தனித் தொகுதிகள்இருந்தன. 13 ஐயும் இவர்களே வென்றார்கள்.

இப்போதும் தலித்களைக் குறிவைத்தே தங்கள் காய்களை நகர்த்திக் கொண்டிருக்கின்றார்கள்.

### ஒரு கோடி இலவச காஸ் இணைப்புகள்

அத்தோடு இலவசங்களைத் தந்திடவும் திட்டங்களைத் தீட்டியுள்ளார்கள். எடுத்த எடுப்பிலேயே ஒரு கோடி இலவச காஸ் இணைப்புகளை இலவசமாக வழங்கிடும் திட்டம் ஒன்றை அறிவித்திருக்கின்றார்கள். இப்படி இலவசங்களை வழங்கியே ஓட்டுகளை வேட்டையாடிட திட்டமிட்டுள்ளார்கள்.

உத்திரப் பிரதேசத்தில் 403 சட்டமன்ற தொகுதிகள் உள்ளன. அவற்றில் 265 இல் வெற்றி பெற்று ஆட்சியைப் பிடிக்க திட்டம் தீட்டியுள்ளார்கள். அதற்கு கலவரங்கள் இலவசங்கள் என களம் இறங்கியுள்ளார்கள்.

## சிறுபான்மை முஸ்லிம்கள் தலித்கள் நிலை : முலாயம் சிங்கின் துரோகங்கள்



முஸ்லிம்கள் முலாயம் சிங் - இன் கட்சியில் சமாஜ் வாடி கட்சிக்கு 2012 இல் பெருவாரியாக வாக்களித் தார்கள். இப்போதைய உத்திரப்பிரதேச சட்டமன்றத் தில் 69 முஸ்லிம் சட்டமன்ற உறுப்பினர்கள் இரு கின்றார் கள்.

கேபினட் அந்தஸ்த்தில் 3 அமைச்சர் களும், துணை அமைச்சர்களாக 3 பேரும் இருக்கின்றார்கள்.

இத்தனை சட்டமன்ற உறுப்பினர்கள் இருந்திடும் போதுதான் முசபர் நகர், மீரட் போன்ற பகுதிகளில் வாழ்ந்த 69,000 பேர் அகதிகள் முகாமிற்கு விரட்டப்பட்டார்கள்.

விரிந்தும் பரந்துமிருந்த கரும்புத் தோட்டங்களை பரிவார கொலைகாரர் களுக்குத் தாரை வார்த்து தந்துவிட்டு புலம் பெயர்ந்து அலைகின்றார்கள்.

இவர்களெல்லாம் அகதிகள் முகாம் களில் அல்லல்பட்டுக் கொண்டிருந்த போது இந்த 69 சட்டமன்ற உறுப்பினர்களாலும், எதுவும் செய்திட இயலவில்லை. வேடிக்கைப் பார்ப்பதைத் தவிர.

அங்கிருந்த முஸ்லிம் அமைச்சர்கள், அறிக்கை விட்டுக் கொண்டிருந்தார்கள். அதனை முலாயம் சிங் சார்பில் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கும் அவருடைய மகன் அகிலேஷ் யாதவ் மறுத்துக் கொண்டே இருந்தார். அதனால் முஸ்லிம் அமைச்சர் களும், முஸ்லிம் சட்டமன்ற உறுப்பினர்களும், எதுவும் செய்திட முடியாதவர்களாக இருந்தார்கள்.

## முலாயம் சிங் - இன் துரோகம் எண்-1 அகதிகள் முகாமில் வாழ்ந்தவர்கள் மீது FIR முதல் தகவல் அறிக்கை

உத்திரப்பிரதேசத்தில் 69 ஆயிரம் முஸ்லிம்கள் அகதிகள் முகாமிற்கு அனுப்பப்பட்ட விவகாரத்தில் நாடெங்கிலும் பெரும் விவாதமானது. மட்டுமல்ல உலக அளவிலும் பெரும் விவாதமானது. இதனால் உலக அளவிலுள்ள மனித உரிமைக் குழுக்கள் இந்த அகதிகள் முகாமிற்கு வருகை தர தயாரானார்கள்.

தொடர்ந்து வந்த கடுங்குளிரில் பல முஸ்லிம்கள், குழந்தைகள் குளிர் தாங்காமல் இறந்தார்கள். இது ஐக்கிய நாடுகள் சபை வரை சென்றது.

உலகிலுள்ள மனித உரிமை குழுக்கள் முசாபர் நகர் வருவதை உத்திரப்பிரதேசத்தை ஆட்சிச் செய்துக் கொண்டிருந்த முலாயம் சிங்கின் மகனும், முலாயம் சிங்கும் விரும்ப வில்லை. ஆகவே அவர்கள் அகதிகள் முகாமில் வாழ்ந்து கொண்டிருந்த முஸ்லிம் களை வெளியேறும்படி கட்டாயப்படுத் தினார்கள். அகதிகளான முஸ்லிம்கள் எங்கே போவது? என்பதை அறிந்திடாமல் துடித்துக் கொண்டிருந்தார்கள். தடியடிகளை நடத்தி அவர்களை அகதிகள் முகாம்களிலிருந்து வெளியேற்றினார்கள்.

திக்கற்று நின்ற அவர்கள் வஃக்ப் நிலங்களில் சென்று தங்கினார்கள். அங்கேயும் சென்று துரத்தியது முலாயம் சிங் அரசு. போக மறுத்தவர்கள் மீது அரசாங்க நிலத்தை ஆக்கிரமித்தார்கள் எனக் குற்றம் சுமத்தி முதல் தகவல் அறிக்கைகளைத் தாக்கல் செய்தார்கள்.

முதல் தகவல் அறிக்கைகள் வழி குற்றம் சுமத்தப்பட்ட நிலையில் அவர்கள்

அங்குள்ள மதரசாக்களில் தஞ்சம் புகுந்தார்கள்.

இப்படி 69 சட்டமன்ற உறுப்பினர்களும் மூன்று கேபினட் அந்தஸ்து அமைச்சர்களையும் வைத்துக் கொண்டு அகதிகள் முகாமில் கூட வாழ்ந்திட இயலாதவர்களாக ஆகி விட்டார்கள் முஸ்லிம்கள். இதுதான் அரசியல் பலம் இந்தியாவில் சாதித்தது.

### முலாயம் சிங்-இன் துரோகம் எண்-2

### மாட்டுக்கறி கொலை

அடுத்து தாத்ரி - என்னுமிடத்தில் மாட்டுக்கறியை உண்டார்கள், அல்லது தங்கள் வீட்டிலிருந்த குளிர்சாதன பெட்டியில் வைத்திருந்தார்கள் என்பதற்காக அஸ்பாஃக் என்ற முஸ்லிம் கொலை செய்யப்பட்டார். அது நம் நாட்டில் மனசாட்சி உள்ளவர்கள் அனைவரின் உள்ளத்தையும் உலுக்கிற்று. அதனால் சாகித்ய அகாடமி என்ற பெரும் விருதைப் பெற்ற சிந்தனையாளர்கள், எழுத்தாளர்கள், இவர்களையெல்லாம் தங்கள் விருதுகளை திரும்பத் தந்தார்கள்.

உலக அரங்கில், 89 அறிஞர்கள் அதனை கண்டித்துத் தீர்மானம் போட்டார்கள். உலக அரங்கில் இந்தியாவே அவமானப்பட்டு நின்றது. ஆனால் முலாயம் சிங் யாதவ் மட்டும் தொடர்ந்து துரோகத்தை செய்து கொண்டே இருந்தார்.

மனித உரிமை குழுக்களுக்கு அனுப்பிய அறிக்கைகளிலும், நீதிமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கைகளிலும் 'மாட்டுக்கறி' என்ற சொல்லை தவிர்த்துக் கொண்டார். இதனால் அந்தக் குற்றவாளிகள் பட்டப்பகலில் கொலையைச் செய்தவர்கள் தண்டனையிலிருந்து தப்பித்துக் கொண்டார்கள்.

### முலாயம் சிங் யாதவ் - இன் துரோகம் எண் 3

அதே போல் 2001 ஆம் ஆண்டு இந்துத்துவ தீவிரவாதிகள் செய்த குண்டு வெடிப்புக்களுக்காக 6 முஸ்லிம் இளைஞர்கள் கைது செய்யப்பட்டார்கள். நமது நாட்டில் இந்துத்துவா செய்யும் குண்டு வெடிப்புகளுக்கு உடந்தையாக இருந்து கொண்டிருக்கும் மத்திய உளவுத்துறை, அந்த அப்பாவி முஸ்லிம்களை 'லக்ஷ்கரே தய்பா' என்ற அமைப்பைச் சார்ந்தவர்கள் என்றது.

சுமார் 10 ஆண்டுகள் சிறை வாசத்திற்குப் பின் அவர்கள் - விடுதலைச் செய்யப்பட்டார்கள். அவர்களின் இளமை பாழாய்ப் போனது. அவர்களின் குடும்பங்கள் சிதைந்தன. இனி என்ன செய்வது என அவர்கள் துடியாத் துடித்துக் கொண்டிருந்த போது அவர்களின் வெந்த புண்ணிலே வேலைப் பாய்ச்சியது முலாயம் சிங் அரசு. அவர்களை வெளியே விட்டது தவறு என்று மேல் முறையீட்டுக்குச் சென்றது.

ஆனால் 2012ஆம் ஆண்டில் இதே முலாயம் சிங் யாதவ் அரசுக்கு முஸ்லிம்கள் முஹல்லா தோறும் சிறப்புக் குழுக்களை அமைத்து ஓட்டுக்களை ஒருங்கிணைத்து அமோகமாக வெற்றி பெற்றிடச் செய்தார்கள்.

இதுதான் இன்றைய அரசியலில் இந்தியாவில் முஸ்லிம்களுக்கிருக்கும் ஒரே வழியா? முஸ்லிம்கள் இந்த அரசியல் மாயைகளிலிருந்து தங்களை விடுவித்துக் கொண்டு இறைவன் காட்டிய பாதையில் பயணிக்கத் தொடங்கிட வேண்டும். அதன் முதற்படியாக இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் பணியைத் தொடங்கிட வேண்டும்.

அல்லாஹ் இந்த அரசியல் போதையிலிருந்து எல்லா முஸ்லிம்களையும் காப்பாற்றுவானாக!

**எம்.ஜி.எம்.**


**அடிமைத்தனத்தை இஸ்லாம் அங்கீகரித்ததா?**

**மூலம் :**
**முஹம்மது குதுப் மிஸ்ரி**
(முன்னாள் பேராசிரியர்
உம்முல்குறா பல்கலைக்கழகம், சவூதி அரேபியா)

**தமிழில் :**
**மு. குலாம் முஹம்மது**

## 2008 மாலேகான் குண்டு வெடிப்பு!

# காவிமயமான என்.ஐ.ஏ.

2008 செப்டம்பர் 29 நாள் மாலேகானில் குண்டுகள் பல வெடித்தன. அன்று வெள்ளிக்கிழமை, அத்தோடு சபேபராத் நாள் என்பதால் முஸ்லிம்கள் அதிகமாக குழுமியிருந்தார்கள். இந்த குண்டு வெடிப்பில் 7 பேர் உயிரிழந்தனர். 100க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். இந்த குண்டு வெடிப்பை மஹாராஷ்டிரா மாநில A.T.S. என்ற தீவிரவாத தடுப்பு படை தலைவர் ஹேமந்த் கர்கரே விசாரிக்க தொடங்கினார். விசாரணையில் குண்டுகள் LML Freedom மோட்டார் சைக்களில் பொருத்தப் பட்டிருந்ததும் அந்த மோட்டார் சைக்களின் உரிமையாளர் பெண் சாமியார் பிரக்யா சிங் தாகூர் என்பதும் தெரியவந்தது. எனவே பெண் சாமியார் பிரக்யா சிங் தாகூர், ராணுவ அதிகாரி லெப்டினட் கலோனல் புரோகித் உள்ளிட்ட 12 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்கள் யாவரும் அபினவ் பாரத் என்ற அமைப்பைச் சார்ந்தவர்கள் என்றும் இந்திய அரசியல் நிர்ணயச் சட்டத்தை தூக்கி எறிந்து விட்டு இங்கு மனு தர்மத்தின் அடிப்படை யிலான ஓர் இந்து ராஜ்ஜியத்தை கொண்டு வந்திடவே தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார்கள் என்பது தெரியவந்தது. இந்த அமைப்போடு ஆர்.எஸ்.எஸ்., பஜ்ரங்தள் போன்ற காவி பயங்கரவாத அமைப்புகள் சேர்ந்து செயல்படுவது மட்டுமின்றி இந்திய அரசாங்கத்திடம் ஊழியத்தை பெற்று வரும் மத்திய உளவுத்துறை IBயும் அதை சார்ந்தவர்களும் அங்கம் வகிக்கிறார்கள் என்ற உண்மையை உலகறிய செய்தார் கர்கரே. (மேலும் படிக்க கர்கரே-ஐ கொலை செய்தது யார்?)

### கர்கரே-வின் கொலை காரணம்

எந்த ஒரு அமைச்சரவையின் கட்டுபாட்டிலும் இல்லாமல் எண்ணற்ற அதிகாரங்களை பெற்றிருக்கும் ஒரு துறை இருக்குமானால் அது ஐ.பி. என்ற மத்திய உளவுத்துறை தான். யாருக்கும் பதில் சொல்லத் தேவையில்லை என்ற சிறப்பு அதிகாரங்களை தன் வசம் கொண்ட ஐ.பி. என்ற மத்திய உளவுத்துறை இந்த நாட்டின் அரசியல் நிர்ணயச் சட்டத்தை தூக்கி எறிந்திட இந்துத்துவவாதிகளோடு சேர்ந்து தீவிரவாத செயல்களில் ஈடுபடுகிறார்கள் என்ற உண்மையை வெளிக்கொண்டு வந்ததால் கர்கரே - ஐ கொலை செய்திட வேண்டும் என்று முடிவு செய்து 26/11 என்ற நாடகத்தை அரங்கேற்றினார்கள். அதில் கர்கரே கொலை செய்யப்பட்டார். (மேலும் படிக்க கர்கரே-ஐ கொலை செய்தது யார்?)


ஹேமந்த் கர்கரே

### குற்றப்பத்திரிக்கை

இருந்த போதிலும் இந்த வழக்கு சம்பந்தமாக 2009 ஜனவரி 30ல் கைது செய்யப்பட்ட 12 நபர்களுக்கு எதிராகவும் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

அதன் பின் துணை குற்றப்பத்திரிக்கை 2011 ஏப்ரல் 21ல் தாக்கல் செய்யப்பட்டது. அதன் பின் உள்துறை அமைச்சரகம் இந்த வழக்கை ATS என்ற தீவிரவாத தடுப்பு படையிடமிருந்து என்.ஐ.ஏ. என்கிற தேசிய புலனாய்வு அமைப்பிடம் ஒப்படைத்தது.

## என்.ஐ.ஏ.வும் மாலேகான் 2 வழக்கும்

மாலேகான் 2 என்று அழைக்கப்படும் இந்த வழக்கு 2011-ல் என்.ஐ.ஏ. விடம் ஒப்படைக்கப்பட்டது. கடந்த ஐந்து வருடங்களில் இந்த வழக்கில் எந்த ஒரு கூடுதல் ஆதாரங்களையோ, சாட்சியங்களையோ சேர்த்திடாமல் சாத்வி உட்பட 5 பேருக்கு என்.ஐ.ஏ. நற்சான்றிதழ் வழங்கியிருப்பது வேடிக்கையானது.

## காவி மயமான என்.ஐ.ஏ.

2 வருடங்களுக்கு முன்பு அதாவது 2014-ல் மோடி அரசு அமைந்திடும் முன் இந்த வழக்கின் குற்றப்பத்திரிக்கை தயாராகவே உள்ளது என என்.ஐ.ஏ. கூறியது. ஆனால் இந்துத்துவ அரசு அமைந்தவுடன் என்.ஐ.ஏ. வின் அனுகுமுறை நேர் எதிராகவே இருந்து வருகிறது என்பதை என்.ஐ.ஏ.வின் சிறப்பு அரசு வழக்கறிஞர் ரோஷனி சாலியான் பின் வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

சென்ற வருடம் பத்திரிக்கைக்கு அவர் அளித்த பேட்டியில் 2014-ல் மோடி அரசு அமைந்தவுடன் வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களின் விஷயத்தில் மென்மையான போக்கை கடைப்பிடித்திட வேண்டும் என என்.ஐ.ஏ. அதிகாரி தன்னை நிர்ப்பந்திப்பதாக குற்றம் சாட்டினார். பிறகு அந்த அதிகாரியின் பெயரையும் வெளியிட்டார். மேலும் அவர் கூறியதாவது:

“இரண்டு வருடங்களுக்கு முன் 2006 மாலேகான் வழக்கில் MCCOCA நீதிமன்றத்திடம் குற்றம் சாட்டப்பட்ட 9 முஸ்லிம்களுக்கு எதிராக தங்களிடம் எந்த ஆதாரமும் இல்லை என கூறியது. ஆனால் 2016 ஏப்ரலில் நீதிமன்றம் அவர்களை விடுவித்த போது அதை எதிர்த்தது என்.ஐ.ஏ. இதுவே இவர்களின்



பிரக்யா சிங்

அணுகுமுறையின் திடீர் திருப்பத்திற்கு போதுமான சாட்சி” எனக் கூறினார்.

ஆம் இரண்டு வருடங்களுக்கு முன்பு அதாவது 2014-ல் மோடி அரசு அமையுமுன் 2008 மாலேகான் வழக்கில் குற்றப்பத்திரிக்கை தயாராகவே உள்ளது என்றது என்.ஐ.ஏ. ஆனால் இந்துத்துவ அரசு அமைந்தவுடன் என்.ஐ.ஏ. வின் அனுகுமுறை நேர் எதிராகவே இருந்து வருகிறது.

## ஏ.டி.எஸ்.-ன் குற்றப்பத்திரிக்கை

மாலேகான் என்றழைக்கப்படும் இந்த குண்டு வெடிப்பு வழக்கு தீவிரவாத தடுப்புப் படை தலைவராக இருந்த ஹேமந்த் கர்கரே அவர்களின் தலைமையில் வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட ஒவ்வொருவரையும் விசாரித்து வழக்குக்கு தேவையான பல முக்கிய ஆதாரங்களை மிகுந்த சிரமங்களுக்கு மத்தியில் தேடி சேகரித்து உறுதிப்படுத்தியது.

2009 ஜனவரி 20-ல் சமர்ப்பிக்கப்பட்ட ATS -ன் குற்றப்பத்திரிக்கை 5000 பக்கங்களைக் கொண்டது. அதில் குண்டு வெடிப்பு நடந்த இடத்தை பற்றியும், அபினவ் பாரத் என்ற அமைப்பு அதிலுள்ள இந்துத்துவவாதிகள்

மற்றும் தாக்குதலில் ஈடுபட்டவர்களை பற்றி விரிவான தகவல் இடம் பெற்றுள்ளது. துணை குற்றப்பத்திரிக்கையில் கூடுதலான சில ஆதாரங்கள் இணைக்கப்பட்டுள்ளது. அதில் குற்றம் சாட்டப்பட்ட 11 நபர்களுக்கு எதிராக MCCOCA (Maharastra Control of Organised Crime Act) மஹாராஷ்டிர குற்றத் தடுப்பு சிறப்பு சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்திருந்தார்கள்.



கலோனல் புரோகித்

குற்றம் சாட்டப்பட்ட இந்துத்துவ தீவிரவாதிகள் :

1. சாத்வி பிரக்யா சிங் தாகூர்
2. சிவ நாராயன் கோபால் சிங்
3. ஷியாம் பர்வலால் சாஹூ
4. ரமேஷ் சிவாஜி உபாத்யா
5. சமீர் சரத் குல்கர்னி அஜய்
6. ராகேஷ் தத்தாத்ரே தாவிதே
7. ஜக்தீஷ் சின்தமன் ஹர்தே
8. பிராத் ஷிரிகாந்த் புரோகித்
9. தயானந்த் பாண்டே
10. சுதாகர் சதுர்வேதி
11. ராஜா எக்னாத் ராஹேர்கர்

## தீவிரவாதிகளுக்கு நற்சான்றிதழ் வழங்கிய என்.ஐ.ஏ.வின் குற்றப்பத்திரிக்கை

இந்த வழக்கு தொடர்பாக என்.ஐ.ஏ. சார்பில் சிறப்பு நீதிபதி எஸ்.டி. டாக்கலே முன்னிலையில் துணை குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது. அதில் இவ்வழக்கில் பிரக்யா சிங் தாகூர் மற்றும் 5 பேருக்கு எதிராக போதிய ஆதாரங்கள் ஏதும் இல்லை என்றும் எனவே அவர்களுக்கு எதிராக குற்றச் சாட்டுக்களை தொடர்வதற்கு எந்த நியாயமும் இல்லை. மேலும் மகாராஷ்டிர மாநில திட்ட மிட்ட குற்ற தடுப்புச் சட்டத்தின் கீழ் லெப்டிணட் கர்னல் புரோகித் உட்பட 10 பேர் மீது வழக்கு பதிவு செய்வதற்கு எந்த முகாந்திரமும் இல்லை என தனது 133 பக்க துணை குற்றப்பத்திரிக்கையில் தெரிவித் துள்ளது. இதை Final Report இறுதி அறிக்கை என குறிப்பிடுகிறார்கள்.

என்.ஐ.ஏ.வின் இந்த குற்றப்பத்திரிக்கை அடிப்படை அற்றது. இதுவரையில் எந்த ஒரு குற்றவாளியையும் காவலில் வைத்து விசாரித்திடவில்லை. கூடுதலாக எந்த ஒரு ஆதாரங்களையோ, சாட்சியங்களையோ சேர்த்திடவில்லை. இதில் கேலி கூத்து என்னவெனில் அதில் அபினவ் பாரத் என்ற அமைப்பு இருப்பதையும் அந்த அமைப்பு தான் இந்த தாக்குதலை நடத்தியது என்பதையும் ஏற்றுக் கொள்கிறது. ஆனால் அந்த அமைப்பில் யார்? யார்? உறுப்பினர் என்பதை குறிப்பிடவில்லை. ஆக என்.ஐ.ஏ. காவியில் கரைந்திருப்பது கண்கூடாக தெரிகிறது.

## என்.ஐ.ஏ.வின் காவல் விசாரணை கோரிக்கை

இந்த வழக்கு என்.ஐ.ஏ.விடம் ஒப்படைக்கப்பட்டவுடன் ஆரம்பத்தில் நேர்மையான போக்கையே என்.ஐ.ஏ. கடைப் பிடித்தது. வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட வர்களை சிறையில் சென்று விசாரித்தது. பிறகு குற்றம் சாட்டப்பட்டவர்களை காவலில் வைத்து விசாரித்திட வேண்டும் என்று கூறி குற்றம் சாட்டப்பட்ட புரோகித், விவேதி

மற்றும் உபாத்யா ஆகிய மூவரையும் காவலில் வைத்து விசாரித்திட MCCOCA சிறப்பு நீதிமன்றத்திடம் மனு தாக்கல் செய்திருந்தது. சிறப்பு நீதிபதி ஒய்.டி. ஷிண்டே என்.ஐ.ஏ.வின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு விசாரணைக்கு 8 நாள் அவகாசம் அளித்தார்.

## விசாரணைக்கு இடைக்காலத் தடை

சிறப்பு நீதிமன்றத்தின் இந்த உத்தரவை எதிர்த்து குற்றம் சாட்டப்பட்ட இந்துத்துவ தீவிரவாதிகள் பம்பாய் நீதிமன்றத்தில் விசாரணைக்கு தற்காலிக தடை வேண்டி முறையிட்டனர். இந்த முறையீட்டை ஏற்றக் கொண்ட பம்பாய் உயர்நீதிமன்றம் விசாரணைக்கு இடைக்கால தடை வழங்கியது.

அதன் பின் 2011 அக்டோபர் 20-ல் பம்பாய் உயர்நீதிமன்றம் சிறப்பு நீதிமன்றத்தின் உத்தரவை உறுதி செய்து என்.ஐ.ஏ. குற்றம் சாட்டப்பட்டவர்களை காவலில் வைத்து விசாரிக்க அனுமதி அளித்தது. உயர் நீதிமன்றத்தின் இந்த ஆணையை எதிர்த்து இந்துத்துவ தீவிரவாதிகள் உடனடியாக உச்ச நீதிமன்றத்தில் இடைகால தடைக்கு முறையிட்டனர் (SCP 9303/2011) உச்ச நீதிமன்றம் இதை ஏற்றுக் கொண்டு தான் முடிவு செய்திடும் வரை விசாரணைக்கு தடை வழங்கியது.

குற்றம் சாட்டப்பட்ட இந்துத்துவ தீவிரவாதிகளை காவலில் வைத்து விசாரித்திட வேண்டும் என உச்சநீதிமன்றத்திடம் என்.ஐ.ஏ. கொடுத்த மனு 2011 நவம்பர் முதல் இன்று வரை நிலுவையில் உள்ளது.

இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட எந்த குற்றவாளிகளையும் காவலில் வைத்து விசாரித்திடாமல் இந்துத்துவ தீவிரவாதி களுக்கு என்.ஐ.ஏ. நற்சான்றிதழ் வழங்கி யிருப்பது என்.ஐ.ஏ. இந்துத்துவ மயமானதை யும் மோடி அரசின் அடாவடித்தனத்தையும் வெளிக்காட்டுகிறது.

## சுவாமி அசிமானந்தாவின் வாக்குமூலம்

சுவாமி அசிமானந்தா என்றழைக்கப் படும் யஷ்பால் பாதனா. இவர் ஆர்.எஸ்.எஸ். இன் ஒரு கிளை இயக்கமான வனவாசி கல்யாண் ஆஸ்ரம் என்ற அமைப்பின் தலைவர். இவரை 2010 நவம்பர் சி.பி.சி.பி.ஐ. கைது செய்தது. பிறகு இவரை 2007 சம்ஜோதா எக்ஸ்பிரஸ், மக்கா மஸ்ஜித், அஜ்மீர் தர்கா மற்றும் மாலேகான் 2008 இந்த எல்லா குண்டுவெடிப்புகளுக்கும் தானும் தான் அங்கம் வகிக்கும் இந்துத்துவ அமைப்புகளும் அபினவ் பாரத் என்ற அமைப்பும் காரணம் என்று ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். அசிமானந்தாவின் இந்த வாக்குமூலம் இந்த நாட்டையே உலுக்கியது.

மேலும் அந்த வாக்குமூலத்தில் அவர் குறிப்பிடுவது ஜனவரி 2008 பரிதாபாத்தில் நடநத கூட்டத்தில் சுவாமி அசீமானந்தா தயானந் பாண்டே மற்றும் கர்னல் புரோகித் ஆகியோர் கலந்து கொண்டு குண்டு வெடிப்புகளை நடத்திட திட்டம் தீட்டினார்கள் என்பதை தெரிவித்திருந்தார்.

தற்போது இந்த வாக்குமூலங்களை அசிமானந்தா மறுத்து விட்டதாக என்.ஐ.ஏ. கூறுகிறது. அவை நிர்ப்பந்தத்தினாலே தரப்பட்டதாக கூறுகிறது.

அசிமானந்தா நிர்ப்பந்தத்தினால் தான் அந்த வாக்கு மூலங்களை அளித்தேன் என்று கூறுவது எந்த வகையிலும் ஏற்புடையதல்ல. ஏனெனில் அந்த வாக்குமூலம் காவலில் வைத்து விசாரித்த போது வழங்கப்பட்டது அல்ல அவர் எளிதாக மறுத்து விடுவதற்கு.

அந்த வாக்குமூலம் 2008 மாலேகான் குண்டு வெடிப்பில் உள்ள தொடர்பு சம்பந்தமாக நீதிமன்றத்தில் நீதிபதியிடம் பிரிவு 164 CrPC அடிப்படையில் கொடுக்கப்பட்டது. எனவே இந்த வாக்குமூலங்களை அவர் ஒரு போதும் மறுத்திட முடியாது.

ஆக இந்த வழக்கில் நிறைந்திருக்கும் எல்லா ஆதாரங்களையும் ஓரங்கட்டி விட்டு என்.ஐ.ஏ. இந்துத்துவ தீவிரவாதிகளை தப்பவிடுவதில் குறியாக இருப்பது தெரியவருகிறது.

மஹாராஷ்டிராவில் உள்ள மூத்த பத்திரிகையாளர் குமார் கெட்கர் டைம்ஸ் நவ் விவாதத்தில் இப்படி குறிப்பிட்டார். "There is enough evidence outside against sadhu, that's not being presented"

அதாவது, "போதுமான ஆதாரங்கள் சாத்வீக்கு எதிராக இருக்கிறது. ஆனால் அவை சமர்ப்பிக்கப்படவில்லை."

தொடர்ச்சி 29ம் பக்கம்

# IB - இன் அரசியல் விளையாட்டு!

# தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணியை சீர்குலைக்க மத்திய உளவுத்துறை சதி!



தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணியை சீர்குலைக்க மத்திய உளவுத் துறை சதி செய்வதாக தி.மு.க. தலைவர் கருணாநிதி குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக நேற்று கேள்வி-பதில் வடிவில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலின் போது ரூ. 100 கோடிக்கும் அதிகமான பணத்தை தேர்தல் ஆணையமே கைப்பற்றியது. கரூரில் அன்பு நாதன் என்பவரின் வீட்டில் பெருமளவு பணம் கைப்பற்றப்பட்டது. திருப்பூர் அருகே 3 கன்டெய்னர்களில் கொண்டு செல்லப்பட்ட ரூ.570 கோடி சிக்கியது.

அரவக்குறிச்சி, தஞ்சாவூரில் ரத்து செய்யப்பட்ட தேர்தலை நடத்தும் முன்பு இந்த விவகாரங்களை தேர்தல் ஆணையம் வெளிப்படையாக அறிவிக்க வேண்டும். அப்போதுதான் அங்கும் நேர்மையான தேர்தலை நடத்த முடியும்.

### மத்திய உளவுத்துறை சதி

காங்கிரஸுக்கு ஒதுக்கப்பட்ட 41 தொகுதிகளில் 8ல் மட்டுமே வெற்றி பெற்றுள்ளது. இதுவே தி.மு.க. ஆட்சி அமைக்க முடியாததற்கு காரணம் என தி.மு.க.வினர் விவாதித்து வருவதாக சில ஊடகங்கள் 'கலக விதை' ஊன்றி வருகின்றன.

'தி ஹிந்து' (ஆங்கிலம்) நாளிதழுக்கு அளித்த பேட்டியில் 'கூட்டணி கட்சிகளின் வெற்றிக்கு தி.மு.க. உறுப்பினர்கள் முழு மூச்சோடு உழைக்கவில்லையோ என்றுதான் கருதுகிறேன்' என தெரிவித்திருந்தேன்.

இதனை மறைத்து தி.மு.க.வுக்கும் காங்கிரஸுக்கும் இடையே உள்ள புரிதலையும், நட்பையும் கெடுப்பதற்கு சிலர் வரிந்து கட்டிக் கொண்டு செயல்படுகிறார்கள். இந்தச் சேவையில் மத்திய அரசின் உளவுத் துறையும் ஈடுபடுத்தப்பட்டு தனது கைவரிசையைக் காட்டி வருவதாகவும், கற்பனை தகவல்களை பரப்பி வருவதாகவும் எனக்கு தகவல் வந்துள்ளது.

தி.மு.க. - காங்கிரஸ் இடையேயான உறவை சீர்குலைத்து தேசிய அரசியல்

அரங்கில் தி.மு.க.வை தனிமைப்படுத்தவும் தமிழகத்தில் காங்கிரஸ் பலவீனப்படுத்தவும் திட்டமிட்டு அந்த சக்திகள் வேலை செய்கின்றன. அதே நேரத்தில் அ.தி.மு.க. - பா.ஜ.க. இடையே உள்ள மறைமுக கூட்டும், திரைமறைவு பேச்சும், பரஸ்பர லாபமும் தங்குதடையின்றி தொடரவும் வேலை நடக்கிறது என்பதை தி.மு.க.வினர் புரிந்து கொள்ளவேண்டும்.

## கவரிமான் வேடமிட்ட புலி

தமிழகத்தின் நலனுக்காக தி.மு.க.வுடன் இணைந்து செயல் படத் தயார் என தெரிவித்துள்ள முதல்வர் ஜெயலலிதாவின் நாகரிகத்தையும், நல்லெண்ணத்தையும் நான் கெடுத்துவிடுவேன் என சிலர் பிரச்சாரம் செய்து வருகின்றனர்.

எம்.எல்.ஏ.வாக பதவியேற்க 5 ஆண்டுகளுக்கு பிறகு சட்டப்பேரவைக்குள் முதல் முறை சென்றேன். நான் பேரவைக்குள் வருவதை அறிந்த ஜெயலலிதா விருட்டென எழுந்து வெளியேறினார். இதுதான் அவரது நாகரிகம்.

அ.தி.மு.க.வின் தொலைக்காட்சியிலும் நாளிதழ்களிலும் என்னைப் பற்றியும் என் குடும்பத்தைப் பற்றியும் தொடர்ந்து அநாகரிகமான முறையில் விமர்சித்து வருகிறார்கள். அனைத்தையும் கண்டும், கேட்டும் அமைதியாக அரசியல் பயணம் செய்கிறேன். இவையெல்லாம் ஜெயலலிதாவுக்கு தெரியாமலா நடக்கின்றன? பிள்ளையையும் கிள்ளிவிட்டு, தொட்டிலையும் ஆட்டும் கலையில் அவர் வல்லவர். ஒரு பக்கம் அரசியல் நாகரிகத்தை அடித்து துவைத்து காயப்போடுவது, மறுபக்கம் இணைந்து செயல்பட விருப்பம் தெரிவிப்பதைப் போல நாடகமாடுவதுதான் ஜெயலலிதாவின் அரசியல். கானகத்துக் கடும் புலி கவரிமான் வேடம் போடுகிறது.

இவ்வாறு கருணாநிதி கூறியுள்ளார்.

27ம் பக்கத்தின் தொடர்ச்சி...

## MCCOCA - மெகோகோ இந்த வழக்கிற்கு பொருத்தமானதே அரசு வழக்கறிஞர் அவினாஷ் ரசல் பேட்டி

தனது 133 பக்க குற்றப்பத்திரிக்கையில் என்.ஐ.ஏ. குற்றம் சாட்டப்பட்டவர்களின் மீது மெகோகா (மஹாராஷ்டிரா மாநில திட்டமிட்ட குற்ற தடுப்புச் சட்டத்தின்) கீழ் ஏ.டி.எஸ். வழக்கு பதிவு செய்திருப்பது ஏற்புடையதல்ல. ஏனெனில் மெகோகா சட்டம் இந்த வழக்கில் பொருத்தமானது அல்ல என்கிறது என்.ஐ.ஏ.

ஆனால் 2008 மாலேகான் குண்டு வெடிப்பு வழக்கில் என்.ஐ.ஏ.வின் சிறப்பு வழக்கறிஞராக பணி புரிந்து வரும் அவினாஷ் ரசல் எகானாமிக் டைம்ஸ் என்ற பத்திரிக்கைக்கு அளித்த பேட்டியில் புரோகித், பிரக்யா உட்பட குற்றம் சாட்டப்பட்ட 10 நபர்களுக்கு எதிராக மொகோகா சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்திருப்பது ஏற்புடையதே என்றும் மெகோகா அதில் பொருத்தமானது தான் என்றும் கூறினார்.

இந்த குற்றப்பத்திரிக்கை பற்றி தன்னிடம் என்.ஐ.ஏ. எந்த ஒரு தகவலும் தெரிவித்திடவே இல்லை என்றும் தான் இந்த வழக்கிலிருந்து ராஜினாமா செய்ய இருப்பதாகவும் கூறினார்.

மேலும் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

“I Strongly said those arrested conspired to revolt against the government. They wanted to have Hindu Rashtra and they were trying to overthrow the government and that is why the provision of MCOCA is applicable.”

அதாவது, “கைது செய்யப்பட்டவர்கள் அரசாங்கத்திற்கு எதிராக புரட்சி செய்திட சதித்திட்டம் தீட்டியவர்கள் தாம் என்பதை நான் கடுமையாக கூறினேன். அவர்கள் இங்கு இந்து ராஷ்ரத்தை அமைத்திடவே விரும்புகிறார்கள். இந்த அரசு முறையை தூக்கி எறிந்திட முயற்சி செய்து வந்தார்கள். ஆகையால்தான் மெகோகா இதற்கு பொருத்தமானது என்று கூறினேன்.”

# அன்பகத்தின் அன்பான வேண்டுகோள்!

நாம் நன்றாக அறிவோம்!

திருக்குர்ஆனுக்குப் பின் இன்னொரு வேதம் இல்லை.

முஹம்மத் (ஸல்) அவர்களுக்குப்பின் இன்னொரு இறை தூதரில்லை. ஆதலால் அல்லாஹ்வின் வழி காட்டுதல்களை நம்மோடு வாழும் மக்களுக்கு எடுத்துச் சொல்லிட வேண்டிய கடமையைச் சுமப்பவர்கள் நாம்.

இந்தக் கடமையை நாம் செய்யத் தவறினால், இந்த மக்களுக்கு நேர் வழி கிடைக்காது என்பது மட்டுமல்ல, நாளை மறுமையில் அவர்கள் அல்லாஹ்வின் முன் நம்மைக் குற்றம் பிடிப்பார்கள். அதனால் நாம் அல்லாஹ்வின் வழிகாட்டுதலாம் இஸ்லாத்தை அனைவருக்கும் எடுத்துச் சொல்லியாக வேண்டும்.

இந்தக் கடமையை சமுதாயத்தின் சார்பில் 36 ஆண்டுகளாக இடைவிடாமல் நாம் செய்து வருகின்றோம்.

இஸ்லாத்தை ஏற்றுக் கொள்பவர்களுக்கு பல கல்வி நிறுவனங்களை நிறுவியுள்ளோம்.

அவற்றில், குடும்பத்தோடு இஸ்லாத்தை ஏற்றுக் கொள்பவர்களுக்கு இஸ்லாமியக் கல்வியைக் கற்றுக் கொடுக்கின்றோம்.

அத்தோடு நாங்கள் செய்து வரும் களப்பணிகள் பலப்பல. அவற்றின் இது அறிமுகம் ஒன்றை இங்கே தருகின்றோம்.

மிகுந்த சிரமங்களுக்கிடையே இவற்றைச் செய்து வருகின்றோம்.

நிதி நெருக்கடி அதிகமாகவே இருக்கின்றது.

அதனால், அல்லாஹ்வின் மார்க்கம் பரவிடவும் நிலை நிறுத்தப்படவும் உங்கள் நிதி உதவிகளை வாரி வழங்குங்கள்.

அல்லாஹ்விடம் அளப்பரிய கூலியைப் பெறுங்கள்.

**எமது தாஃவா முயற்சிகள் - 2015-2016**

**தாஃவா கலந்தாய்வு**

இன்று பல்வேறு விதமான அவமானங்கள் அழிவுகள் ஆகியவற்றை சந்தித்துக் கொண்டிருப்பவர்கள் தலித் பெருங்குடி மக்கள். ஆனால், அவர்களிடையே விடுதலையைப் பற்றிய பல்வேறு சிந்தனை போக்குகள். அதனால் பிளவுகள். அதிகமான தலைவர்கள், குறைவான தொண்டர்கள். ஆனால் உண்மையில் அவர்களுக்கு மிகவும் அதிகமாகத் தேவைப்படுவது இஸ்லாம்.

இந்த இஸ்லாத்தை விளக்கிச் சொல்லிடவும் அவர்களின் ஐயங்களுக்கு விளக்கம் தந்திடவும் அவர்களை ஒருங்கிணைத்து ஒரு விவாத அரங்கிற்கு

ஏற்பாடு செய்திருந்தோம். திருப்பூரில் நடைபெற்ற இந்த விவாத அரங்கில் 24 தலித் தலைவர்கள் கலந்து கொண்டார்கள். அவர்களின் கருத்திற்கு விளக்கங்கள் தரப்பட்டன.

ஆனால் அவர்கள் தேர்தலை மனதில் வைத்துக் கொண்டு கட்சிகளை துவக்குவதிலேயே கவனமாக இருந்தார்கள். இன்ஷா அல்லாஹ் தேர்தலுக்குப் பின் மீண்டும் இந்த முயற்சிகள் தொடரும்.

## காரைக்கால் (புதுச்சேரியில்) தாஃவா கருத்தரங்கம்





சுமார் 36 ஆண்டுகளுக்கு முன் நாம் மேற்கொண்ட (தாஃவா) - இஸ்லாமிய பிரச்சாரத்தின் மையமாக அமைந்தது காரைக்கால். இங்கே நாம் மேற்கொண்ட முயற்சியில் பலர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள் என்பதைப் பின்னர் நண்பர்கள் தெரிவித்தார்கள். (அல்ஹம்ந்து லில்லாஹ்).

இங்கே 13.3.2016 அன்று தலித் மக்களும் சமூக விடுதலையும் என்ற தலைப்பில் கருத்தரங்கம் ஒன்று நடந்தது. காரைக்காலில் இயங்கி வரும் வாழ்வியல் வழிகாட்டி மையம், தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட் இரண்டும் இணைந்தே இந்த நிகழ்ச்சியை நடத்தினார்கள். 130 தலித் களும் பல முஸ்லிம்களும் கலந்து கொண்டார் கள். நாம் தொடக்க நாள்களில் தாஃவா நிகழ்ச்சியை நடத்திய **AGM** முதலானோர் இதில் கலந்து கொண்டது பழைய வரலாற்றை நமக்கு நினைவூட்டியது. உற்சாகம் தந்தது. அல்ஹம்ந்து லில்லாஹ்!

இதனை நிகழ்ச்சியில் நிகழ்ச்சிக்கு களம் அமைத்துத் தந்த **M.S.A.** என்ற எம். செய்யித் அஹ்மத் நிறைவாகவே நினைவு கூர்ந்தார். நிகழ்ச்சியின் அறிமுகத்தையும் வரவேற் புரையையும் அவரே நிகழ்த்தினார். நிகழ்ச்சி யில் பல்வேறு தலித் அமைப்புக்களைச் சார்ந்த தலித் தலைவர்கள் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார்கள். உரையில் தலித் மக்களுக்கு இழைக்கப்பட்டு வரும் அநீதிகளைக் கோடிட்டுக் காட்டினார்கள்.

பின்னர் பல ஆண்டுகளுக்கு முன் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட முன்னாள் கண்ணையா இன்னாள் ஜக்ரிய்யா பாய், அன்றைய கலியப்பெருமாள் இன்னாள் கலீலுற்றஹ்மான் ஆகியோர் உரை நிகழ்த்தினார்கள். தங்கள் உரையில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பின் தங்கள் வாழ்வில் பெற்ற சமத்துவம், சகோதரத்துவம் ஏற்றம் இவற்றைப் பற்றி விரித்துரைத்தார்கள்.

தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட் இன் தலைவர் மு. குலாம் முஹம்மத் அவர்கள் இஸ்லாத்தை அறிமுகப்படுத்தினார் கள். பல பெண்களும் இதில் கலந்து கொண்டார்கள்.

வழக்கறிஞர் ரஃபீக் அவர்கள் நன்றியறிதலை நவின்றார்கள். நிகழ்ச்சிக்குப் பின் அனைவருக்கும் மதியம் சிறப்பான விருந்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அனைவரும் விருந்தில் கலந்து கொண்டு தங்களுக்குள் விவாதங்களில் ஈடுபட்டார்கள். அல்ஹமந்துலில்லாஹ்!

## தாஃவா ஏன்? எப்படி? பயிலரங்கங்கள்

## (DAWA ORIENTATION COURSES)

இந்தியாவில் நம்மோடு வாழும் சகோதர சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்கு இஸ்லாத்தை எடுத்துச் சொல்லிடுவது ஒரு தலையாயக் கடமை. இந்தக் கடமையை நிறைவேற்றிட வேண்டும் என்பதையும், அதனை இப்போதைய முயற்சிகளின் தொடராகவே கொண்டு சென்றிட வேண்டும் என்பதையும் எதிர்வரும் தலைமுறைக்கு எடுத்துச் சொல்லிட வேண்டும். அதற்கான பயிற்சியை அவர்களுக்குத் தந்தாக வேண்டும்.

இளைய தலைமுறையினரிடம், இஸ்லாத்தைப் பரப்பிட வேண்டும் என்ற ஆர்வம் அதிகமாகவே இருக்கின்றது. ஆனால் அதை எப்படித் தொடங்கிட வேண்டும் என்ற தயக்கம் அவர்களைத் தடுக்கின்றது. அதனால் அவர்களுக்கு தாஃவா-வில்அனுபவம் வாய்ந்தவர்களின் அனுபவங்களைச் சொல்லித் தருகின்றோம் இந்தப் பயிலரங்கங்களில்.

அதே போல் பயிலரங்கத்தின் ஒரு பகுதியாக கலந்து கொள்ளும் இளைஞர்களை களத்திற்கு அனுப்புகிறோம். அவர்கள் பஸ் நிலையங்களில் அல்லது பஸ் நிறுத்தங்களில், ரெயில் நிலையங்களில் குழுமும் மக்களிடம் மெல்ல பேச்சுக் கொடுக்க வேண்டும். இஸ்லாத்தை அறிமுகப்படுத்திட வேண்டும். மக்கள் சொல்லும் பதில் அவர்கள் எழுப்பும் வினாக்கள் இவற்றின் வழி, மக்கள் மன நிலையை இந்த இளைஞர்கள் தெரிந்து கொள்கின்றார்கள்.

வெகு ஜனங்களோடு எப்படிப் பழகிட வேண்டும் என்பதைக் கற்றுக் கொள் கின்றார்கள். பின்னர் மீண்டும் இந்த இளைஞர் கள் நமது பயிலரங்க அரங்கத்திற்கு வந்து இந்த அனுபவத்தை ஏனைய பயிற்சியாளர் களுடன் பகிர்ந்து கொள்வார்கள்.

மக்கள் எழுப்பும் வினாக்களுக்கு என்ன பதில் என்பதையும் இவர்களுக்கு சொல்லித் தந்திடுவோம். அதே போல், அந்தப் பதிலை எப்படி பக்குவமாக இங்கிதம் குன்றாமல் எடுத்துச் சொல்லிட வேண்டும் என்பதையும் அந்த பயிற்சி பெறுபவர்களுக்கு நாம் விளக்கிச் சொல்லிடுவோம். இதன் மூலம் எதிர்கால இஸ்லாமியப் பிரச்சாரர்களாக இஸ்லாமியக் களப் பணியாளர்களாக மாற்றி வருகின்றோம்.

இந்தப் பயிற்சிப் பட்டறைகளை கடந்த 25 ஆண்டுகளாக நடத்தி வருகின்றோம். நம்மிடம் பயிற்சி பெற்ற பல இளைஞர்கள் பல்வேறு வகையில் இஸ்லாமிய பிரச்சாரத்தைச் செய்து வருகின்றார்கள். இத்தகையதொரு பயிலரங்கம் குமரி மாவட்டம் பெருவிளையில் 31.01.2016 அன்று பெருவிளை மதரஸா மண்டபத்தில் நடைபெற்றது.

முன்னாள் பாதிரி எம்.சி. முஹம்மத் அவர்கள், வைகறை வெளிச்சம் ஆசிரியர் மு. குலாம் முஹம்மத் ஆகியோரும் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார்கள். ஆண்களும், பெண்களும் பெருவாரி யாகக் கலந்து கொண்டார்கள்.

25 ஆண்டுகளாக நாம் இடைவிடாமல் நடத்தி வரும் பயிலரங்கங்களின் பயனைக் கண்டு சகோதர இயக்கங்களும் இந்தப் பயிலரங்கங்களை நடத்தி வருகின்றார்கள். அல்ஹம்ந்துலில்லாஹ்.

பெருந்தியாக போராளி, தாஃவா களத்தில் நம்மை பிடித்து நிறுத்தியவர் ஷேஹ் அப்துல்லாஹ் அவர்கள் சிறப்புரை ஆற்றி நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தார்கள்.

நிகழ்ச்சிக்கு குமரிமாவட்டம் வடக்கு சூரன்குடி ஜமாஅத் தலைவர்கள் கா. முஹம்மத் ஃபாருக் அவர்கள் தலைமை தாங்கினார்கள். மஸ்கட் வாழ் தமிழ்நாடு முஸ்லிம்கள் நலச் சங்கம் பொதுச் செயலாளர் எஸ்.பி.எம். ஃபசல் அலீ முன்னிலை வகித்தார்.

சமுதாய ஆர்வலர் குமரி மாவட்டத்தில் பல நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து வருபவர் அலிகான் அவர்கள், சீதக்காதி அறக்கட்டளை 2015 ஆம் ஆண்டுக்கான இலக்கிய விருதை பெற்ற வைகறை வெளிச்சம் ஆசிரியர் மு. குலாம் முஹம்மத் அவர்களை பாராட்டி பொன்னாடை போத்தினார்கள்.

*குமரி மவாட்டம் தாருல் இஸ்லாம் பொறுப்பாளரான ஷேக் ஷமீம் அவர்கள் நன்றியுரை நவின்றார்கள்.*

## குமரி மாவட்டம் திட்டுவிளை (28.02.2016) கருத்தரங்கம்

## சாதிக் கொடுமைகளிலிருந்து விடுதலை அடையுங்கள் - இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளுங்கள் - நீதிபதி பா. கோபால கிருஷ்ணன் அன்பான அழைப்பு



### எதிர் இலக்கியங்கள்

*சாதி ஒழிந்தது என்ற நூலை இந்தியா முழுவதும் நாம் அறிமுகப்படுத்தி விநியோகித்து வந்தோம். தமிழகத்தில் இன்றளவும் 28 பொதுக்கூட்டங்கள் வழி அதனை அறிமுகப்படுத்தி உள்ளோம். அதே போல் தான் "ஒரு நீதிபதியின் விடுதலை முழக்கம்", "சிந்திப்பீர் செயல்படுவீர்" போன்ற நூல்களும்.*

*இந்த நூல்கள் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களிடையே ஏற்படுத்திய தாக்கம் இஸ்லாத்தின் எதிரிகளையும் பயங்கரமாகத் தாக்கிற்று. அதனால் அவர்கள் இஸ்லாத்தின் எதிரிகளைக் கொண்டே ஓர் எதிர் இலக்கியத்தைத் தயார் செய்தார்கள்.*

*அதுதான் "கருப்பாயி என்ற நூர் ஜஹான்" - ஒரு நாவல் போல் தோற்றம் தந்த இந்த நூல் 1981-82 ஆம் ஆண்டுகளில் நடந்த மீனாட்சிபுரம் மத மாற்றங்கள், ஒரு கிராமத்து மக்கள் ஒன்றாய் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டனர் என்பது ஒரு பொய், போலி என வாதித்தது.*




*மீனாட்சிபுரத்தில் மதம் மாறியவர்கள் தற்கொலை செய்து கொண்டிருக்கின்றார்கள்.*

*மீனாட்சிபுரத்து மதம் மாறிய தாழ்த்தப்பட்ட மக்கள் எதிர்பார்த்த சமுதாய சமத்துவம் இஸ்லாமிய சமுதாய அமைப்பில் கிடைக்கவில்லை என்றெல்லாம் அந்த நாவல் புருடாவிட்டது.*

*இந்த நாவல் தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களிடையே மிகவும் பரவலாக விநியோகிக்கப்பட்டது.*

*அரங்கங்கள் தோறும், இந்த நாவல் மேற்கோள் காட்டப்பட்டு, பிரச்சாரம் செய்யப்பட்டது.*

*இறுதியில் "சாதிஒழிந்தது" நூல் வெளியே வரவும் அஃதோர் மக்கள் இயக்கமாக மாறிடவும் காரணமாக அமைந்த நம்மை வம்பிழுத்தார்கள். கருப்பாயி என்ற நூர்ஜஹான் என்ற நாவலை எழுதிய அன்வர் பாலசிங்கம் அவர்களுடன் நேருக்கு நேர் விவாதம் ஒன்றை ஏற்பாடும் செய்தார்கள்.*

தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்த பசுகௌதமன் என்பவர்தான் ஏற்பாடு செய்தார்.

பசுகௌதமன் பெரியாரிஸ்ட் எனக் கூறப்படக்கூடிய பெரியாரைப் பின்பற்றுபவர் எனக் கருதப்படக்கூடியவர். அவரே இஸ்லாத்தைக் கொச்சைப்படுத்தும் நிகழ்ச்சி ஒன்றுக்கு ஏற்பாடு செய்திருந்தது ஆச்சர்ய மானது. எதிரிகள் யார் வழியாக வருகின்றார் கள் என்பதைப் புரிந்திட முடிந்தது.

விவாதத்திற்கு முன்பு மீனாட்சிபுரம் சென்று மதம் மாறியவர்கள் தற்கொலை செய்து கொண்டது உண்மைதானா?

அங்கு இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட (தாழ்த்தப்பட்ட) பெண்களுக்கு திருமண மாகாத நிலை இருக்கின்றதா?. இதனால் அவர்கள் தற்கொலை செய்து கொள்கின்றார் கள் என்பதெல்லாம் உண்மையா? என்பதை ஆய்வு செய்ய வேண்டும்.

அப்படி உண்மையிலேயே திருமண மாகவில்லை என்றால் நாம் அதற்கான ஏற்பாடுகளைச் செய்திட வேண்டும் என்ற எண்ணங்களோடு அங்கே களத்திற்குச் சென்றோம்.

ஆனால் அங்கு அப்படி எதுவுமே நடக்கவில்லை. அந்த மக்கள் உற்சாகமாக சந்தோஷமாக வாழ்ந்து கொண்டிருக் கின்றார்கள்.

அடர்ந்து வந்த அத்தனை இன்னல் களுக்கிடையேயும், இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டது குறித்துப் பெருமைப் பட்டார்கள்.

தங்கள் பெண்களுக்கு மணமகன் கிடைப்பதில் கிஞ்சிற்றும் சிரமங்கள் இல்லை. இப்போது திருமணமாகாமல் யாருமில்லை. பல பெண்கள் படித்துக் கொண்டிருக் கின்றார்கள். அவர்களின் படிப்பு முடிந்ததும் திருமணம் நடைபெறும் என்பதையும் சொன்னார்கள்.

ஆக முழுப்பொய்களை பாசிஸ்ட்டு களின் தூண்டுதலினால் அன்வர் பாலசிங்கம் என்பவர் ஒரு நாவல் வழியாக பரப்பிக் கொண்டிருக்கின்றார் என்பதை அன்வர் பாலசிங்கம் பசு கௌதமன் ஆகியோரிடம் அரங்கத்தில் வைத்து சொல்லால் அறைந்து அவர்களுடைய முகத்திரையைக் கிழித்தோம்.

இதனை முழுமையாக "வைகறை வெளிச்சம்" மாத இதழில் வெளியிட்டோம். பார்க்க வைகறை வெளிச்சம் மே- ஜூன் 2012.

1995 ஆம் ஆண்டு மால்கம்-**X** என்ற நூலை வெளிக்கொணர்ந்தோம். வெளிவந்த நாள் முதலே இந்த நூல் பரபரப்பாக விற்பனையானது. படித்த பலர் நாங்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதற்கு மிகவும் உந்துதலாக இருந்தது இந்த நூல்தான் என நினைவு கூர்ந்தனர்.

மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் M & L அமைப்பைச் சார்ந்தவரான 'அறிவு' என்பவர் தான் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதற்கு முன்பு மூன்று முறை இந்த நூலைப் படித்ததாகக் கூறினார்.

இன்னும் சிலர் இந்த நூலை மையமாகக் கொண்டு சில அமைப்புகளைத் தொடங்கி தலித் மக்களின் விடுதலைக்காக இஸ்லாத்தை முன் வைத்துப் போராடி வருகின்றார்கள்.

மொத்தத்தில் இந்த நூல் ஏற்படுத்திய தாக்கம் பலமானது.

அமெரிக்காவின் நிறவெறி கொள்கைகளுக்கு எதிராக இஸ்லாத்தை முன் வைத்துப் போராடியவர் மால்கம்-**X** என்ற மாலிக் அல் ஷபாஸ்.

உலகெங்கும் இரண்டு லட்சம் கறுப்பர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதற்கு காரணமாக அமைந்தவர்.

இதனால் நாம் வெளியிட்ட இந்த நூலை எதிர்க்க தலைப்பட்டார்கள். மால்கம்-**X** என்ற பெயரில் பல நூல்களை வெளியே கொண்டு வந்தார்கள். அதில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதையும், மக்கா நகரம் சென்று ஹஜ் செய்ததையும் கூட மறைத்தார்கள். அவர் ஏதோ கறுப்பர்களுக்காக ஓர் இயக்கத்தை நடத்தினார் என்பதோடு முடித்துக் கொண்டார்கள். நாம் அவர்களிடம் இப்படி

அப்பட்டமாக உண்மைகளை மறைக்கின்றீர்களே எனக் கேட்ட போது, "நாங்கள் மதநீக்கம் செய்து அவருடைய வாழ்க்கையைத் தந்திருக்கின்றோம்" எனக் கூறினார்கள்.

இதில் பல இடதுசாரி சிந்தனையாளர்களும் திராவிட சிந்தனையாளர்களும் கூட உண்டு.

நாம் வெளியிட்ட நூலின் தாக்கத்தைப் பறைசாற்றியதோடு இது எதிரிகள் இஸ்லாத்தின் எதிரிகள் எவ்வளவு முனைப்போடு செயல்படுகின்றார்கள் என்பதையும் தெளிவுபடுத்துகின்றது.

### திருக்குர் ஆன் விநியோகம்

இஃதல்லாமல் கடந்த 6 ஆண்டுகளாக திருக்குர்ஆனை படிக்க விரும்பும் சகோதர சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்கு திருக்குர்ஆனை விநியோகித்து வருகின்றோம். இதற்கான அழைப்பு நாம் நடத்தி வரும் வைகறை வெளிச்சம் மாத இதழில் மாதந்தோறும் விடுக்கப்படுகின்றது.

பலநூறு பேர் இதன் வழி திருக்குர்ஆனைப் பெற்றுள்ளார்கள். இதற்கான திருக்குர்ஆன் பிரதிகளை நல்ல உள்ளங் கொண்டவர்கள் வாங்கி நம்மிடம் ஒப்படைத்து விடுகின்றார்கள்.

### அன்பகம் - இஸ்லாமியக் கல்விக்கூடம்

36 ஆண்டுகளாக நாம் தொடர்ந்து செய்து வரும் தாஃவா பணிகளில் பலர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருக்கின்றார்கள்.

அவர்களுக்கு நடைமுறை வாழ்க்கையில் இஸ்லாத்தை எப்படி செயல்படுத்துவது, வாழ்வது என்பதை எடுத்துச் சொல்லி தருவது நமது தார்மீகக் கடமை.

அதற்காக 1996 ஆம் ஆண்டில் கும்பகோணத்தை அடுத்துள்ள திருப்பனந்தாள் என்ற ஊரில் அறிவகம் என்றொரு கலாசாலையைத் தொடங்கினோம். இங்கு



மாணவர்கள் அதிக அளவில் வந்து குவிந்தது அரசின் கண்களை உறுத்தியது. இதனால் அரசு கெடுபிடிகளைத் தந்தது.

வீட்டின் உரிமையாளர் ஓர் இஸ்லாமிய பெண்மணி. அரசின் நெருக்கடிகளுக்குத் தாளாமல் வீட்டைத் திரும்பக் கேட்டதால் நாம் அதனை ஒப்படைத்துவிட்டு நமது தாஃவா களத்தின் மற்றொரு மையமான தேனி மாவட்டம் (அப்போது மதுரை மாவட்டம்) முத்துத்தேவன் பட்டியில் அங்குள்ள தன்னேரில்லா இஸ்லாமிய அழைப்பாளர் ஹிதயாத்துல்லாஹ் அவர்களின் வீட்டுக்கு மாற்றினோம்.

ஒரு குடிசையில் தான் முதன் முதலில் தொடங்கப்பெற்றது. பின்னர் அந்த இடத்தையே வாங்கி மெல்ல மெல்ல கட்டிடமாக எழுப்பினோம். பின்னர் அதை விரிந்து பரந்த கட்டிடமாக மாற்றினோம்! அல்ஹம்ந்துலில்லாஹ்!

பின்னர், இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளும் பெண்களின் எண்ணிக்கை







அதிகமானது. அதனால் பெண்களுக்கான ஒரு கல்விக்கூடம், இஸ்லாத்தின் எல்லாப் பகுதிகளையும் கற்றுத் தரும் ஒரு கல்விக் கூடம் வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது. இந்தக் கோரிக்கையை நிறைவு செய்யவே நெல்லை ஏர்வாடியில் ஒரு கல்விக் கூடத்திற்கு ஏற்பாடு செய்தோம்.

அதுவும் தொடக்கத்தில் ஒரு வாடகைக் கட்டிடத்திலேயே தொடங்கப் பெற்றது.

பின்னர் அதற்கான ஐந்து ஏக்கர் இடம் வாங்கி அதில் சொந்தக் கட்டிடத்தைக் கட்டினோம்.

இந்நிலையில்தான் டி.எம். மணி அவர்கள் 2007 ஆம் ஆண்டில் இஸ்லாத்தை ஏற்றார்கள். அவரின் கடும் உழைப்பால் அந்தப் பகுதியில் பலர் குடும்பத்தோடு இஸ்லாத்தை ஏற்றார்கள். ஆகவே குடும்பத்தோடு இஸ்லாத்தை ஏற்றுக் கொள்பவர்களுக்கு ஒரு கல்வியகம் வேண்டும் என்ற கோரிக்கையை நிறைவு செய்யவே கும்பக் கோணத்தில் அன்பகம் என்ற இஸ்லாமிய கல்வி நிறுவனத்தைத் தொடங்கினோம்.

இன்றளவும் 158 குடும்பத்தைச் சார்ந்த 1096 பேர் இஸ்லாமிய கல்விக் கற்று சென்றுள்ளார்கள்.

இங்கு கல்வி ஆண்டுக்கு 3 மாதங்கள்.

ஆண்களுக்கு கத்னா உட்பட அனைத்து செலவுகளும் இலவசம்.

பெண்களுக்கு - திருமணம் மகப்பேறு அனைத்தும் இலவசம்.

வாடகைக் கட்டிடத்தில்தான் இன்றளவும் நடந்து வருகின்றது.

ஒரு மாற்றம் - இப்போது வசதிகள் அதிகமான ஒரு கட்டிடத்தில் நடந்து வருகின்றது.

சொந்தக் கட்டிடத்திற்கு மாற்றிட முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். இன்ஷா அல்லாஹ். விரைவில் சொந்தக் கட்டிடத்திற்கு மாற்றப்படும் உங்கள் ஆதரவுடனும் ஒத்துழைப்புடனும்.

### இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் மடக்கோலைகள்

வாழ்வின் நோக்கம்? என்ற தலைப்பில் ஒரு பிரசுரத்தை நாம் தொடர்ந்து பிரசுரித்து வந்தோம்.

இதுவரை சுமார் ஒரு லட்சம் பிரசுரங்களைப் பிரசுரித்திருக்கின்றோம்.

150 பேர் திருக்குர்ஆன் பிரதிகளை கேட்டுக் கேட்டுப் பெற்றுள்ளார்கள். 120 பேர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டுள்ளார்கள். அல்ஹம்ந்துலில்லாஹ்

மிகக் குறைவான செலவில் அதிகம் பேர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.

இந்த அழைப்பேட்டைதொடர்ந்து விநியோகம் செய்து வருகின்றோம்.

## இதுவரை பேசப்படாத பெரும் ஊழல்!

# கிருஷ்ணா – கோதாவரி நிலவாயு ஊழல்!

பணமும் வர்த்தகமும் என் ரத்தத்தில் ஊறியவை - 2014-ல் ஜப்பானுக்குச் சென்றிருந்த போது அந்நாட்டு முதலீட்டாளர்கள் கூட்டத்தில் பிரதமர் நரேந்திர மோடி பெருமைப்படப் பேசியது இது. அந்த ஒரு சந்தர்ப்பத்தில் தான் அவர் தன்னைப் பற்றி மிகையாகவோ ஜோடனையாகவோ ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. இந்த அரிய குணத்தின் அப்பட்டமான வெளிப்பாடுதான் கிருஷ்ணா- கோதாவரி வடிநிலப் பகுதியில் நடந்த இயற்கை நிலவாயுக் கண்டுபிடிப்பு மோசடி. எந்த வாயுவாக இருந்தாலும் கண்ணுக்குத் தெரியாமல் காற்றில் கரைந்து விடும் என்பது நமக்குத் தெரியும். இல்லாத வாயுவைக் கண்டுபிடித்து வெளியில் எடுப்பதாக 'பாவனை செய்ய' அசாதாரணத் திறமையும், சூழ்ச்சிசெய்யும் மனமும் தேவை. நடந்ததையெல்லாம் எவர் கண்ணிலும் படாமல் மறைக்க மிகுந்த திறமைசாலியாக இருக்க வேண்டும். இதுதான் கிருஷ்ணா- கோதாவரி வடிநில வாயு மோசடியின் கதைச் சுருக்கம். தலைமைக் கணக்குத் தணிக்கை யாளரின் 5 அறிக்கைகளில் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ள ரூ. 19,700 கோடி மதிப்புள்ள இந்த ஊழலை நாடே அறியாதபடி பார்த்துக் கொண்ட திறமைக் காகப் பிரதமர் மோடியை வெகுவாகப் பாராட்டலாம்.

அரசுத் துறை நிறுவனமான குஜராத் மாநில பெட்ரோலியம் கார்ப்பரேஷன் (ஜி.எஸ்.பி.சி.) கிருஷ்ணா - கோதாவரி வடிநிலப் பகுதியில் ஆழ்கடலில் நிலவாயு இருப்பதைக் கண்டுபிடித்திருப்பதாக குஜராத் மாநில முதலமைச்சராக இருந்தபோது நரேந்திர மோடி 2005 ஜூன் 26-ல் அறிவித்தார். அந்த வாயுவின் அளவு ரூ. 2,20,000 கோடி மதிப்புள்ள 20 லட்சம் கோடி கன அடி என்றார். நாடே அச் செய்தி கேட்டு வியப்பில் ஆழ்ந்தது. மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சக அதிகாரிகள் பேச முடியாமல் வாயடைத்து நின்றனர். 2007 டிசம்பரில் உற்பத்தி தொடங்கும் என்றும் நிலவாயு உற்பத்தியில் நாடு தன்னிறைவு பெற்றுவிடும் என்றும் கூட மோடி அறிவித்தார். இப்போது ஆண்டு 2016. மோடி அறிவித்து கிட்டத்தட்ட 11 ஆண்டுகள் ஆகின்றன. அந்த வடிநிலத்திலிருந்து இன்னமும் ஒரு கன அடி நிலவாயு கூட எடுக்கப்படவில்லை.

ஏன்? ஏனென்றால் அங்கு நிலவாயுவே கிடையாது! ஜி.எஸ்.பி.சி. என்ற நிறுவனம் இத்தனை ஆண்டுகளில் நிலவாயுவைத் தேட ரூ. 19,700 கோடியைச் செலவிட்டுள்ளது.

### மோசடி எங்கே வந்தது?

பெட்ரோலிய கச்சா எண்ணெய், இயற்கை நிலவாயு ஆகியவற்றைக் கண்டுபிடிக்கும் முயற்சிகள் பல உலக அளவில் இதைப் போலத் தோல்வியில் முடிந்துள்ளன. உலகின் மிகச் சிறந்த நிறுவனங்கள்கூட இப்படி முயற்சி செய்து வெறுங்கையுடன் திரும்பி யுள்ளன. எனவே, இதில் மோசடி எங்கே வந்தது? எண்ணெய் அல்லது நிலவாயுவைக் கண்டுபிடித்து எடுக்கும் முயற்சிகள் அனைத்து மே நிச்சயம் வெற்றிதரும் என சொல்ல முடியாதவை. அதிக செலவுபிடிப்பவை. நிச்சயமாக நிலவாயு அல்லது எண்ணெய் கட்டுப்படியாகும் அளவுக்குக் கிடைத்துவிடும் என்பது நிச்சயமில்லைதான். நிலவாயுவோ எண்ணெயோ எதிர்பார்த்தபடி இல்லை என்று தெரிந்தால், உடனே துரப்பணப் பணியை நிறுத்திவிடுவார்கள். அல்லது சோதனை முயற்சிக்கு ஆகும் செலவைப் படிப்படியாகக் குறைத்துக் கொண்டே வருவார்கள். ஜி.எஸ்.பி.சி. மேற்கொண்ட முயற்சி அப்படிப்பட்டதல்ல என்பதைத்தான் கீழே விவரிக்கப்பட்டுள்ள சம்பவங்கள் தெரிவிக்கின்றன.

மிகுந்த முக்கியத்துவமும் மிக நவீனத் தொழில் நுட்பம் பயன்படுத்தப்பட வேண்டியதுமான இந்த ஆய்வுப் பணிக்கு தொழில் நுட்பப் பங்குதாரராக 'ஜியோ குளோபல் ரிசோர்சஸ்' என்ற நிறுவனத்தைத் தான் ஜி.எஸ்.பி.சி. சேர்த்துக் கொண்டது. இந்நிறுவனம் 2 தனி நபர்களுக்குச் சொந்த மானது. கேரி சோபர்ஸ், கார்லோஸ் பிராத் வெயிட் என்ற 2 கிரிக்கெட் பிரபலங்களின் நாடான பார்படாஸ் தீவைச் சேர்ந்தது. ஜியோகுளோபல் நிறுவனம் மொரிஷியஸ் நாட்டில் உள்ள ராய் குழுமம் என்ற நிறுவனத்துடன் கூட்டு ஒப்பந்தத்தைச் செய்து கொண்டது. மொரீஷியஸ் நாடு எண்ணெய்த் துரப்பணப் பணிக்காக அல்ல. வரி ஏய்ப்பு செய்வோருக்கு சொர்க்கபுரி என்று அறியப்பட்ட நாடு. கிருஷ்ணா - கோதாவரி வடிநிலப் பகுதியில் நிலவாயுவை அகழ்ந் தெடுக்கும் சோதனை முயற்சி ஆரம்பத் திலிருந்தே ஏதோ துர்வாடையுடன் தான் தொடங்கியது.

## ரூ. 4,800 கோடி கடன் ஏன்?

நிலவாயு கண்டுபிடிக்கப்பட்ட பிறகு 2007 முதல் தயாரிப்பு தொடங்கிவிடும் என்று நரேந்திர மோடி 2005-லேயே அறிவித்ததை நினைவுகூர வேண்டும். அறிவித்த படி 2007-ல் அல்ல 2009-ல் தான் கிருஷ்ணா- கோதாவரி வடிநிலத்தில் நிலவாயுவை அகழ்ந்தெடுப்பது தொடர்பாக 'கள வளர்ச்சித் திட்டம்' தயாரித்து அளிக்கப்பட்டது. வடிநிலத் திலிருந்த இயற்கை நிலவாயு எப்படி அகழ்ந்தெடுக்கப்படும் என்று சில நூறு பக்கங்களைக் கொண்ட அந்த அறிக்கை விவரித்தது. நிலவாயு அகழப்படும் என்ற அறிவிப்புக்குப் பிறகு, எப்படி அகழப்படும் என்று விளக்கமாக அறிக்கை தயாரிக்கப் பட்ட காலம் வரையில் ஜி.எஸ்.பி.சி. நிறுவன மானது அரசுத் துறை வங்கிகளிடமிருந்து ரூ. 4,800 கோடி கடன் வாங்கியிருந்தது. வெறும் அறிக்கை தயாரிக்க ரூ. 4,800 கோடி செலவு பிடித்திருக்க முடியாது. வடி நிலத்தின் ஆழத்திலிருக்கும் எரிவாயுவைக் கண்டு பிடித்து எடுப்பதற்கு முன்னதாகவே இத்தனை கோடி ரூபாய் கடன் ஏன் வாங்கப்பட்டது என்ற கேள்வி பிறக்கிறது.

2009-ல் வெளியான திட்ட அறிக்கை மோடியின் அறிவிப்பு அதிகப்படியான எதிர்பார்ப்பு என்று தெரிவித்துவிட்டு, அதில் 90 சதவீதம் அளவைக் குறைத்தது. இந்த நிலவாயு அகழ்வுத் திட்டமே வீணான முயற்சி, ஒரு அலகுக்கு (எம்.எம்.பி.டி.யு.) 57 டாலர் என்று இந்த நிலவாயுவை விற்க முடியாதென்றால் நிலவாயு அகழ்வுப் பணியையே நிறுத்திவிடலாம் என்று வளர்ச்சித் திட்ட அறிக்கை கூறியது. அப்போது அங்கீகரிக்கப்பட்ட நிலவாயு விற்பனை விலை ஒரு அலகுக்கு 4.2 டாலர்கள்தான். எனவே, அந்த முழு திட்டமும் கட்டுப்படியாகாதது, பணத்தையும் நேரத்தையும் உழைப்பையும் விரயமாக்குவது, அப்போதைய நிலையிலேயே இந்த அகழ்வுப் பணி முயற்சியை அரசு கைவிட்டிருக்க வேண்டும். அப்படியிருந்தும் அப்போது குஜராத்தில் ஆட்சியில் இருந்த மோடி அரசு, ஜி.எஸ்.பி.சி.யின் இறக்கைகளின் கீழ் அடைக்கலம் புகுந்த, சந்தேகத்துக்கிடமான பல நிறுவனங்களுக்கு ஒப்பந்தங்களை வழங்க விரிவான திட்டத்தை வகுத்தது.

## நஷ்டத்துக்கு விற்க முடியுமா?

கிருஷ்ணா - கோதாவரி வடிநிலத்தில் இல்லாத வாயுவுக்காக எண்ணெய்த் துரப்பண மேடைகளில் பொருத்துவதற்காகத் துரப்பணக் கருவிகளை வாங்க கூட்டுச் செயல்பாட்டு நிறுவனம் முடிவெடுத்தது. துரப்பணக் கருவிகளை அளித்தே பழக்கப்பட்டிராத 'டிஃப் டிரில்லிங்' என்ற நிறுவனத்துக்குத் துரப்பண மேடைக் கருவிகளுக்கான ஒப்பந்தத்தை அளித்தது. இந்தியாவிலேயே மிகப் பெரிய நிலவாயு இருப்பு கண்டுபிடிக்கப்பட்டுவிட்டதாக மோடி அறிவித்ததற்கு வெகு நாட்களுக்கு பிறகு, அதாவது 2007ல் தான் டஃப் டிரில்லிங் நிறுவனம் நிறுவப்பட்டது.

2015 மார்ச் வரையில் மட்டும் டஃப் டிரில்லிங் மற்றும் அதே போன்ற பிற

நிறுவனங்களுக்கு ரூ. 5,000 கோடிக்கும் மேல் செலவிடப்பட்டிருக்கிறது. கடந்த 10 ஆண்டுகளில் மட்டும் கிருஷ்ணா - கோதாவரி வடிநிலப் பகுதி நிலவாயு உற்பத்திப் பணிக்காக ரூ. 19,700 கோடிக்கும் மேல் செலவிடப் பட்டிருக்கிறது. அப்படியே நிலவாயு கண்டு பிடிக்கப்பட்டிருந்தாலும், அதை நஷ்டத் துக்குத்தான் விற்றிருக்க முடியும். காரணம், அதை வெளியே எடுப்பதற்கு ஆகும் செலவைவிட மிகக் குறைந்த விலையில்தான் சர்வதேசச் சந்தையில் நிலவாயு கிடைத்துக் கொண்டிருக்கிறது. உற்பத்தி விலையைவிட விற்பனை விலை குறைவாக இருக்கும் பட்சத்தில் தயாரிப்பை மேற்கொள்வதைவிட சும்மா இருக்கலாம் என்பதை பணமும் வர்த்தகமும் தன் ரத்தத்தில் ஊறியவை என்று அறிவித்துக் கொண்ட தலைவரும் உண்மை யிலேயே அறிந்திருப்பார்.

## ஜி.எஸ்.பி.சி.க்கு இவ்வளவு பணம் எப்படிக் கிடைத்தது? உள் நோக்கம் என்ன?

1979ல் குஜராத் மாநில அரசால் உருவாக்கப்பட்ட ஜி.எஸ்.பி.சி. நிறுவனத்துக்கு 2007 மார்ச் 31 வரையில் கடன் என்பதே ஏற்படவில்லை. 2008 தொடங்கி 2015 வரையில் மொத்தம் ரூ. 19,720 கோடியை 13 அரசுத்துறை வங்கிகளிடமிருந்து கடனாகப் பெற்றிருக்கிறது. இந்தப் பணம் முழுவதும் சந்தேகத்துக்கிடமான நிறுவனங்களுக்குத் தரப்பட்டிருக்கிறது. இந்த நிறுவனங்களின் உள்நோக்கம் என்ன வென்பது தெரியவில்லை. பிரதமரான பிறகு வாராக் கடன்கள் குறித்து வருத்தப்படவும் அரசு வங்கிகளிடம் கடன் வாங்கிய தொழிலதிபர்கள் குறித்துப் பேசவும் அவரால் முடிகிறது. உண்மையான வர்த்தகத்துக்கு அல்லாமல் வேறு எதற்காக வோ கோடிக்கணக்கில் கடன் வாங்கியுள்ள ஜி.எஸ்.பி.சி. போன்ற நிறுவனங்களால்தான் அரசு வங்கிகளே வாராக் கடன் சுமையில் ஆழ்ந்து கிடக்கின்றன.

## அனைத்துக்கும் ஆதாரம் உண்டு

கிருஷ்ணா - கோதாவரி வடிநில ஊழல் என்பது, நிலவாயு கிடைத்துவிட்டது என்ற போலியான அறிவிப்பு மூலம், மாநில அரசுத் துறை நிறுவனத்தைப் பயன்படுத்தி நிலவாயுவை அகழ்வதற்காக அல்ல. கோடிக்கணக்கான ரூபாயை அரசு வங்கிகளிடமிருந்து கறப்பதற்காக என்று புரிகிறது. 2015-ல் தனது தணிக்கை அறிக்கையில் கோடிக்கணக்கான ரூபாயைக் கடனாக வாங்கிக் கொண்டு தேவையற்ற பயனற்ற நிலவாயு அகழ்ந்தெடுக்கும் முயற்சியில் ஈடுபட்டதை தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் பக்கம் பக்கமாகத் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியிருக்கிறார். ஆனால், செய்தி ஊடகத்திலோ மின்னணு ஊடகத்திலோ இது குறித்து ஒரு செய்தி கூடக் கண்ணில் படவில்லை. இது அரசியல் நோக்கில் கூறப்படும் குற்றச்சாட்டு அல்ல. இந்தக் கட்டுரையில் உள்ள தகவல்கள் அனைத்துமே ஆதாரப்பூர்வமான பல ஆவணங்களிலிருந்து திரட்டப்பட்டவை. செபி நிறுவனத்திடம் ஜி.எஸ்.பி.சி. நிறுவனம் அனுமதி கோரி அளித்த ஆரம்ப கால பங்கு விற்பனை உட்படப் பல சான்றுகள், ஜியோ குளோபல் நிறுவனம் செபியிடம் அமெரிக்காவில் தாக்கல் செய்த தகவல்கள், கம்பெனிகள் நடவடிக்கைக்கான துறை அமைச்சகப் பதிவேடுகள் உள்ளிட்ட பல ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

இந்த ஊழல் பற்றி - ஊழல் என்ற வார்த்தையைத் தவிர வேறு எந்த வார்த்தையாலும் இதை அழைக்க முடியாது. உச்ச நீதிமன்றத்தில் இப்போது பணிபுரியும் நீதிபதியைத் தலைவராகக் கொண்டு உடனடியாக விசாரிக்க வேண்டும்.

## பகுதி -2

2005 ஆம் ஆண்டு இரண்டு தொழில் நிறுவனங்கள் ஒரு புதிய துணிகரமான முயற்சியில் இறங்கின. ஒன்று விமான வர்த்தக துறையிலும், மற்றொன்று நில வாயு அகழ்வு துறையிலும் இறங்கின. பெருமளவில் விமான உற்பத்திக்கான அனுமதி கிடைத்திருப்பதாக அறிவித்தது ஒரு நிறுவனம். கிருஷ்ணா - கோதாவரி வடிநிலப் பகுதியில் ஆழ்கடலில் பெருமளவில் நிலவாயு இருப்பதை கண்டுபிடித்துள்ளோம் என அறிவித்தது மற்றொரு நிறுவனம். அதன் பின்னர் வந்த




அடுத்த 5 ஆண்டுகளில் இரண்டு நிறுவனமும் ரூபாய் 6,300 கோடியை கடனாகப் பெற்றன. இந்த இரண்டு நிறுவனங்களின் தொழில் களுமே உருத்திரிந்து போனது. ரூபாய் 9,000 கோடி கடனை வங்கிக்கு திருப்பி செலுத்த முடியாமல் போன விவகாரம் வெளியே தெரிய வர அது தன்னுடைய ஏர்லைன் நிறுவனத்தை இழுத்து மூடியது. ரூபாய் 19,000 கோடி கடன் இருந்தும் மற்றொரு நிறுவனம் தொடர்ந்து இயங்கி கொண்டு இருக்கின்றது. இதில் மூடப்பட்ட ஏர்லைன் நிறுவனம் கிங்பிஷர். இயங்கி கொண்டிருக்கும் மற்றொரு நிறுவனம் குஜராத் மாநில பெட்ரோலிய கார்ப்பரேஷன். கிங்பிஷர் ஏர்லைன் நிறுவனமும் அதன் தள கர்த்தருமான விஜய் மல்லையாவும் அவமதிப்புக்கு உள்ளாக்கப் பட்டன. அந்நிறுவனத்தின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டன. அது தன் புகழை இழந்தது. குஜராத் மாநில பெட்ரோலிய கார்ப்பரேஷன் இந்த வித சோதனைகளுக்கு அப்பாற்பட்டதா என்ன?

கிருஷ்ணா - கோதாவரி நிலவாயு ஊழலை இன்னும் சற்று தெளிவாக புரிந்து கொள்வோம். ஆபத்துகளும், தோல்விகளும் தொழிலில் ஏற்படலாம். அதிலும் பொதுத்துறை சார்ந்த தொழில்கள் அதிகம் தோல்வியையே சந்திக்கும். ஆனால் ஒரு தொழிலை ஆரம்பித்து அதில் எதிர்பார்க்காத தோல்வியை சந்தித்தது என ஜி.எஸ்.பி.சி. யின் கதையை கூறிட இயலாது. 2010 ஆம் ஆண்டு கிருஷ்ணா - கோதாவரி வடிநிலப் பகுதியில் நிலவாயுவே இல்லை அல்லது மிகச் சிறிய அளவே உள்ளது என ஜி.எஸ்.பி.சி. ஒத்துக் கொண்டது. எந்த ஒரு தொழிலிலும், பொதுத்துறை நிறுவனங்கள் ஏற்றுக் கொண்ட வேலையிலும் கூட இழப்புகளை ஈடு செய்வதற்கு அதன் முதலீடுகளை குறைத்து விடுவர். ஆனால் அதற்கு பதிலாக கிருஷ்ணா - கோதாவரி வடிநிலப் பகுதியில் நிலவாயு இல்லை என்று ஒத்துக் கொண்ட பின்னரும் பெருமளவு கடன் குவிப்பில் மகிழ்ந்தது ஜி.எஸ்.பி.சி.

Gaffney, Cline & Associates என்ற உலக பிரசித்தி பெற்ற நிலவாயு கையிருப்புகளை மதிப்பீடு செய்யும் நிறுவனம் 2005 முதல் 2015 ஆம் ஆண்டு வரை ஜி.எஸ்.பி.சி.யிடம் எவ்வளவு நிலவாயு கையிருப்பு இருந்தது என்பதை மதிப்பீடு செய்து வெளியிட்டது. இது ஜி.எஸ்.பி.சி.யின் ஆண்டிறுதி அறிக்கையிலும் வெளியிடப்பட்டது. இந்த பட்டை விளக்கப் படங்களை கவனியுங்கள். 2005 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு வருடமும் எவ்வளவு வேகமாக நிலவாயு இருப்பு குறைந்து கொண்டே வருகின்றது. அதே படத்தில் காட்டப்பட்டுள்ள புள்ளிக் கோடுகள் வங்கிகளிடமிருநது ஜி.எஸ்.பி.சி. எவ்வளவு கடன் வாங்கியுள்ளது என்பதை குறிக்கிறது. இது பூஜ்ஜியத்தில் இருந்து 20,000 கோடி வரை உயர்ந்து கொண்டே போவதை காணலாம். அந்நிறுவனத்தின் சொந்த மதிப்பீடுகளே கிருஷ்ணா - கோதாவரி வடிநிலப் பகுதியில் நிலவாயு இருப்பு கணிசமாக குறைந்து கொண்டே போவதை குறிக்கும் பொழுது எவ்வாறு ஒவ்வொரு வருடமும் ஜி.எஸ்.பி.சி. கடனை பெற்றுக் கொள்ள அனுமதிக்கப்பட்டது? இந்த பணம் எங்கிருந்து வந்தது? எதற்காக இப்பணம் செலவழிக்கப்பட்டது?

பொதுத் துறை நிறுவனங்களில் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் கிட்டத்தட்ட 15 வங்கிகள் ரூபாய் 20,000 கோடி கடனை ஜி.எஸ்.பி.சி. க்கு வழங்கியுள்ளது. இதில் ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா, விஜயா வங்கி, யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா, பேங்க் ஆஃப் இந்தியா மற்றும் பல வங்கிகளும் இதில் அடக்கம்.

தலைமைக் கணக்குத் தணிக்கை யாளரின் 2015 ஆம் ஆண்டு அறிக்கையின் படி

இந்தக் கடனுக்கான ஒரு வருடத்திற்கான வட்டி மட்டுமே ரூபாய் 1,800 கோடி. எனினும் ஜி.எஸ்.பி.சி. யின் 2015 ஆம் ஆண்டின் மொத்த வருமானம் (வட்டியை தவிர்த்து) ரூபாய் 80 கோடி மட்டுமே. கடனுக்கு வட்டி செலுத்தும் அளவுக்கு கூட போதுமான அளவு பணம் இல்லை என்பதையே இது குறிப்பிடுகிறது. கணக்குப் படி பார்த்தால் ஜி.எஸ்.பி.சி.க்கு கடனை செலுத்தும் ஆற்றல் இல்லை. இந்த வங்கி களினால் ஜி.எஸ்.பி.சி.யை கடனை கொடுக்க தவறியவர் என்று அறிவிக்க இயலாதா? ரிசர்வ் பேங்க் ஆஃப் இந்தியாவின் தற்போதைய உதவி ஆளுநரே ஜி.எஸ்.பி.சி.யின் இயக்குனராக 2006 ஆம் ஆண்டு முதல் 2013 ஆண்டு வரை பொறுப்பு வகித்து வந்துள்ளார். மற்ற நிறுவனங்களிடம் கொடுத்த கடன்களை எவ்வாறு RBI கேள்விக் கேட்குமோ அதே போன்ற ஜி.எஸ்.பி.சி. இடம் ஒருவேளை RBI கேள்விக் கேட்கலாம்.

எந்த நிலவாயுமே கண்டுபிடிக்க படவில்லை என்றால் கடன் வாங்கப்பட்ட பணம் எதற்காக பயன்படுத்தப்பட்டது? ஒரு நிறுவனம் தனது புதிய தொழில் சார்ந்த திட்டத்திற்காக கடனை பெற்றுக் கொள்ளு மானால், அந்நிறுவனம் அதிகமான ஆட் களை வேலைக்கு தேர்வு செய்யும். அதிகமான கட்டிடங்களை எழுப்பும். எனினும் ஜி.எஸ்.பி.சி. கொடுத்த உழைப்புக் கூலி இந்த கால கட்டத்தில் மாறவே இல்லை. அதாவது அந்நிறுவனம் அதிகமான ஆட்களை வேலைக்கு எடுக்கவில்லை. எனினும் 2005 ஆம் ஆண்டு ரூபாய் 16 கோடியாக இருந்த அதன் இதர செலவுகள் 2013 ஆம் ஆண்டு ரூபாய் 500 கோடியாக உயர்ந்துள்ளது.

ஜி.எஸ்.பி.சி. யின் கடனும் அது தன் கீழுள்ள துணை நிறுவனங்களுக்கு கொடுத்த முன் பணமும் சேர்த்து 2005 ஆம் ஆண்டு ரூபாய் 18 கோடியாக இருந்தது. இது 2015 ஆம் ஆண்டு ரூபாய் 2000 கோடியாக உயர்ந்துள்ளது. இந்த துணை நிறுவனங்களில் அதானி குழுமம் இடம் பெற்றுள்ளது. துளையிடுவதற்கான உபகரணங்கள் மற்றும் இதர கருவிகள் வாங்கியதில் மட்டும் ரூபாய் 2000 கோடி செலவழிக்கப்பட்டுள்ளது. இந்த துளையிடுவதற்கான உபகரணங்களை வழங்கும் ஒப்பந்த உரிமையை டஃப் டிரில்லிங் பெற்றது. 2006 ஆம் ஆண்டில் செயலில் வந்த இந்நிறுவனம் 2010 ஆம் ஆண்டு வாயுவை அகழ்ந்தெடுப்பதற்கான பல கோடி மதிப்புள்ள உயர் ரக மேடைய அமைக்கும் உரிமையை பெற்றது. கிருஷ்ணா கோதாவரி வடி நிலப்பகுதியில் எந்த வித வாயுவும் இல்லை அல்லது குறைந்த அளவே வாயு உள்ளது என கண்டு பிடிக்கப்பட்ட பின் இவ்வுரிமை வழங்கப்பட்டுள்ளதை நாம் நினைவு கூற வேண்டும். துடிப்புள்ள குஜராத் முதலீட்டாளர்களின் மாநாட்டிற்கு ஒரு துடிப்புள்ள ஆதரவாளராக டஃப் டிரில்லிங் செயல்பட்டது எனவும் கூறப்படுகிறது.

இவை அனைத்தும் மற்றும் தலைமைக் கணக்குத் தணிக்கையாளரின் அறிக்கையும் ஜி.எஸ்.பி.சி.யின் இயக்க குளறுபடிகளையே சுட்டிக்காட்டுவதே உண்மை. சுதந்திரமாக இயங்கும் ஒரு நீதி விசாரணை மேற்கொள்வதே அடுத்த நடவடிக்கையாக இருக்கவேண்டும்.

**ஜெய்ராம் ரமேஷ், மாநிலங்களவை காங்கிரஸ் உறுப்பினர், முன்னாள் மத்திய அமைச்சர்**
**தி ஹிந்து, ஆங்கிலம், தமிழில் : சாரி**


**நாடார் பெருங்குடியினர் ஏன் மதம் மாறினார்கள்?**




**விலை ரு. 10 மட்டுமே**

**வேர்கள் பதிப்பகம்**

52/1, மண்ணடி தெரு, மண்ணடி,
சென்னை - 600 001.
தொடர்ப்புக்கு : 8148129887

# இந்தியன் எக்ஸ்பிரஸ் மோடியைப் பற்றி என்ன சொல்லுகின்றது?

பாரதீய ஜனதா கட்சியின் அறிவிக்கப்படாத தனி இதழ் இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழ். தமிழகத்தில் அது தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் என அறியப்படுகின்றது.

இனப் படுகொலைப் புகழ் நரேந்திர மோடி பிரதமர் ஆவதற்கு வீழ்ந்து வீழ்ந்து ஊடகங்கள் தி இந்து நாளிதழைத் தவிர உழைத்தன. மோடியை ஊதிப் பெரிதாகக் காட்டின.

மக்கள் கண்ணைப் பொத்திக் கொண்டு நம்பிடும் அளவுக்கு ஓர் இமாலய மாயையை உருவாக்கின.

தேர்தல் முடிந்தவுடன் - சில நாட்களிலேயே மோடி கையாலாகாதவர் என்ற உண்மை வெளிச்சத்திற்கு வந்தது.

டெல்லியில் நடைபெற்ற தேர்தலில் படுதோல்வியை சந்தித்தார். அதுவே பீகார் தேர்தலிலும் நடந்தது.

அடுக்கடுக்காக மக்கள் மன்றத்தில் மோடி தோல்வியை மட்டுமே சந்தித்துக் கொண்டிருந்தாலும் அவரை ஒரு மகா புருஷராகவே காட்டி வந்தது நம்மவூர் தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ். மோடி தும்மினால் வளர்ச்சி, வளைந்தால் வளர்ச்சி என்றெல்லாம் வரிந்து கட்டிக் கொண்டு வாதிட்டது தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்.

ஆனால் மோடியின் தொடர் தோல்வியைக் கண்டு அந்தப் பத்திரிகையே தோல்வியை ஒப்புக் கொள்ளத் தொடங்கியுள்ள தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் இன் வரவேற்கத்தக்க மாற்றம் இது.

அது தன் 30.5.2016 இதழில் மோடி இன் தோல்வியை இப்படித் தொட்டுக் காட்டுகின்றது.

Sample this, manufacturing growth has touched a decadal low, owing to poor domestic demand and sluggish exports. The oft cited 7.6% growth is not reflective of the reality with the creation of jobs becoming a major concern. Modi's poll promises of two crore jobs a year seems a far cry, be it the IT sector, manufacturing or Labour intensive sectors, there have been an alarming loss of jobs. Job creation between January and December 2015 came down to a mere 1.35 lakhs, the slowest since 2009.

மோடியின் ஆட்சியின் எடுத்துக் காட்டு ஒன்றை பாருங்கள்

“உற்பத்திகள் குறிப்பாக ஆலை உற்பத்திகள், கடந்த பத்து ஆண்டுகளில் (மோடியின் ஆட்சியில்தான்) தரை தட்டிப் போனது. இதற்கு காரணம் உள் நாட்டில் தேவைகள் இல்லை (இங்கே தேவைகள் என்பதற்கு மக்கள் எதையும் வாங்கும் அளவுக்கு வருவாய் இல்லாதவர்களாக இருக்கின்றார்கள்). மக்களின் வாங்கும் சக்தி குறைந்து போனதுடன் ஏற்றுமதியும் மிகவும் குறைந்து போனது. இதனால் மக்களிடம் பணப்புழக்கம் இல்லை. ஆனால் அரசு பொருளாதாரத்தில் இந்தியா 7.6 சதவீதம் வளர்ந்ததாகப் பீற்றிக் கொள்கின்றது. அப்படியானால் வேலை வாய்ப்புகள் பெருமளவில் அதிகரித்திருக்க வேண்டும். ஆனால் வேலை எள்ளளவும் முன்னேற வில்லை. வேலையற்றவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. மோடி தன் தேர்தல் வாக்குறுதியில், ஆண்டொன்றுக்கு இரண்டு கோடி வேலை வாய்ப்புகள் ஏற்படும் என்றார். ஆனால் வேலைகளை இழந்தவர்களின் எண்ணிக்கையே பெருகிவருகின்றது. அது ஐ.டி என்ற தகவல் தொடர்பு துறையாக இருக்கட்டும், அல்லது (ஆலை) உற்பத்தித் துறையாக இருக்கட்டும். ஜனவரி 2015 முதல் டிசம்பர் 2015 வரை உருவாக்கப்பட்ட வேலை வாய்ப்புகள் ஒரு லட்சத்து முப்பதைந்தாயிரந் தான் 2009 ஆம் ஆண்டு பின் இதுவே மிகவும் குறைவான வேலை வாய்ப்பு உருவாக்கம்.”

●

# கருப்பாயி என்கிற நூர்ஜஹான் – நேர்முகம்

தன் வாழ்வின் பொன்னரிய 55 ஆண்டுகளைத் தீண்டாமை கொடுமைகளுக் கெதிராகச் செலவிட்டவர் டி.எம். உமர் ஃபாரூக் அவர்கள். இறுதியில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர். அதன் பின்னரும் தொடர்ந்து அந்த மக்களின் விடுதலைக்காகப் போராடினார். ஆக தன் வாழ்நாள் முழுதும் தீண்டாமைக்கு எதிராகப் போராடிய பெருமை அவருக்கு உண்டு.

அவர் தன் வாழ்க்கையில் சந்தித்த தீண்டாமைக் கொடுமைகளையும் அவற்றிற்கு எதிராக நடத்திய போராட்டங்களையும் இறுதியில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதை யும் ஓர் ஆவணமாக, ஓர் ஆவணத் தொடராக நான் நிறுவி நடத்தி வந்த விடியல் வெள்ளி பத்திரிகையில் எழுதி வந்தார். அதனை வேர்கள் பதிப்பகம் நூலாக வெளியிட்டது. அந்த ஆவணந்தான் 'ஜாதி ஒழிந்தது' என்ற நூல்.

இந்த நூலை மையமாகக் கொண்டு தலித் மக்களுக்கும் அவர்கள் சந்திக்கும் தீண்டாமை கொடுமைகளுக்கும், இஸ்லாத் தை தீர்வாக முன் மொழிந்து தமிழகமெங்கும் அந்த நூலை அறிமுகப்படுத்தி வந்தோம். வேர்கள் வெளியீட்டகத்தின் சார்பாக 29 வெளியீட்டு நிகழ்ச்சிகளை நடத்தினோம். 'ஜாதி ஒழிந்தது' நூல் இதுவரை ஆறு பதிப்புகளைக் கண்டுள்ளது.

ஒசூரில் அப்படியொரு நிகழ்ச்சியை நாம் நடத்தியபோது அங்கே பேசிய தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தின் அமைப்பு ரீதியான தலைவர் திரு ஆனந்தன் அவர்கள் "கருப்பாயி என்கின்ற நூர்ஜஹான்" என்ற கதையைப் படித்ததாகவும் அதன் பின்னர் தீண்டாமையை இஸ்லாம் தீர்க்கும் என்ற நம்பிக்கையை இழந்து விட்டதாகவும் கூறினார்கள். அவருடைய உரையில் ஒரு கவலைத் தொனித்ததை நான் உணர்ந்தேன். ஏனெனில் அவர் "தீண்டத்தகாத மக்களுக்கு



எல்லா வாயில்களும் அடைக்கப்படும் போது, இஸ்லாம் அவர்களை தீண்டாமைத் தளையிலிருந்து விடுவிக்கும் என்ற நம்பிக்கையோடு இருந்தேன். அதுவும் பாழ்பட்டுப் போனது" என்றார் கவலையோடு.

ஏற்கெனவே இப்படி ஒரு நூல் புழக்கத்தில் இருப்பதாக தாருல் இஸ்லாமின் செயல்வீரர் தம்பி திருப்பூர் காதர் அவர்கள் என்னுடைய பார்வைக்கு கொண்டு வந்திருந்தார்.

ஒசூர் நிகழ்ச்சி அந்த நூலை உடனேயே நாம் படித்தாக வேண்டும் என்பதை தெளிவுப்படுத்திற்று. நூலை வாங்கிப் படித்தேன்.

1981 இல் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட கிராமம் நெல்லை மாவட்டத் திலுள்ள மீனாட்சிபுரம். இப்போது ரஹ்மத் நகர். இதனை மையமாகக் கொண்டு தான்

கதை எழுதப்பட்டிருந்தது. ஆனால் பெயரை மீனாட்சிபுரம் எனக் குறிப்பிடாமல், காமாட்சிபுரம் எனக் குறிப்பிட்டு இருந்தார் கதாசிரியர், அன்வர் பாலசிங்கம்.

இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட குமரிப் பெண் ஒருத்திக்கு மாப்பிள்ளைக் கிடைக்காததால் அவள் தற்கொலை செய்து கொள்கின்றாள்.

அதன் பின்னர் தன் ஒரே மகளை வாழ வைத்திட இயலாமற் போனதால் தந்தை தற்கொலை செய்து கொள்கின்றார்.

இதைத் தொடர்ந்து ஐந்து தற்கொலைகள் அந்தக் குடும்பத்தில் ஒன்றன்பின் ஒன்றாக நடக்கின்றன.

அந்தக் கதை கருப்பாயி என்கிற நூர்ஜஹான் தன் தந்தைக்கு எழுதி வைத்த தற்கொலை கடிதத்திலிருந்து தான் தொடங்கு கின்றது.

மிகவும் உருக்கமாகவே தற்கொலை கடிதம் ஓடுகின்றது. படிப்பவர் நெஞ்சை தொடுகின்றது. நமது நெஞ்சையும் நெகிழ வைக்கின்றது.

தற்கொலை கடிதத்தில் ஒரு வரி "உன்னை விடுதலை செய்த இஸ்லாம் என்னை அடிமையாக்கிவிட்டது" என்கின்றது.

அதாவது கடிதம் இஸ்லாத்தில் பெண் அடிமைத் தனம் இருக்கின்றது என்பதற்கு அழுத்தம் கொடுத்திருந்தது. அதாவது, இஸ்லாத்தில் பெண்களை அடிமைகளாக நடத்திடும் நிலை இருக்கின்றது. இதனை அறியாமல் நீ தீண்டாமைக் கொடுமை யிலிருந்து விடுபடலாம் என இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டாய். அது தவறாய் போனது என மகள் தன் தந்தைக்கு சொல்லுகின்றாள் தான் தற்கொலை செய்து கொண்டதற்கான காரணத்தை விளக்கிடும் போது!

இது பெரும்பாலும் இஸ்லாத்தின் மேல் சேற்றை வாரித் தூற்றுபவர்கள் சொல்லும் வாதம். அதிலும் குறிப்பாக இடது சாரி அன்பர்கள், அவர்களைத் தொடர்ந்து பாசிச பரிவாரத்தினர் பயன்படுத்திடும் சொற்கள் அவை.




இந்த வரிகளை வைத்துக் கொண்டு நாவலாசிரியர் இடது சாரியைச் சார்ந்தவராக இருக்கலாம் என யூகித்தேன்.

தற்கொலைக்கான காரணத்தை விளக்கிடும் கடிதத்தில் இப்படியொரு வரி பொருத்தமில்லாமல் இடம் பெற்றிருந்தது எனக்குள் தற்கொலைக் கடிதத்தின் உண்மைத் தன்மையில் ஐயங்களை எழுப்பிற்று.

எப்போதாவது அந்தப் பக்கம் போகும் போது அதாவது தென்காசி பக்கம் போகும் போது அங்குள்ள காவல் நிலையத்தில் இதை நாம் விசாரிக்கலாம். தற்கொலை கடிதத்தின் நகல் ஒன்றையும் பெறலாம். அதில் என்ன இருக்கின்றது என்பதைப் பார்த்திட வேண்டும் என் முடிவு செய்திருந்தேன்.

மீனாட்சிபுரம் மத மாற்றங்கள், அந்தக் மக்களுக்கு விடுதலையைப் பெற்றுத் தந்தி டாமல் போய் விட்டதோ என்ற ஆதங்கமும் என்னுள் எழுந்தது.

ஒரு வேளை மொத்த தற்கொலை கடிதமும் வேறு வகையாக இருக்க வாய்ப்பிருக்கின்றது என்றே எண்ணினேன். காரணம் பிரயோகப் படுத்தப்பட்டிருந்த சொற்கள் அப்படி இருந்தன.

ஐந்து தற்கொலைகள் நடந்திருப்பதால் இது காவல் துறையின் கவனத்தை நிச்சயமாக ஈர்த்திருக்கும். அவர்கள் தற்கொலைக்கான காரணத்தை சொல்லும் கடிதத்தை நிச்சயமாகக் கைப்பற்றியிருப்பார்கள். Homicide இன் கீழ் ஒரு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து பிரேதப் பரிசோதனைக்கு அனுப்பி இருப்பார்கள். பின்னரே பிரேதங்களை உரியவர்களிடம் ஒப்படைத்திருப்பார்கள். ஆகவே அங்குள்ள காவல்துறைக்குச் சென்று தற்கொலைக்கான காரணத்தைக் கூறும் கடிதத்தைப் பெற்றிட வேண்டும். அல்லது தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் பெற்றிட வேண்டும் என முடிவு செய்தேன். அதே போல் இந்த தற்கொலைகளை அதுவும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட ஒரு கிராமத்தில் தொடர்ந்து தற்கொலைகள் நடந்திருப்பதால் நமது ஊடகங்கள் தங்களது காப்புகளையும், கசப்புகளையும் கொட்டி தீர்த்திருப்பார்கள் அவற்றையும் சேகரித்துக் கொள்ள வேண்டும்.

ஊடகங்களிலும் கடிதம் பெரிதாக விவாதத்திற்கு வந்திருக்கும். அதனால், அவற்றையும் நாம் சேகரித்திட வேண்டும் என்றெல்லாம் முடிவு செய்திருந்தேன்.

## நேர்முகத்திற்கான அழைப்பு

இந்நிலையில் தான் அண்ணன் டி.எம். உமர் ஃபாரூக் அவர்களிடமிருந்து அந்தக் தொலைபேசி அழைப்பு வந்தது. அதில், தஞ்சை மாவட்டத்தின் தலைநகர் தஞ்சாவூரில் ஒரு விவாத அரங்கத்திற்கு ஏற்பாடு செய்திருப்பதாகவும், அதில் கருப்பாயி என்ற நூர்ஜஹான் நூலை விவாதிக்க இருப்பதாக வும் அதில் நூலாசிரியர் அன்வர் பாலசிங்கம் நேரில் கலந்து கொண்டு விவாதிக்க இருப்பதாகவும் விவாதத்தில் நான் தான் (டி.எம். உமர் ஃபாரூக் தான்) பேசிட வேண்டும் என வற்புறுத்துவதாகவும் கூறினார்.

அத்தோடு கருப்பாயி என்ற நூர்ஜஹான் கதையில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பெண்களுக்கு திருமணமாகவில்லை என்பது பெரிதாகப் பேசப்படுவதால், அது ஒரு சமுதாயப் பிரச்சனை. ஆதலால், நீங்கள் தாம் அந்த விவாதத்தில் கலந்து கொள்ள வேண்டும். நீங்கள் ஒத்துக் கொண்டால் நான் அந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்யவிருக்கும் பசு கௌதமன் அவர்களிடம் தெரிவித்து விடுகின்றேன். இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட நான் அதில் கலந்து கொள்வது பொருத்தமாக அமையாது என்பது என் எண்ணம். நீங்கள் இதில் நிச்சயமாக கலந்து கொள்ள வேண்டும் என்றும் கூறினார்கள்.

இது போன்ற விவகாரங்களில் அண்ணன் டி.எம். உமர் ஃபாரூக் அவர்களின் ஆலோசனைகள் சரியாக இருக்கும் என்பதை அவரோடு 33 ஆண்டுகள் பழகியவன் என்ற அடிப்படையில் அனுபவத்தால் உணர்ந்தவன் நான். ஆகவே அண்ணன் உமர் ஃபாரூக் அவர்களின் ஆலோசனையை ஏற்று விவாதத்தில் கலந்து கொள்வதாக ஒத்துக் கொண்டேன். இதை அண்ணன் டி.எம். உமர் ஃபாரூக் அவர்கள் பசு கௌதமன் அவர்களிடம் தெரிவித்தார்கள்.

ஆனால் விவாதத்தை ஏற்பாடு செய்த பசு கௌதமன் அவர்கள் நான் பேசுவதை ஒத்துக் கொள்ளவில்லை. டி.எம். உமர் ஃபாரூக் அவர்கள் தாம் கலந்து கொள்ள வேண்டும் என உறுதியாக கூறிவிட்டார்.

அந்த நாளில் தனக்கு வேறு நிகழ்ச்சிகள் இருக்கின்றன. அதனால் நான் கலந்து கொள்ளவியலாது எனக் கூறி இருக்கின்றார் கள் அண்ணன் டி.எம். உமர் ஃபாரூக் அவர்கள்.

இந்தப் பதிலையும் பசுகௌதமன் ஒத்துக் கொள்ளவில்லை. நீங்கள் வர இயலவில்லை என்றால் பரவாயில்லை. நூலைப் பற்றிய உங்கள் கருத்துக்களை எழுதி அனுப்புங்கள். நாங்கள் அரங்கில் படித்துக் காட்டுகின்றோம் எனச் சொல்லிவிட்டார் பசு கௌதமன்.



**In 1981, around 600 dalits of Meenakshipuram in southern Tamil Nadu decided to convert en masse to Islam. Today their families live in harmony with their Hindu clansmen, at home both in temple and masjid**

Jaya.Menon@timesgroup.com

# The other conversion story

Seventy-year-old S Kalimuthu's daughter Khaleema Bheevi is a Muslim. Kalimuthu himself had organised her marriage with his brother's son, a neo-Muslim convert. The families meet often for weddings and functions, including the local Durga temple festival.

• Umer Kaiyum, a 79-year-old retired Tamil pandit who converted to escape caste hatred, still maintains close ties with his father's brother, M Subramanian and his family.

These ties make Meenakshipuram a different conversion story. While some members of a family converted to Islam, many remained Hindus. But the village, which changed its name to Rehmat Nagar along with the mass conversions, remains a peaceful, communally integrated hamlet.

The harsh mid-day sun throws deep shadows on the lush mountain ranges of the Western Ghats. In narrow lanes, gaudily painted houses and dilapidated old homes alternate with tiny brick-and-concrete hovels. The overnight rain has left the pathways slushy. In the heart of the hamlet, once known as Meenakshipuram, there is chatter and laughter under the white dome of the masjid. At 1pm, silence falls for the 'thozhugai' (afternoon prayers).

Islam is serious religion in this hamlet in Tirunelveli district in south Tamil Nadu. It is barely three decades since the headline-grabbing mass conversions took place here. But, it was nothing like the Sangh Parivar's controversial Ghar Wapsi programme in Uttar Pradesh last month. On February 20, the day after the symbolic conversion, 300 dalit families — about 500 to 600 people — gathered in the village square and amid hushed silence and much trepidation, tonsured their heads and repeated the Shahada (Testimony of faith). They were formally initiated into Islam by the Ishadul Islam Sabha of South India, which had its offices in Tirunelveli.

"It was a yearning for dignity. We sought Islam to escape caste hatred and the atrocities inflicted on us by the Thevars (a most backward community, but higher in the caste hierarchy than dalits)," recalls Umer Kaiyum, who was once A Mookkan. A retired primary school teacher, he lives behind a small stone mound in the hamlet, with his three sons and their families. "I was a Tamil pandit. But, I was mocked for my name and forced to change it to Umadevan," says Kaiyum.

Horror stories of caste discrimination have been passed down over generations. "If any Thevar was murdered, the dalits were tied up and beaten black and blue," says Mohammed Saleem, 40. Only two buses plied in the village those days. One travelled to and from Kerala, ferrying workers. There was also a Tamil Nadu bus. "We may have been bathed and better dressed than them (Thevars), but we were never allowed to sit on the seats of the Tamil Nadu bus," says Saleem, recalling his childhood. The dalits had to sit on the bus floor or travel standing all the way.

There is a little known story of Mohammed Yusuf, the man who inspired the Meenakshipuram dalits to take the final step towards embracing Islam. In 1975, Yusuf, then T Thangaraj, fell in love with a Thevar woman, Sivanatha. It was a reckless and dangerous thing to do those days but he decided to elope with her. Six years before the rest of the village followed his lead, 31-year-old Thangaraj took his bride to Tirunelveli and converted to Islam. They took the names Yusuf and Sulehal Bheevi. Thangaraj's audacity shook the whole village.

"But, even today, we share a good rapport with my uncles (mother's brothers) Mariappan, Ayyappan and Sivapandui," says Mohammed Abu Haliba, 36, Yusuf's son, who lives in Mekkarai village, 5km from Rehmat Nagar. Many of Meenakshipuram's neo converts own agricultural land in Mekkarai, a picturesque hamlet on the ghat foothills. Here, the Muslim converts grow paddy and tapioca and also rear cattle and poultry.

The Meenakshipuram conversions occurred during the AIADMK regime headed by MG Ramachandran, and it became a landmark event for the sheer numbers involved. The reason why it attracted so many dalits was a Thevar's murder that led to widespread brutal police action against the community, say locals. It provoked even those who were undecided on converting.

The conversions triggered a virtual political stampede in the village. Many national leaders descended on it; BJP leaders Atal Bihari Vajpayee, LK Advani and a host of Sangh Parivar leaders visited the village to investigate the reasons behind the conversion. The ruling Indira Gandhi government despatched its minister of state for home, Yogendra Makwana, to Meenakshipuram and MGR constituted the Justice Venugopal commission of inquiry.

The director of scheduled caste/scheduled tribe welfare of the Union government submitted a report of the findings that ruled out forceful conversions. The Arya Samaj built a school in the village. While the school continues to enroll students even today, the dilapidated building showcases a failed bid to get Muslims to return to Hinduism.

"An old dalit I met in Meenakshipuram told me how he once had to vacate his seat in a village bus for a 10-year-old Thevar boy, addressing him respectfully. But after he converted to Islam, he didn't have to do that and he is addressed respectfully as 'bhai'," says A Sivasubramanian, a Tamil teacher and writer of folklore based in Tuticorin. A chapter in his book 'Pillaiyar Arasiyal' (politicizing the deity Vinayaka) is devoted to the Meenakshipuram conversions. "They may not have seen great economic change in their lives because they lost the right to reservation in education and jobs but, they are happy with their new social status and cultural freedom," says Sivasubramanian.

As the sun sets over Mekkarai, Sardar Mohammed, 70, sits proud in his stone and concrete home. He built it about two decades ago. As a dalit, he was permitted only to build a thatched hut.

In Rehmat Nagar, the dusk brings calls for evening prayers at the 'pallivasal' (masjid), which was built soon after the mass conversion. Karuppiah Madasamy, 66, the local naataamai (village head) and leader of a local Hindu outfit, walks into the masjid and settles down on a bench to wait for his grandsons. They are all Muslims.

Meenakshipuram (now Rehmat Nagar)

HOUSE PROUD: Sardar Mohammed with his wife in Mekkarai village where many Meenakshipuram Muslims have their agricultural land. Mohammed, who was not allowed to build a brick and concrete home as a dalit, finally fulfilled his dream after converting to Islam

Photos: K. Antony Xavier

கௌதமன் அவர்களின் பதிலை அப்படியே அண்ணன் உமர் ஃபாரூக் அவர்கள் என்னிடம் தெரிவித்தார்கள்.

அத்தோடு இன்னொன்றையும் சொன்னார்கள். அது, பசு கௌதமன் திராவிடர் கழகத்தைச் சார்ந்தவர். அண்மையில் அவர் பெரியாரின் நூல் ஒன்றை விவாதிக்கும் கருத்தரங்கம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்திருந்தார். அந்த அரங்கத்திற்கு வேலுப்பிள்ளை பிரபாகரன் அரங்கம் எனப் பெயர் வைத்திருந்தார். நான், ஜாதியின் பெயரால் அரங்கம் வைத்திடும் அளவிற்கு திராவிடம் நீத்துப் போய் விட்டதா? எனக் கேட்டு விமர்சித்தேன். அது அரங்கத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. அத்தோடு, அரங்கம் கலைந்தது என்றார்.

இப்போது நமது ஜாதி ஒழிந்தது நூலையும் அது குவித்து வரும் வெற்றிகளையும் கொச்சைப்படுத்திட வேண்டும் என்றே இந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருப்பதாகத் தெரிகின்றது என்றார்.

இதற்கு நான் சவாலை எதிர் கொள்வோம். நாம் மீனாட்சிபுரம் சென்று விடுவோம். எனக்கு அந்தத் தற்கொலை கடிதத்தின் உண்மைத் தன்மையில் ஐயங்கள் இருக்கின்றன. ஆகவே அங்கு சென்று காவல் நிலையத்தில் தற்கொலை கடிதத்தின் உண்மை நகல் ஒன்றை பெறுவோம். அதன் உண்மைத் தன்மையைப் பற்றிய முடிவுக்குப் பின் நாம் என்ன செய்வது என முடிவு செய்வோம். அத்தோடு நாம் மீனாட்சிபுரம் செல்லும் போது திருமணம் ஆகாமல் தேங்கி நிற்கும் பெண் களுக்கும் ஒரு தீர்வோடு செல்வோம். நான் இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைப்பதில் ஆர்வமுள்ள இளைஞர்களைத் திரட்டி அங்கு திருமணமாகாத பெண்கள் இருந்தால் திருமணம் முடிக்கச் சொல்வோம். இதன் மூலம் நாம் இஸ்லாத்தில் மக்கள் இணைவதில் ஏற்படுத்தப்பட்டுள்ள பெரிய பிரச்னை யிலிருந்து மீளுவோம் என்றேன். எதற்கும் நாம் மீனாட்சி புரம் போய் விடுவதே ஒரே முடிவு என்றேன்.

அண்ணன் டி.எம். உமர் ஃபாரூக் அவர்கள் முதலில் தயங்கினார்கள். நான் அதிகம் அழுத்தம் தந்திடவே ஒத்துக் கொண்டார்கள்.

## கதையின் களம் நோக்கிப் பயணம்

இருவரும் மீனாட்சிபுரம் நோக்கிப் பயணமானோம். குமரி மாவட்டத்தில் தாருல் இஸ்லாம் சார்பில் பணியாற்றி வரும் களப்பணியாளர்களான முஹம்மத் அலீ ஜின்னா, அப்துல் பாசித், ஷேஹ் ஷமீம், மாஹீன் ஆகியோருடன் மீனாட்சிபுரம் சென்றடைந்தோம்.

முதலில் காமாட்சிபுரத்தைத் தேடினோம். அங்கு காமாட்சிபுரம் என்றொன்றில்லை. ஆகவே கதை, மீனாட்சிபுரத்தை மையப்படுத்தியது தான் என்பதை உறுதி செய்ய வேண்டும். காரணம் வேறு எங்கேனும் காமாட்சிபுரம் என்றொன்றிருந்தால் நம்முடைய முழுப் பயணமும் - கள ஆய்வும் - பாழ்பட்டுப் போகும் எனக் கருதினோம். ஆகவே நூலின் அதாவது அன்வர் பாலசிங்கத்தின் கதையில் தந்திருந்த முகவரிகளைத் தேடினோம். புதுக் காலனி தெரு, கலங்காத கண்டி -ஐ நோக்கிப் பயணித்தோம்.

இடையில் அன்வர் பாலசிங்கத்தின் பூர்வீகங்களைத் தெரிந்து கொண்டோம். அவருடைய மாமியாரின் பெயர்தான் நூர்ஜஹான் முன்னாள் கருப்பாயி என்பதை ஊரார் சொன்னார்கள்.

அவர் தலித் பெண்ணொருத்தியைத் திருமணம் செய்து கொண்டு, அறந்தாங்கியில் வாழுகின்றார். ஏனெனில் அவர் மனைவி அங்கே ஆசிரியர் வேலைப் பார்க்கின்றார் என்றார்கள்.

தொடர்ந்து கலங்காத கண்டிக்குச் சென்றோம்.

அங்கே ஒரு குடிசை.

அதில் ஒருவர் இருந்தார்.

அவர் அன்வர் பாலசிங்கத்தின் தம்பி என்றார்.

நாங்கள் கருப்பாயி என்ற நூர்ஜஹான் என்ற நூல் வேண்டும் என்றோம்.

எத்தனை என்றார். 10 என்றோம். என்னிடம் அத்தனை நூல்கள் இல்லை. ஒரே ஒரு புத்தகம் தான் இருக்கின்றது. அதையும் நான் படித்துக் கொண்டிருக்கின்றேன் என்றார். அதாவது புத்தகம் கிடைக்காது என்பது போல் சொன்னார்.

நாங்கள் வெகு தூரம் வந்து விட்டோம் நூல் வேண்டும் என்றோம்.

அவர் நான் படித்துக் கொண்டிருக்கும் நூலைத் தருகின்றேன் விலை வேண்டாம் அன்பளிப்பாக என்றார். நூலைப் பெற்றுக் கொண்டு 'அன்புடன்' என எழுதச் சொன்னோம். எழுதித்தந்தார். அத்துடன் நாங்கள் சுமந்து வந்த கேள்வியைக் கேட்டோம். இதில் வரும் காமாட்சிபுரம் எங்கே இருக்கின்றது?

அப்படியொரு ஊர் எங்கேயுமில்லை. அது மீனாட்சிப்புரத்தை மையமாகக் கொண்டு எழுதப் பெற்றது என்றார்.

அங்கே கலங்காத கண்டியில் ஒரு பள்ளி வாசல் கட்டத் தொடங்கிய நிலையில் அப்படியே கிடந்தது. அதைப் பற்றி விசாரித்தோம். அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள், பல பொருளாதாரக் குற்றச் சாட்டுகளை அன்வர் பாலசிங்கம் அவர்களைப் பற்றி சொன்னார்கள். அவற்றைக் காதில் வாங்கிக் கொண்டோம். அவற்றிற்குப் பின்னால் போகவில்லை. காரணம், எங்கள் இலக்கும் எண்ணங்களும், அடிமைத்தனத்திருந்தும், தீண்டாமைக் கொடுமைகளிலிருந்தும் விடுதலை அடைந்திட இஸ்லாத்திற்கு வந்தவர்கள், திருமணமாகாத பெண்கள் தற்கொலைகள் சுற்றியே இருந்தன. அதனால் அந்தப் பொருளாதார குற்றச்சாட்டுகளைக் கண்டு கொள்ளவே இல்லை. பின்னர் அவையெல்லாம் உண்மை என்பதை அறிந்தோம்.

நாங்கள் கலங்காத கண்டியில் கதையில் வரும் காமாட்சிபுரம் அதாவது மீனாட்சி புரம் அதாவது இப்போதைய ரஹ்மத் நகர் சென்று இரண்டு நாள்களாகக் கள ஆய்வை நடத்தினோம். பின்னர் களத்தில் கண்டனவற்றுடன் தஞ்சாவூர் சென்றோம் அன்வர் பாலசிங்கத்தை நேரில் சந்திக்க. ஆய்வரங்கத்தில் அன்வர் பாலசிங்கத்துடன் நடந்தனவற்றை அப்படியே தருகின்றோம்.

வாசகர்கள் அதனை படிக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

**எம்.ஜி.எம்.**

# ஒரு பெண்ணியவாதி இஸ்லாத்தை ஏற்றார்!

தரஸா கார்பின் என்ற பெண்மணி அமெரிக்காவில் உள்ள நியூ ஓர்லயன்ஸ் என்ற நகரில் வாழ்ந்து வரும் எழுத்தாளர். இவர் அண்மையில் இஸ்லாத்தை ஏற்றார். இவர் சிஎன்என் என்ற செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டி இதோ:

நான் ஒரு முஸ்லிம். ஆனால் பாரம்பரிய முஸ்லிம் அல்ல. 2001 நவம்பரில் தான் நான் இஸ்லாத்தை ஏற்றேன். அதாவது, 9/11 என்ற அடையாளப்படுத்தப்படும் இரட்டை கோபுரம் தாக்கப்பட்டு இரண்டு மாதங்களுக்கு பிறகு. அப்போது எனக்கு வயது 21. நான் லுயிசினாவில் உள்ள பேபின் ராகியு என்ற இடத்தில் வசித்து வந்தேன். நான்கு வருடங்கள் உலகில் இருக்கும் மதங்களை, அவற்றைப் பின்பற்றுபவர்கள் இவற்றைப் பற்றிப் படித்தேன். இன்னும் அதில் நுட்பமான ஆராய்ச்சியில் இறங்க முடிவு செய்தேன்.

## இஸ்லாத்தை நோக்கிய பயணம்

நான் ஒரு கத்தோலிக்க கிருஸ்தவருக்கும், அயர்லாந்தை சார்ந்த நாத்திகருக்கும் பிறந்தவள். கத்தோலிக்கராகவே வளர்ந்தேன். பிறகு கடவுள் மறுப்பாளரானேன். இப்போது நான் ஒரு முஸ்லிம். இஸ்லாத்தை நோக்கிய என் பயணம் என்னுடைய 15 வயதில் துவங்கியது. என்னுள் எழுந்த கேள்விகள் என் மத நம்பிக்கை பற்றியானது. அந்த கேள்விகளுக்கு என் ஆசிரியர்களிடமும், திருச்சபை குருமார்களிடமும் நான் பெற்ற பதில்,

“உன் சிறிய மூளை இதைப் பற்றிக் கவலைக் கொள்ள வேண்டாம்” என்பதே. அந்த பதில் எனக்கு திருப்தி அளிக்கவில்லை. எனவே எல்லா அமெரிக்கர்களும் எதைச் செய்து வருகிறார்களோ அதையே நானும் செய்து வந்தேன். அதாவது, இஸ்லாத்திற்கு நேர் முரணானவற்றை. நான் செய்து வந்ததைப் பற்றிக் கவலைக் கொண்டேன். பல வருடங்களாக மதம் மனிதன் பிரபஞ்சம், இவற்றின் இயல்பைப் பற்றி வினவி வந்தேன். இவை எல்லாவற்றையும் வினவிய பின் வன்மையாக இருக்கக் கற்றுக் கொண்டேன். சொல்லாட்சி, வரலாறு, சமயக் கொள்கை இவற்றை ஆராய்ந்தேன். அப்போது நேரிய வழி ஒன்றை கண்டுகொண்டேன். அதன் பெயர்தான் இஸ்லாம்.

## இஸ்லாம் ஓர் உலகளாவிய மார்க்கம்

இஸ்லாம் ஒரு கலாச்சாரமோ அல்லது வழிபாட்டு முறையோ மட்டுமன்று. அது உலகின் ஒரு பகுதியில் மட்டும் முன்னிறுத்தப்படும் கொள்கையும் அல்ல. இஸ்லாம் ஓர் உலகளாவிய மார்க்கம் என்பதை உணர்ந்தேன். அது சகிப்புத்தன்மை, நீதி, கண்ணியம் இவற்றை போதிக்கின்றது. பொறுமை, பணிவு, நடுநிலை இவற்றை ஊக்குவிக்கின்றது, வளர்க்கின்றது. நான் இஸ்லாத்தின் நம்பிக்கையை ஆராயும் போது பலரும் என்னிடத்தில் கூச்சலிட்டது என்னை அதிர்ச்சியில் ஆழ்த்தியது. ஆனால் இஸ்லாம் தன்னை பின் பற்றுபவர்களிடம் இறை தூதர்களில் எவர் ஒருவரையும் பிரித்து வேற்றுமை பாராட்டக்கூடாது, எல்லா இறைதூதர்களையும் கண்ணியப்படுத்திட வேண்டும் எனப்போதிக்கின்றது. அது மோசஸ் இலிருந்து, ஜீஸஸ் இலிருந்து, முஹம்மது (ஸல்) வரையிலும் செல்லும் அவர்கள் யாவரும் ஒரே இறைவனையே வணங்குங்கள் என்றும் இந்த உயர்ந்த லட்சியத்தைக் கொண்டே உங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுங்கள் செல்லும் மனித இனத்திற்கு போதனை செய்தார்கள்.

## கல்வியின் பிறப்பிடம் இஸ்லாம்

இஸ்லாம் செய்யக்கோரி உற்சாகப் படுத்திடும், முஹம்மது (ஸல்) அவர்களின் ஒரு பொன்மொழி என்னை வெகுவாக ஈர்த்தது.

"கல்வியைத் தேடுவது ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கடமையாகும். ஆணாக இருந்தாலும் சரி பெண்ணாக இருந்தாலும் சரி" என்பதே அது.

முஸ்லிம் சிந்தனையாளர்கள் அறிவியல் மற்றும் பகுத்தறிவு ரீதியான ஆராய்ச்சியில் முன்னோடிகளாக இருந்திருக்கின்றார்கள் என்பது என்னை பிரம்மிப்பில் ஆழ்த்தியது. ஆம், ALGEBRA - அல்ஜீப்ராவை அறிமுகப்படுத்திய அல்-கவாரிஸ்மி, Davinci - டாவின்சிக்கு முன்னரே விமானத்தின் இயக்கவியலை வளர்ச்சியுற செய்த இப்னு ஃபிர்னாஸ் மற்றும் நவீன அறுவை சிகிச்சை (Modern Surgery)-ன் தந்தை அல்- ஜஹ்ரவி அவர்கள் யாவரும் முஸ்லிம் சிந்தனை யாளர்களே. இது என்னை பிரமிக்கச் செய்தது. இஸ்லாத்தின் ஆற்றல் எல்லை களைக் கடந்தது என்பது உணர்ந்தேன்.

## 9/11 - தாக்குதலுக்கு பின் இஸ்லாம்

அது 2001-ம் வருடம் நடந்தது அது நான் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருந்த பொழுது நடந்தது. இதை தெரிந்தால் மக்கள் என்னை பற்றி எப்படியெல்லாம் எண்ணுவார்களோ என அஞ்சினேன்.

ஆனால் நான் எண்ணியதை காட்டிலும் கடுமையான சூழலே அங்கு நிலவியது. 9/11 என்ற அந்த சம்பவம் நிகழ்ந்த பின் அந்த விமான ஓட்டிகளின் கபட நாடகம் என்னை அதிர்ச்சியில் ஆழ்த்தியது. ஆனால் அதன் விளைவு என்னுடைய பெரும்பாலான நேரம் மக்களிடம் முஸ்லிம்களுக்கும், இஸ்லாத் திற்கும் பரிந்து பேசுவதிலேயே கழித்தது. 160 கோடி முஸ்லிம் மக்கள் மீது சில சம்பவங்களை வைத்து சிகப்பு சாயம் பூசிட விரும்புகிறார்கள். அப்போது நான் முஸ்லிம்களுக்கு பிணையாகவே நிறுத்தப் பட்டிருந்தேன். இஸ்லாத்திற்கு பரிந்து பேசுகையில் அந்த அச்சம் என்னிடமிருந்து அகன்றது. நான் ஏற்றுக் கொண்ட இந்த நம்பிக்கையில் (இஸ்லாத்தில்) என்னுடைய சகோதர, சகோதரிகளையும் இணைத்திட விரும்பினேன். ஆனால் என் குடும்பத்தார் இதை புரிந்திடவில்லை. எனவே நான் படித்துக் கொண்டு இருக்கும் வரையிலும் அவர்களுக்கு எந்த அதிர்ச்சியும் நான் அளித்திடவில்லை. பலரும் என் பாதுகாப்பை கருத்தில் கொண்டார்கள். அதிர்ஷ்டவசமாக என்னுடைய பெரும் பாலான நண்பர்கள் இதை ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ளவில்லை என்பது மட்டுமல்ல. அவர்கள் இஸ்லாத்தைப் பற்றி அறிந்திடவே ஆர்வம் காட்டினார்கள்.

## ஹிஜாப்

இந்த நாட்களில் நான் ஹிஜாப் அணிவதற்கு ரெுமிதம் கொள்கிறேன். அதை பர்தா என்று நீங்கள் அழைக்கிறீர்கள்.

"My scarf does not tie my hands behind my back. It is not a tool of oppression. It doesn't prevent thoughts from entering my head and leaving my mouth."

"என்னுடைய பர்தா என் கைகளை பின்னே கட்டிப்போட்டிடவில்லை. இது ஒன்றும் அடிமைப்படுத்தும் கருவியும் அல்ல. சிந்தனைகள் என் மூளைக்குள் நுழைவதை யோ அந்த சிந்தனைகள் என் வாயிலிருந்து வெளியே விடுவதையோ அது தடுத்திட வில்லை"

ஆனால் இதை அணிவதற்கு முன்னால் நானும், இவற்றை அறிந்திருக்கவில்லை. இஸ்லாத்தை படித்துக் கொண்டிருந்ததால் கலாச்சார ரீதியாக நான் இஸ்லாத்தின் மீது கொண்டிருந்த தவறான எல்லாக் கருத்துக் களும் என்னிடமிருந்து களையப் படவில்லை.

## என்னிடமிருந்து களையப்பட்ட தவறான கருத்துக்கள்

கிழக்கில் வாழும் பெண்கள் அந்த (அரபு) ஆண்களால் ஜடப் பொருளைப் போன்றே நடத்தப்படுவார்கள். அந்த ஆண்கள் தங்கள் பெண்களின் அங்கங்களை முழுவது மாக மூடக்கோரி கட்டாயப்படுத்து வார்கள் என்றே எண்ணி வந்தேன். நான் ஒரு முறை ஒரு முஸ்லிம் பெண்ணிடம் இப்படி கேட்டேன், "எதற்காக நீங்கள் ஹிஜாப் அணிகிறீர்கள்?"

அதற்கு அந்தப் பெண் கவர்ந்திழுக்கும் வகையில் இப்படி பதிலளித்தார்.

“இறைவனின் விருப்பத்திற்காகத்தான் மதிப்பிற்குரிய பெண்ணாக அங்கீகரிக்கப் படுவதற்கும் வன்கொடுமைகளிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கும் தான் ஹிஜாப் அணிகிறேன். இதன் மூலம் ஆண்களின் பார்வையிலிருந்து நான் என்னை பாதுகாத்து கொள்கிறேன்” என்றார்.

மேலை நாட்டவர்கள் பெண்களை விளம்பரப் பெருளாகவும் விற்பனை முகவர் களாகவும் பயன்படுத்திக் கொண்டிருக்கிறது. ஆனால் இஸ்லாம் பெண்களின் மென்மை தன்மையை புரிந்துக் கொண்டு அவர்களுக்கு 1400 வருடங்களுக்கு முன்பே அனைத்து உரிமைகளையும் பெற்று தந்தது என பதில் சொன்னார்.

**இம்தியாஸ்**


**வரப்பெற்றோம்**




**வழி காட்டும் வான்மறை**

மௌலவி
கே.எம். இல்யாஸ் ரியாஜி

**விலை : 100.00**

**அஹத் பப்ளிஷர்ஸ்**

50, தெற்கு மாட சாலை, மதுரை - 625 001.
கைபேசி :9345055666



# இப்போது பரபரப்பான விற்பனையில் படித்து விட்டீர்களா!




**விலை : ரூ. 20.00**

**அ. மார்க்ஸ் அவர்களின்**

## டி.எம். உமர் பாரூக் ஒரு தலித் போராளியின் வாழ்வும் அவர் காட்டிய வழியும்

வெளியீடு :

**வேர்கள் பதிப்பகம்,**

52/1, மண்ணடி தெரு, மண்ணடி,
சென்னை - 600 001.
தொடர்ப்புக்கு : 8148129887

# சர்க்கரை நோயாளிகள் ரமலான் மாதத்தில் பின் பற்ற வேண்டிய முறைகள்

## (RECOMMENDATIONS FOR DIABETICS DURING RAMZAN FASTING)

நம்முடைய வாழ்க்கை முறை, உணவு பழக்கவழக்கங்கள், உடற்பயிற்சியின்மை போன்ற காரணங்களால் இரத்த அழுத்தம் (Hypertension), மாரடைப்பு மற்றும் இதய நோய்கள், சர்க்கரை நோய் (Diabetes) அதிகம் காணப்படுகிறது. மேலை நாடுகளை விட இந்தியர்களுக்கு 7 முதல் 8 ஆண்டுகள் முன்னதாக மாரடைப்பு போன்ற இதய நோய்கள் ஏற்படுகின்றன. இதில் 33 சதவீதம் பேர் 50 வயதிற்கு குறைவான வயதுடையவர் கள். சர்க்கரை நோயினால் இந்தியாவில் சுமார் 62,000,000 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். சர்க்கரை நோயின் காரணமாக இதய நோய், கண்பாதிப்புக்கள், சிறுநீரகம், நரம்புகள் பாதிப்பு, தொற்று நோய் மற்றும் மனநோய் இரண்டு மடங்கு அதிகரித்துள்ளது. இதன் காரணமாக மரணங்களும் அதிகரித்துள்ளன.


**டாக்டர் எஸ். முஹம்மது அப்சல்**


ரமலான் மாதங்களில் இரத்த அழுத்தம் உள்ளவர்கள் தங்களுடைய காலை வேளை மாத்திரைகளை ஸகர் வேளையிலும், இரவு வேளை மாத்திரைகளை இப்தார் வேளையிலும் எடுத்துக் கொள்ளலாம். இதய நோயாளிகள் மருத்துவரின் ஆலோசனைபடி நடந்து கொள்ள வேண்டும்.

### சர்க்கரை நோயாளிகள் பின்பற்ற வேண்டியவை:

ரமலான் நோன்பின் கால நேரம் பல்வேறு பகுதிகளில் மாறுபடுகிறது. ரமலான் நோன்பிற்கு முன் நோயாளிகள் தங்களின் இரத்தத்தில் சர்க்கரையின் அளவு மற்றும் இதர மருத்துவ பரிசோதனைகள், மருத்துவ ஆலோசனைகள் மேற்கொள்ள வேண்டும்.



கீழ்கண்ட சர்க்கரை நோயாளிகள் நோன்பு நோற்பதை கண்டிப்பாக தவிர்க்க வேண்டும் (Very High Risk):

1. இரத்தத்தில் சர்க்கரையில் அளவு குறைவதை உணராதவர்கள் (Hypoglycemic unawareness)

2. தற்சமயம் Acute Illness உள்ளவர்கள்.

3. கர்ப்பிணிகள்.

4. நீண்டகாலமாக டையாலிஸிஸ் (Chronic Dialysis) செய்பவர்கள்.

5. சமீபத்தில் டயபடிக் கீட்டோ அசிடோஸிஸ் (Diabetic Ketoacidosis) பாதிப்புக்கு உள்ளானவர்கள்.

6. சமீபத்தில் இரத்தத்தில் சர்க்கையின் அளவு மிகவும் குறைந்தவர்கள் (Severe Hypoglycemia).

7. Type I சர்க்கரை நோயாளிகள்.

## HIGH RISK

1. சிறுநீரக பாதிப்புக்குள்ளானவர்கள் (Renal insufficnecy)

2. தனியாக வசிப்பவர்கள்.

3. சர்க்கரை அளவு குறைந்து காணப்படுபவர்கள் (Hypoglycomia), கார்டியோ மயோபதி (Cardiomyopathy) கல்லீரல் கிரோஸில் (Lepatie Cirhosis) பாதிப்புக்கு உள்ளானவர்கள்.

4. சர்க்கரை அளவு கட்டுப்பாடு இல்லாதவர்கள் (Uncontrolled Diabetes)

சர்க்கரையின் அளவு கட்டுப்பாடு உள்ளவர்கள், இன்சுலின் ஊசி எடுப்பவர்கள், சல்போனிலூரியா ( Sulphonylurea) மாத்திரை எடுப்பவர்கள் மருத்துவரின் ஆலோசனை மற்றும் மேற்பார்வையில் நோன்பு நோற்க வேண்டும்.

## நோன்பு நோற்கும் போது கவனிக்க வேண்டியவை

1. பகல் நேர மாத்திரைகளை தவிர்க்க வேண்டும்.

2. சர்க்கரையின் அளவு மிகவும் குறையும் போது ஏற்படும் படபடப்பு வேர்வை, பசி போன்றவை தோன்றினால் உடனே சாக்லேட் போன்ற உணவு அருந்த வேண்டும்.

3. சர்க்கரையின் அளவு மிகவும் அதிகரிக்கும் போது (Hyperglycemia) ஏற்படும் அடிக்கடி சிறுநீர் கழிப்பது, அதிக தாகம் ஏற்படுவதை கவனிக்க வேண்டும்.

4. உடலில் நீர் சத்து குறையவோ அல்லது கவனம் செலுத்த இயலாமையோ (Loss of Concentration) ஏற்பட்டால் நோன்பை முறிக்க வேண்டும்.

## நோன்பின் போது மாத்திரைகள் இன்சுலின் எடுக்கும் முறை

1. உணவு கட்டுப்பாடு மற்றும் உடற்பயிற்சி மட்டம் மேற்கொள்பவர்களுக்கு எந்த மாற்றமும் தேவையில்லை. காலை வேளை உடற்பயிற்சியை தவிர்க்க வேண்டும். தராவிஹ் தொழுகையையே உடற்பயிற்சியாக கருதலாம்.

2. மாத்திரைகள் உபயோகிப்பவர்கள்:

1. மூன்று வேளையும் மெட்பார்மின் (Metformin Brand : Obimet) எடுப்பவர்கள் ஸகர் மற்றும் இஃப்தாரில் மாத்திரை சாப்பிட வேண்டும். உதாரணமாக மெட்பார்மின் (Metformin 500mg) மூன்று வேளை சாப்பிடுபவர் கள், மெட்பார்மின் 1000mg இஃப்தார் உணவுடனும், 500mg ஸகர் உணவுடனும் சாப்பிட வேண்டும்.

2. தினமும் ஒரு முறை எடுக்கும் சல்பனிலூரியா (Sulphonylurea), கிளிமிபிரைட் (Glimipride - Brand : Amaryl, GP), கிளிகஸைட் (Glicazide Brand : Glyred) தினமும் எடுக்கும் அதே அளவு மாத்திரையை இஃப்தார் உணவுக்கு முன் சாப்பிட வேண்டும்.

3. தினமும் காலை, மாலை இருமுறை சாப்பிடும் சல்பனிலூரியா - கிளிபன்கிளமைட் (Colibenclamide Brand - Daonil) 5mg, கிளிகஸைட் (Glicazide) 80mg, வழக்கமாக சாப்பிடும் காலை மாத்திரையின் அளவில் பாதியை (25mg) ஸகர் உணவிற்கு முன்பும், முழு அளவை, (கிளிபன்

கிளைமட் 5mg / கிளிபிஸைட் 80mg) இஃப்தாரிலும் உண்ண வேண்டும்.

4. இன்கிரியடின் (Increatin) போன்றவற்றின் அளவில் மாற்றம் தேவையில்லை.

5. தினமும் இருவேளை இன்சுலின் (Premixed - Human Mixtard / Huminsulin) எடுப்பவர்கள் வழக்கமான காலை அளவு ஊசியை இஃப்தார் வேளையிலும், மாலை வேளையின் அளவின் பாதி அளவை ஸகரிலும் எடுக்க வேண்டும். உதாரணமாக காலை 20 Units இரவு 10 Units எடுப்பவர்கள், ஸகரில் 5 Units இன்சுலினும், இஃப்தாரில் 20 Units இன்சுலின் போட்டுக் கொள்ள வேண்டும்.

6. மூன்று வேளையும் எடுக்கும் இன்சுலின், Rapid Acting Insulin (Aspart) போட்டுக் கொள்பவர்கள் அதனை இரண்டு வேளை - ஸகர் மற்றும் இஃப்தாரில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

7. அதிக நேரம் வேலை செய்யும் இன்சுலின் (Long acting Insulin - Glargine) உபயோகிப்பவர்கள் வழக்கமான அளவில் பாதியை எடுத்துக் கொள்ள வேண்டும்.

**உணவு முறைகள்**

1. சர்க்கரை நோயாளிகள் போதிய அளவு நீர் அருந்த வேண்டும்.

2. இஃப்தார் உணவை தாமதிக்காமல் உடனே உண்ண வேண்டும். ஸகர் உணவை சற்று தாமதித்து உண்ண வேண்டும். (Predawn time)

3. உண்ணும் உணவு, அதிகம் எளிய கார்போஹைடிரேட் (Simple Carbohyderate), நார்சத்து உணவு (Fibre), காய்கறிகள், பழவகைகள், ஆப்பிள், பப்பாளி, ஆரஞ்சு உண்ண வேண்டும்.

4. இனிப்பு வகைகள், உப்பு உள்ள உணவுகள் (Salted food), துரித உணவுகள் (Fast Food) மைதா உணவுகள், குளிர் பானங்கள் தவிர்க்க வேண்டும்.

5. உடற் பயிற்சிக்கு பின்பும், தராவிஹ் தொழுகைக்கு பின்பும் சிறிய அளவில் உண்ண வேண்டும். தராவிஹ் தொழுகையை உடற்பயிற்சியாக கருதலாம்.

**DIABETIC FOOT பாதிப்பு உள்ளவர்கள் கவனிக்க வேண்டியவை**

1. சர்க்கரை நோயின் காரணமாக கால்களில் பாதிப்பு உள்ளவர்கள் (Diabetic foot complication) தராவிஹ் தொழுகையில் கீழே அமர்ந்து தொழலாம்.

2. ஒளு செய்தபின் கால் விரல் களுக்கிடையே ஈரம் இல்லாமல் சுத்தமாக வைக்க வேண்டும்.

3. நீண்ட நேரம் திருக்குர்ஆன் ஓதினால் கால்களை அவ்வப்போது இடம் மாற்ற வேண்டும்.

4. முறையாக கால்களை மருத்துவ பரிசோதனை செய்ய வேண்டும்.





**மனம் திருந்திய குற்றவாளி**
**சுவாமி அசிமானந்தாவின்**
**ஒப்புதல் வாக்குமூலம்**

விலை ரூ. 20 மட்டுமே

**வேர்கள் பதிப்பகம்,**

**52/1, மண்ணடி தெரு, மண்ணடி, சென்னை - 600 001.**
**தொடர்ப்புக்கு : 8148129887**

# கற்காலம் – ஒரு வரலாற்றுப் பொய்

## மூலம் : ஹாருன் யஹ்யா தமிழில் : அபூஹாசின்

*(மிகத் தொன்மையான நாகரிகங்கள் உலோகங்களை பயன்படுத்தின என்பதை சென்ற இதழில் பார்த்தோம். அவர்களின் வாழ்க்கை முறைகள் எவ்வாறு அமைந்தன? அவற்றை பற்றி குர்ஆனும், முந்தைய வரலாறுகளும் என்ன கூறுகிறது என்பதை இந்த இதழில் பார்க்கலாம்)*

இறைவன் தூதர்களையும், புனித வேதங்களையும் வழங்கிய போதிலும், சிலர் நேர் வழியில் இருந்து பிறழ்ந்து மூட நம்பிக்கைகளை தேர்ந்தெடுத்து கொண்டனர். சிலர் பூமியையும், கற்களையும், மரங்களையும், சந்திரனையும், சூரியனையும் இன்னும் சொல்லப்போனால் தீய சக்திகள் வழிபடுவதிலும் ஈடுபட்டனர். இன்றும் கூட நேரான மார்க்கத்தை பின்பற்றும் நம்பிக்கையாளர்களுடன், நெருப்பையும், சூரியன், சந்திரன், மரத்தினால் செய்யப்பட்ட சிலைகளையும் வழிபடும் நபர்களும் இருக்கத்தான் செய்கின்றார்கள். இன்னும் சிலரோ இறைவன் இருக்கின்றான், அவன் தனித்துவமிக்கவன் என்று தெரிந்த பின்னரும் அவனுக்கு கூட்டாளிகளை கற்பித்தனர். எனினும் இறைவன் தன்னுடைய தூதர்களை தொடர்ந்து அனுப்பினான். அவர்கள் தவறான வழியில் இருப்பதை தெளிவுப் படுத்தினான். அத்தூதர்களும் அவர்களை மூட நம்பிக்கையில் இருந்து விலகி நேர்வழிக்கு வருமாறு அழைப்பு விடுத்தனர். வரலாற்றின் எல்லா கால கட்டங்களிலும் நம்பிக்கை யாளர்களும், நம்பிக்கை இல்லாதவர்களும், நேரான வழியை பின்பற்றியவர்களும், வழி தவறியவர்களும் வாழ்ந்திருக்கின்றனர்.

வரலாறு நெடுகிலும் இறைத்தூதர் களுடன் வாழ்ந்த நம்பிக்கையாளர்கள் மிகவும் நாகரீகமான சூழ்நிலையில், உயர்ந்த வாழ்க்கை தரத்துடன் வாழ்ந்திருக்கின்றனர். நூஹ் இப்ராஹிம், யூசுப், மூசா மற்றும் சுலைமான் (அவர்கள் அனைவரின் மீதும் இறைவனின் சலாமத் நிலவட்டுமாக) போன்ற தூதர்களின் காலகட்டத்திலும் சமூக் கட்டமைப்புடன் ஒரு சூழ்நிலையிலே வாழ்ந்துள்ளனர். ஈமான் கொண்ட மக்கள் ஓர் இறைவனை தொழுது, நோன்பிருந்து இறைவன் வகுத்த வரம்புகளை பேணியிருக்கின்றனர். தூய்மையுடனும் கட்டுக்கோப்புடனும் வாழ்ந்திருக்கின்றனர். தொல்லியல் துறை கண்டுபிடிப்புகளும் இறைவனை நம்பியவர்கள் சிறந்த வாழ்க்கை தரத்துடன் வாழ்ந்ததாக எடுத்துச் சொல்கிறது.

நம்ரூதின் காலகட்டத்தில் ஏற்பட்ட எல்லா தொழில் முன்னேற்றங்களும் இறைத்தூதர் இப்ராஹிம் நபியாலும் அவருடன் நம்பிக்கை கொண்ட மக்களாலும் சிறந்த முறையில் பயன்படுத்தப்பட்டுள்ளன. பிர்அவ்ன் (பாரோ) இன் காலத்தில் ஏற்பட்ட தொழில் சார்ந்த அறிவுகள், இறைத்தூதர்கள் யூசுப், மூசா, ஹாரூன் (அவர்கள் மீது இறைவனின் சலாமத் நிலவட்டுமாக) அவர்களாலும் அவர்களோடு வாழ்ந்த நம்பிக்கையாளர்களாலும் பயன்படுத்தப் பட்டுள்ளன. இறைத்தூதர் சுலைமான் நபி அவர்களின் காலத்திலும் கட்டுமானம், கலை மற்றும் தொலைத் தொடர்பு துறைகளில் உயரிய தொழில் நுட்ப முறைகள் பெரிய அளவில் கையாளப்பட்டுள்ளன.

இறைவன் சுலைமான் நபி அவர்களுக்கு வழங்கிய செல்வங்களும், சிறப்புகளும், பிற்கால தலைமுறைகளுக்கு வியத்தகு உத்வேகத்தை ஏற்படுத்துகின்றன.

நூறு ஆயிரம் வருடங்களுக்கு முன் வாழ்ந்த மக்கள் பெற்றிருந்த அறிவும், வளங்களும் இறைவனுடைய அருட்

கொடையே. இன்று வாழும் மக்களும் அதனை பெற்றுத் கொண்டிருக்கின்றனர். பத்து ஆயிரம் வருடங்களுக்கு முன் நாகரீகத்தை உருவாக்கிய மக்களே குகைகளில் அழகான ஓவியங்களை வரைந்தனர். பிரமிடுகளையும், சிக்குரத்ஸ்களையும் (Ziggurats - இவற்றை பற்றி குறிப்புகள் தொடரின் பிற்பகுதியில் வருகிறது) உருவாக்கினர். மிகப்பெரிய கற்தூண் சின்னங்களையும் பெரு நாட்டில் உயரமான இடங்களில் அமைந்துள்ள கட்டிடங் களையும் எழுப்பினர். இன்றும் துணை அணுத்துகளை பற்றி ஆராய்பவர்களும், விண்ணில் ஊர்திகளை அனுப்புவர்களும், கணினி மென்பொருள் உருவாக்குபவர்களும் இறைவனின் நாட்டப்படியே செய்கின்றனர்.

எவ்வித முன்மாதிரியுமின்றி மனிதனை படைத்த இறைவன் அவனுடைய வாழ்க்கையில் பல சோதனைகளையும், பல அருட்கொடைகளையும் இவ்வுலகில் கொடுத்தான். ஒவவொரு அருட்கொடையும் ஒரு சோதனையே. நாகரீகங்களும், தொழில் நுட்பங்களும் மற்றும் வளங்களும் இறைவன் அளித்த அருட்கொடையே என்று விளங்கி கொண்ட மக்கள் அவ்விறைவனுக்கு நன்றிக் கூறினர். அவனே அவர்களுக்கு தன்னுடைய வளங்களை அதிகப்படுத்தவும் செய்தான்.

*அன்றி, உங்கள் இறைவன் (உங்களை நோக்கி, இதற்காக) நீங்கள் (எனக்கு) நன்றி செலுத்தினால் (நான் என்னுடைய அருளைப் பின்னும்) உங்களுக்கு அதிகப்படுத்துவேன். . . (அல்குர்ஆன் 14:7)*

இறைவன் தன்னுடைய விசுவாசமிக்க அடியார்களை இவ்வுலகிலும் மறுமையிலும் மகிழ்ச்சியுறச் செய்வான்.

*ஆணாயினும், பெண்ணாயினும் நம்பிக்கை கொண்டு நற்செயல்களை எவர் செய்தாலும் நிச்சயமாக நாம் அவர்களை (இம்மையில்) நல்ல வாழ்க்கையாக வாழச் செய்வோம். அன்றி (மறுமையிலோ) அவர்கள் செய்து கொண்டிருந்ததை விட மிக்க அழகான கூலியையே நிச்சயமாக நாம் அவர்களுக்கு கொடுப்போம். (அல்குர்ஆன்-16:97)*

வரலாறு முழுவதும் முஸ்லிம்கள் அக்காலத்திற்கேற்ப வளங்களை பெற்றும், மகிழ்ச்சியான வாழ்க்கையையும் நடத்தியுள்ளனர். இயல்பாகவே சிலர் சோதனைக்கு உள்ளாக்கப்பட்டனர். ஆனால் இந்த சோதனையின் பொருளை அவர்கள் நாகரீக முன்னேற்றம் அடையாத வாழ்க்கையை நடத்தினர் என்று எடுத்துக் கொள்ள முடியாது. அதே வேளையில் எவ்வளவு தான் செல்வம், வசதி மற்றும் நாகரீக முன்னேற்றம் அடைந்த வாழ்க்கை வாழ்ந் தாலும், இறைவனை மறுப்பதிலே நிலைத்து இருந்தவர்கள், ஒழுக்க விழுமியங்களை இழந்து, பூமியில் முறைகேடுகளை கொண்டு வந்தனர். இறுதியில் ஏமாற்றத்தை அடைந் தனர். மேலும் சிலர் தற்போது உள்ள முன்னேற்றம் அடைந்த தொழில் நுட்பத்தை விட உயர்ந்தவற்றை அனுபவித்துள்ளனர். இதனை திருமறை வசனம் வெளிப் படுத்துகிறது.

*இவர்கள் பூமியில் சுற்றித் திரிய வேண்டாமா? அவ்வாறாயின் இவர்களுக்கு முன்னிருந்த (நிராகரிப்ப)வர்களின் முடிவு எவ்வாறாயிற்று என்பதைக் கண்டு கொள்வார்கள். (முன்னிருந்த) அவர்கள் இவர்களை விட பலசாலிகளாகவும், இவர்கள் எவ்வளவு அபிவிருத்தி செய்தார்களோ அதை விட அதிகமான பூமிகளைப் பயன்படுத்தி அபிவிருத்தி செய்தவர்களாகவும் இருந்தார்கள். (இந்நிலைமையில்) அவர் களிடம் நம்முடைய தூதர்கள் தெளிவான அத்தாட்சிகளைக் கொண்டு வந்தார்கள். அல்லாஹ் அவர்களுக்குத் தீங்கிழைக்க வில்லை. எனினும் அவர்கள் (அந்நபிமார் களை பொய்யாக்கி) தமக்கு தாமே தீங்கிழைத்துக் கொண்டனர். (அல்குர்ஆர்-30:9)*

கலாச்சாரங்களின் தேக்கத்தை பரிணாம செயல்முறையின் ஆதாரமாக எடுத்துக் கொள்ளலாமா என்பதை அடுத்த இதழில் காணலாம்.

இன்ஷா அல்லாஹ்

**தொடரும். . .**

# கோடையும் குழந்தைகளும்!



**வா**ழ்க்கை ஓட்டத்தில் ஒரு கல்வியாண்டை கடந்து விட்டார்கள் மழலைகள்.

அவர்களை அனைத்துப் பகுதிகளி லிருந்தும் தாக்கிய 'டென்ஷன்' (அழுத்தங்கள்) முடிவுக்கு வந்து கொண்டிருக்கின்றன.

அடுத்த 'டென்ஷன்' (அழுத்தம்) தொடங்குமுன் அகப்பட்டது ஓர் ஓய்வு.

கோடை தன் வெம்மையைக் காட்டிடத் தொடங்கிவிட்டது.

ஆனால் அவர்களை அவ்வாறு வெளி யில் வெயிலில் விடுவது முறையாகாது என் கின்றார்கள் மருத்துவ ஆராய்ச்சியாளர்கள்.

அவர்கள் கடும் வெயிலில் தொடர்ந்து அதிக நேரம் விளையாடினால் சருமங்கள் பாதிக்கப்படும். தொடர்ந்து வரும் கோடை களிலும் அவர்கள் இதையே தொடருவார்கள் என்றால் அது பயங்கரமான பின் விளைவு களை ஏற்படுத்துமாம். அந்தப் பின் விளைவு களுள் ஒன்றாக தோல் புற்று நோய் கூட வரலாம் என்கின்றார்கள் ஆராய்ச்சி யாளர்கள்.

ஏனெனில் மழலைகளின் தோல்கள் தொடர்ந்து கடும் வெயிலில் படும்போது, அவை பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளாகு மாம். அதனுடைய தாக்கம் "Cumulative" அதாவது காலம் போக போக அதிகரித்துக் கொண்டே போகுமாம்.

இந்தக் கோடையில் ஏற்படும் தாக்கம் அப்படியே தோல்பகுதியில் தங்கிவிடுகின்றது. பின்னர் அஃது அடுத்தக் கோடையில் அதிகப்படுகின்றது. இப்படி கோடைக்குக் கோடை மிகைப்பட்டுக் கொண்டே செல்லுமாம். இறுதியில் அஃது ஒரு பொல்லாத நோயாகப் புலப்படுமாம்.

இந்தத் தாக்கம் வாழ்க்கை முழுவதும் இருக்குமாம். இதை இன்னும் விளக்கமாய் இப்படிச் சொல்லலாம்!

ஒரு குழந்தையின் வாழ்க்கையில் முதல் 18 ஆண்டுகளை எடுத்துக் கொள்வோம். இதில் 80 சதவீதம் அந்தக் குழந்தை சூரிய ஒளிபடும்படியாக இருந்தால் அஃது பிற்காலத்தில் தோல் புற்று நோய்க்கு ஆளாகிடும் வாய்ப்புகள் உண்டு. தேமல், தோலில் தொய்வு ஏற்படுதல், கண்களில்

நிரந்தரப் பாதிப்பு என பல சேதங்களுக்கு ஆளாகலாம்.

இதனால் நாம் நமது குழந்தைகளை நேரடியாக வெயில் படாமல் பாதுகாத்து வைத்திட வேண்டும். குறிப்பாக காலை 10 முதல் மாலை 4 மணி வரை இதைச் செய்திட வேண்டும்.

அதே போல் கோடையில் குழந்தைகளுக்கு அணியும் ஆடையிலும் அதிகமாகச் கவனம் செலுத்திட வேண்டும்.

தலையை மறைக்கும் தொப்பி ஒன்று ஆடை அணிவகுப்பில் நிரந்தரமாக இருக்கட்டும்.

மெல்லிய வெள்ளை நிற ஆடைகள் மிகவும் பொருத்தமானவை. கறுப்பு நிறம், அதே போல் அடர்த்தியான நிறமுடைய ஆடைகளை அணிய வேண்டாம்.

சிலர் வெள்ளை நிறத்தவர்கள் தாம் கடும் வெயிலில் பாதிக்கப்படுவார்கள் என்பது போன்ற ஒரு தவறான எண்ணத்தில் இருக்கின்றார்கள். இஃது உண்மையல்ல. கறுப்பு நிறத்தை உடையவர்களும் சமமாகவே பாதிக்கப்படலாம்.

ஆக, எந்த நிறைத்தையுடைய குழந்தையாக இருந்தாலும் கடும் வெயிலில் வெளியே வராதிருப்பதே சிறந்தது.

வெயில் நேரங்களில் பால் குடி குழந்தைகளுக்கு அடிக்கடி பால் கொடுப்பது நல்லது. பால் குடி பருவத்தை தாண்டிய குழந்தைகளுக்கு பழச்சாறுகள் பாங்கான உணவு. வசதியற்றோர் சுத்தமான தண்ணீரை அடிக்கடி பருகத்தருவது நலம். கண்ணுக்கு குளுமை தரும் கண் கண்ணாடியையும் அணியலாம்.

இப்படி நாமெடுக்கும் அனைத்து வகை எச்சரிக்கைகளையும் விஞ்சி தோல் சேதப்பட்டு போனால் தண்ணீரில் துணியை நனைத்து எரிச்சல் வரும் இடங்களில் சிறிது நேரம் வைக்கலாம். பின்னர் சிறியதோர் இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் தண்ணீரில் நனைத்த துணியை வைக்கலாம். இப்படி இரண்டொரு தடவை தினமும் செய்யலாம். இதையும் விஞ்சி அரிப்போ, எரிச்சலோ ஏற்பட்டால் மருத்துவரை அணுகுவதே சிறந்தது.

இப்படி நாம் குழந்தைகளை கோடையின் வெயிலிருந்து பாதுகாத்திட வீட்டுக்குள் வைத்திருந்தால் தொலைக் காட்சிகளைப் பார்த்துக் கண்ணைக் கெடுத்துக் கொள்ளாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

கோடை வெயிலிருந்து தப்பிக்க வாய்ப்புக்கள் உடையோர் கோடை வாசஸ்தலங்களை நோக்கி பயணங்களை மேற்கொள்வார்கள்.

பாட்டாளி மக்களும் பட்டினிச் சாவுகளும் அதிகரித்து வரும் ஒரு நாட்டில், உல்லாசப் பயணங்கள் ஒரு பெரும் ஆடம்பரம் தான் என்றாலும் முடிந்தவரை செலவு குறைந்த இடங்களுக்குப் போய்வருவது சிறந்தது.

அவ்வாறு நாம் பயணங்களைச் செய்யும் போது அந்தப் பயணங்களையும் படிப் பினைகள் தருவனவாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

இறைவனும் இதையே வலியுறுத்து கின்றான்.

நாம் பூமியில் விரிந்து விசாலமாய் பயணம் செய்வதை வலியுறுத்தும் இறைவன் அவை தரும் படிப்பினைகளாகப் பின் வருவனவற்றைக் குறிப்பிடுகின்றான்.

இதற்கு முன்னால் எத்தனையோ சமுதாயங்கள் படைத்தவன் இறைவன் ஒருவன் தான் என்பதைப் புறக்கணித்தன. அனைவரையும் படைத்த இறைவன் ஒருவனே என்பதைப் பிரச்சாரம் செய்த இறைவனின் தூதர்களையும் புறக்கணித்தன. ஆணவம் கொண்டு அலைந்தன. அவையெல்லாம் இன்று மண்மூடிக்கிடக்கின்றன.

நாம் கண்டு களிக்கும் இயற்கையும், எழிலும், வனங்களும் அவை வெளிப்படுத்தும் வனப்பும் இறைவன் இருக்கின்றான். அவன் ஒருவன், அவனே நம்மையெல்லாம் படைத்து பரிபாலித்து வருபவன் என்பனவற்றைப் பறைசாற்றுபவை என்பதை பக்குவமாய்

எடுத்துச் சொல்லிட வேண்டும். அவனே அந்த உலகை ஒரு முடிவுக்கும் கொண்டு வருவான். அந்த நாளே இறுதி முடிவு நாள்.

அவன் அப்போது நாம் இந்த உலக வாழ்க்கையில் செய்த நன்மைகள், தீமைகள் இவற்றின் அடிப்படையில் தீர்ப்பு வழங்குவான்.

நாம் செய்த நன்மைகள் அதிகமானால் நல்ல சொர்க்கம் கிடைக்கும். தீமைகள் அதிகமானால், நாம் இப்போது தப்பிக்க நினைத்த உல்லாசப் பயணம் மேற்கொண்டிருக்கின்றோமே, அதனையும் விஞ்சும் 'சுடுதழலில்' சேருவோம்! என்பன வற்றைக் குழந்தைகளுக்கு சொல்வோம்.

இப்போதே அவர்களை நேரான வழியில் செலுத்துவோம்!

அக்கிரமக்காரர்கள் வசித்த எத்தனையோ ஊர்களை, நாம் அழித்திருக்கிறோம். அதனுடைய முகடுகள் இடிந்து குட்டிச் சுவராகக் கிடக்கின்றன. எத்தனையோ கிணறுகள் பாழடைந்து கிடக்கின்றன. எத்தனையோ மாடமாளிகைகள் பாழாகிக் கிடக்கின்றன.

அவர்கள் பூமியில் சுற்றித் திரிந்து (இவைகளைப்) பார்க்கவில்லையா? (அவ்வாறு பார்ப்பார்களாயின்) உணர்ந்து கொள்ளக்கூடிய இருதயங்கள் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும். அல்லது (நல்லுபதேசத்தைக்) கேட்கக் கூடிய செவி அவர்களுக்கு உண்டாயிருக்கும். நிச்சயமாக அவர்களுடைய (வெளிக்) கண்கள் குருடாகவில்லை. எனினும், நெஞ்சங்களில் இருக்கும் (அவர்களுடைய அகக்) கண்கள் தாம் குருடாகிவிட்டன.

**(அல்குர்ஆன்- 22:45,46)**

மேலும் பார்க்க திருக்குர்ஆன் வசனங்கள் - 40:21, 40:82, 30:9, 35:44, 29:20.

**Courtesy : T.N.I.E. 25.04.2005**

**MGM**




விலை ரூ. 60 மட்டுமே

**தீவிரவாதிகள் என்று சித்தரிக்கப்படும் தாலிபான்கள் யார்? என்பதை தெரிந்து கொள்ள இந்த நூல்களை படியுங்கள்!**



விலை ரூ. 90 மட்டுமே

**வேர்கள் பதிப்பகம்,**

**52/1, மண்ணடி தெரு, மண்ணடி,**

**சென்னை - 600 001.**

**தொடர்புக்கு : 8148129887**

# வேர்கள் வெளியீட்டகத்தின் நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | சிறையில் எனது நாட்கள் - ஜெய்னப் அல் கஸ்ஸாலி - பக்கம் : 212 | ரூ. 90.00 |
| 2. | ஆஃப்கானிஸ்தான் முஜாஹித்களின் தியாக வரலாறு - மு. குலாம் முஹம்மது | ரூ. 100.00 |
| 3. | சாதி ஒழிந்தது - டி.எம். மணி, ஐந்தாம் பதிப்பு - பக்கம் 132 | ரூ. 50.00 |
| 4. | End of Casteism T.M. Mani பக்கம் -134 | ரூ. 50.00 |
| 5. | அஹமதாபாத் குண்டுவெடிப்புகள் - மு. குலாம் முஹம்மது, பக்கம் -48 | ரூ. 10.00 |
| 6. | டெல்லி குண்டுவெடிப்புகள் - மு. குலாம் முஹம்மது, பக்கம் - 48 | ரூ. 10.00 |
| 7. | நாடாளுமன்ற தாக்குதல் வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள்,<br>மு. குலாம் முஹம்மத் | ரூ. 25.00 |
| 8. | மால்கம் எக்ஸ் - மு. குலாம் முஹம்மது, பக்கம் -231 | ரூ. 80.00 |
| 9. | தீண்டாமையை கற்பிக்கும் கடவுளை மாற்றுவோம், டி.எம். மணி, பக்கம் -31 | ரூ. 20.00 |
| 10. | செந்தமிழ்நாட்டுச் சேரிகள்- டி.எம். மணி, பக்கம்:94 | ரூ. 40.00 |
| 11. | கர்கரேயை கொலை செய்தது யார்? பக்கம் 453 | ரூ. 250.00 |
| 12. | சிந்திப்பீர் செயல்படுவீர், நா. கோதண்டபாணி, பக்கம் 47 | ரூ. 15.00 |
| 13. | ஒரு நீதிபதியின் விடுதலை முழக்கம், ப. கோபால கிருஷ்ணன், பக்கம்-84 | ரூ. 40.00 |
| 14. | சாதி ஒழிந்தது- ஹிந்தி - டி.எம். மணி, பக்கம் - 148 | ரூ. 50.00 |
| 15. | நாம் பிரிந்து விடவேண்டாம், பேராசிரியர் கா.மு. இல்யாஸ் ரியாஜி, பக்கம்-292 | ரூ. 175.00 |
| 16. | தாலிபானின் பிடியில், மு. குலாம் முஹம்மது, பக்கம் - 202 | ரூ. 90.00 |
| 17. | பாலஸ்தீன முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு, மு. குலாம் முஹம்மது பக்கம்-163 | ரூ. 110.00 |
| 18. | பாபரி மஸ்ஜித் அடிப்படை தகவல்கள், மு. குலாம்மது, பக்கம் -143 | ரூ. 90.00 |
| 19. | இஸ்லாமிய நாகரிகம் - முஸ்தஃபா அல் சிபாய், பக்கம் - 206 | ரூ. 130.00 |
| 20. | கஷ்மீரின் பாதி விதவைகள், மு. குலாம் முஹம்மது, பக்கம் - 140 | ரூ. 70.00 |
| 21. | எது முதலில்? டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவீ, தமிழில் கா.மு. இல்யாஸ் ரியாஜி | ரூ. 50.00 |
| 22. | சாதி ஒழிந்தது - கன்னடம், | ரூ. 50.00 |
| 23. | அண்ணல் அம்பேத்கரின் மதமாற்றம் பின்னணி? டி.எம். உமர் ஃபாரூக் | ரூ. 20.00 |
| 24. | கசாப்-ஐ இரகசியமாகத் தூக்கிலிட்டது ஏன்? மு. குலாம் முஹம்மது பக்கம்:48 | ரூ. 30.00 |
| 25. | முஹம்மத் (ஸல்) அவர்கள் ஓர் சகாப்தம், பக்கம் 30 | ரூ. 15.00 |
| 26. | இஸ்லாமும் இதர பொருளாதார கொள்கைகளும், பக்கம் - 120 | ரூ. 50.00 |
| 27. | இஸ்லாம் வழங்கும் தண்டனைகள் | ரூ. 40.00 |
| 28. | இஸ்லாமும் விஞ்ஞானமும் | ரூ. 70.00 |
| 29. | இஸ்லாம் அடிமைத்தனத்தை அங்கீகரித்ததா? | ரூ. 60.00 |
| 30. | இஸ்லாமும் பெண்களும் | ரூ. 70.00 |
| 31. | இஸ்லாம் இன்றைய கொள்கைகளை வெல்லுமா? | ரூ. 70.00 |
| 32. | தேசப்பிரிவினைக்கு யார் காரணம்? | ரூ. 30.00 |
| 33. | 26/11 -நீதித்துறையும் மயங்கியது ஏன்? | ரூ. 220.00 |
| 34. | ஒரு தலித் போராளியின் வாழ்வும், அவர் காட்டிய வழியும் | ரூ. 20.00 |

**வேர்கள் பதிப்பகம்,** 52/1, மண்ணடி தெரு, மண்ணடி, சென்னை - 600 001.

தொடர்ப்புக்கு : 8148129887




# பெரும் பாவங்கள்!

குஃப்ர் எனும் இறைமறுப்பு பலவகை உண்டு. அவற்றுள் ஒரே தரமானவை, வெவ்வேறு வகைப்பட்டவை உண்டு என்பதை முன்னர் கண்டோம்.

மார்க்கம் தடை செய்துள்ளவற்றில், இறைமறுப்புக்கு (அதன் பல்வேறு வகைகளுக்கு) அடுத்தப்படியாக பாவங்கள் வருகின்றன.

பாவங்கள் பெரிய பாவம், சிறிய பாவம் இருவகையுண்டு.

பெரும்பாவங்கள் என்பவை, எந்தப் பாவங்களைச் செய்வதால் இறைவனின் கோபத்துக்கும், சாபத்துக்கும் ஆளாக நேரிடுமோ (மறுமையில்) நரகமும் (இம்மையில்) தண்டனையும் கிடைக்குமோ அதுவே பெரும் பாவம்.

பெரும் பாவங்கள் எவை என்பதை வரையிட்டுக் காட்டுவதில் மார்க்க அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு நிலவுகிறது.

எந்தெந்த பாவங்களுக்கெல்லாம் உலகில் தண்டனை உண்டு என்று மார்க்கம் கூறியுள்ளதோ அல்லது மறுமையில் நரகம் கிடைக்கும், சுவர்க்கம் கிடைக்காது. இறைவனின் கோபத்துக்கும், சாபத்துக்கும் ஆளாக வேண்டியிருக்கும் என்று கடுமையாக எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறதோ அவைதான் பெரும்பாவங்கள் என்பது சரியான கருத்தாக இருக்கக் கூடும்.

இப்படி விடுக்கப்பட்டிருக்கும் எச்சரிக்கைகளை அவை பெரும்பாவங்கள் என்பதற்கு சான்றாக கருத வேண்டும்.

அழிக்கும் பெரும்பாவங்கள் ஏழு என்று நபிமொழிகள் கூறுகின்றன. (அறிவிப்பாளர் : அபூஹுரைரா (ரழி) நூல் : புஹாரி, முஸ்லிம்).

அவற்றில், இணைவைப்புக்குப் பிறகு அநீதியான கொலை, சூனியம் செய்தல், வட்டி வாங்கி திண்பது, அநாதையின் செல்வத்தை அபகரித்து உண்பது, இறை நம்பிக்கையுள்ள அப்பாவி பத்தினிப் பெண்களை அவதூறு கூறுவது, போர்க்களத்திலிருந்து பின் வாங்குவது ஆகியன கூறப்பட்டுள்ளன.

வேறு சில நம்பத்தகுந்த அறிவிப்புக் களில் பெற்றோரைத் துன்புறுத்துவது,

உறவுகளை துண்டிப்பது, பொய்சாட்சி கூறுவது, பொய்ச் சத்தியம், மது குடிப்பது, விபச்சாரம், ஓரினச் சேர்க்கை, தற்கொலை, வழிப்பறி, சூறையாடுவது, ஊழல், லஞ்சம், கோள் சொல்லுதல் ஆகியன கூறப்பட்டுள்ளன.

இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகளை விடுவதும் பெரும் பாவங்கள்தான். ஐவேளைத் தொழுகை தொழாமலிருப்பது, ஸகாத் எனும் செல்வத்தின் வரி தர மறுப்பது, ரமழானில் காரணமின்றி நோன்பு நோற்காமலிருப்பது, வாய்ப்பு வசதி வந்த பின்னரும் ஹஜ் செய்யாமலிருப்பது ஆகியன பெரும் பாவங்களே.

இந்த பெரும் பாவங்களும் கூட பல தரங்களில் உள்ளன என்பதற்கு நபி மொழிகளில் சான்றுகள் உள்ளன.

“மிகப் பெரும் பாவங்கள் எவையென்று உங்களுக்கு கூறட்டுமா?” என்று கேட்டுவிட்டு நபி (ஸல்) கூறினார்கள். இணைவைப்பு, பெற்றோரைத் துன்புறுத்துதல், பொய்சாட்சி கூறுதல் (அறிவிப்பாளர் : அபூபக்ர் (ரழி) நூல்: புஹாரி, முஸ்லிம்)

மேலும், நபி (ஸல்) கூறினார்கள் “ஒருவர் தன் பெற்றோரை சபிப்பது மிகப் பெரும் பாவங்களுள் ஒன்று”. இப்படிச் சொன்னவுடன் தோழர்கள் “ஒருவர் தன் பெற்றோரை எப்படி சபிப்பார்?” என்று கேட்டனர். அதற்கு “ஒருவர் இன்னொருவரின் தந்தையைத் திட்டுவார். அதற்கு பதிலாக அவர் இவரின் தந்தையைத் திட்டுவார். தாயைத் திட்டுவார் (அதுதான் இவர் தன் பெற்றோரைத் திட்டுவதாகும்)” என்றார்கள் நபி (ஸல்) அவர்கள். (அறிவிப்பாளர்: அப்துல்லாஹ்பின் அம்ரு (ரழி) நூல் : புஹாரி; முஸ்லிம்).

இவர் ஒரு மரக்கால் அளந்து போட்டான். அவனோ அதற்குப் பதிலாக இரண்டு மரக்கால் அளந்து போட்டுவிட்டான்.

ஆம், இவன் அவனின் தந்தையை மட்டுமே திட்டினான். அவனோ இவனின் தாயையும் சேர்த்தே திட்டிவிட்டான்.

கவனியுங்கள், இது (ஹராம்) கூடாத செயல் என்றோ (கபாஇர்) பாவம் என்றோ கூறவில்லை. (அக்பருல் கபாஇர்) மிகப் பெரும் பாவம் என்று கூறுகிறது அந்த நபி மொழி.

இன்னொருவன் மூலமாக தன் பெற்றோருக்கு திட்டு வாங்கித் தருவதே மிகப் பெரும் பாவமென்றால் நேரடியாகவே தன் பெற்றோரைத் திட்டுவதையும், அடிப்பதையும், துன்புறுத்துவதையும் என்னவென்று சொல்ல!

தன் பெற்றோருக்குத் தாங்கவொண்ணா மனக் கஷ்டத்தையும், உடல் சிரமங்களையும் தந்து அவர்களின் உலக வாழ்வையே நரகமாக்கிவிட்ட பிள்ளைகளை என்ன சொல்ல!

பாவங்களைக் கூட இஸ்லாம் இரண்டு வகையாகப் பிரித்துப் பார்க்கிறது.

தன் பலஹீனத்தால் உந்தித் தள்ளப்பட்டு செய்யயும் பாவங்கள். அநியாயமாக வரம்பு மீறிச் செய்யும் பாவங்கள் என இரண்டு வகையாகப் பார்க்கிறது.

முதல்வகைப் பாவத்துக்கு விபச்சாரத்தையும், இரண்டாம் வகைப் பாவத்துக்கு வட்டியையும் உதாரணமாக கூறலாம்.

வட்டி அல்லாஹ்விடத்தில் மிக பயங்கரமான பாவமாகக் கருதப்படும். வட்டியை எச்சரிப்பது போல வேறெந்த பாவத்தையும் அவ்வளவு கடுமையாக எச்சரிக்கவில்லை இறைவேதம்.

“ஓரிறை நம்பிக்கை கொண்டோரே அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். எஞ்சியுள்ள

வட்டியை விட்டு விடுங்கள். அப்படி நீங்கள் விடவில்லை என்றால் அல்லாஹ்வுடனும் அவனின் திருத்தூதருடனும் போர் புரியத் தயாராகிவிடுங்கள்'' (2:278,279)

வட்டி வாங்குபவன் வட்டி கொடுப்பவன், அதற்குக் கணக்கு எழுதுபவன், அதற்குச் சாட்சிகளாக இருந்தவர்கள் அனைவரையும் நபி (ஸல்) சபித்தார்கள்.

"ஒரு திர்ஹம் (வெள்ளிக்காசு) அளவு வட்டியை அதுவட்டிப்பணம் தான் என்று தெரிந்தே உண்பது முப்பத்து ஆறு தடவை விபச்சாரம் செய்வதை விட பயங்கரமானது'' என்று நபி (ஸல்) கூறினார்கள். (அறிவிப்பாளர் : அப்துல்லாஹ் பின் ஹன்ழலா (ரழி) நூல் : அஹ்மது, தபரானீ)

"எழுபது அல்லது எழுபத்து இரண்டு அல்லது எழுபத்து மூன்று வகையான பாவங்களின் வாசலாக வட்டி இருக்கிறது. அவற்றில் சிறிய அல்லது எளிய பாவம் ஒருவன் தன் தாயைத் திருமணம் செய்வது'' என்றும் ஒரு நபி மொழி உண்டு (பராவு (ரழி) ஹாகிம் - இப்னு மஸ்வூத் (ரழி) ஹாகிம் - அபூஹுரைரா (ரழி) இப்னு மாஜா.

விபச்சாரம், வட்டி ஆகிய இரு பெரும் பாவங்களையும் இஸ்லாம் ஒரே சம கோட்டில் வைக்கவில்லை என்பதை இவை நமக்குக் காட்டுகின்றன.

**தொடரும்...**

**தமிழ் வடிவம் : இல்யாஸ் ரியாஜி**


# இப்போது பரபரப்பான விற்பனையில்




விலை ரூ. 200 மட்டுமே




விலை ரூ. 225 மட்டுமே

**வேர்கள் பதிப்பகம்,**

**52/1, மண்ணடி தெரு, மண்ணடி, சென்னை - 600 001. தொடர்ப்புக்கு : 8148129887**

தொடர். . .

## முஸ்லிம்களின் வீழ்ச்சியால் உலகம் இழந்ததென்ன?



# துறவு VS உலகாதாயம்

**- அபுல் ஹசன் அலீ நத்வீ**

**மொழிபெயர்ப்பு: அஹ்மது ஜலாலுத்தீன் நத்வீ**

(இப்படி எங்கிங்கினாதபடி எங்கும் தன் ஆதிக்கத்தைச் செலுத்தியிருந்த துறவுக் கோட்பாடு தனது இழிந்த முகத்தைக் காட்டத் தொடங்கியது)

வீரமும், தீரமும் சிறப்பியல்புகளாய்க் கருதப்பட்ட காலம் போய் துறவுக் கோட்பாட்டின் விளைவாக நிலைமை மாறிவிட்டது வீரம் குறைகுணமானது. தீரம் இழி செயலானது?

ஆம், மகிழ்ச்சி, சந்தோஷம், கலககலப்பு, மாண்பு, வீரம், துணிவு ஆகிய மனிதப்பண்பு களையெல்லாம் மக்கள் இழந்தார்கள்.

(எல்லோரின் இதயத்திலும் துறவுக் கோட்பாடு ஆதிக்கம் செலுத்தும் போது இப்பேர்பட்ட மனிதப் பண்புகளுக்கு அங்கே என்ன வேலை இருக்க முடியும்).

குடும்ப வாழ்வின் ஆதாரப் பண்புகள் ஆட்டம் கண்டன. ஒரு துறவியின் இதயத்தில் பிரவாகமெடுத்து ஓட வேண்டிய அன்பும் கருணையும் வற்றி வறண்டு போய் விட்டன. கசிந்துருகி கண்ணீர் சிந்த வேண்டிய கண்கள் உருகவில்லை.

பாதிரிகளெல்லாம் அரக்கர்களாகவும் நன்றி கெட்டவர்களாகவும் மாறி போயினர். தம் பெற்றோர்களைப் பற்றியோ பிள்ளை களைப் பற்றியோ உறவினர்களைப் பற்றியோ குடும்பத்தைப் பற்றியோ அக்கறை யற்று அலைந்தார்கள்.

துறவுச் சிந்தனை அவர்களை அரக்கர் களாக்கியிருந்தது. நன்றி கெட்டவர்களாக்கி யிருந்தது.

தமது பெற்றோரை சமூகத்துக்கு பாரமாக ஆக்கி விட்டார்கள். மனைவி மார்களை ஆதரவற்ற கைம்பெண்களாக்கி விட்டார்கள். தாம் பெற்ற பிள்ளைகளை கையேந்திப் பிழைக்கும் பிச்சைக்காரர்களாக அநாதைகளாக ஆக்கிவிட்டார்கள்.

இந்தப் பாதிரிகளின் ஒரே நோக்கம், "மரணத்துககுப் பின்னர் வரும் மறுமை வாழ்வின் தண்டனை யிலிருந்து தாம் தப்பிக்க வேண்டும். இவ்வுலகில் யார் வாழ்ந்தாலென்ன, செத்தாலென்ன?" என்பதுதான்.

இதற்காக அவர்கள் குடுமபத்தைத் துறந்து பாலைவனங்களைத் தேடிப் போனார்கள்.

நெஞ்சம் நெகிழ்கின்ற கண்ணீர் சுரக்கின்ற சம்பவங்களை அறிஞர் லேகி இவர்களைப் பற்றிப் பதிவு செய்திருக்கிறார். (See : History of European Morals Part II Chapter IV from constantine to Charlemagne)

பெண்களை சமுதாய வாழ்வின் ஓர் அங்கமாக ஏற்பதும் அவர்களுக்கு அருகில் செல்லுவதும் கூடப் பாவமென்று கருதி பெண்களின் நிழலைக் கண்டாலே விரண்டு ஓடினார்கள்.

பெற்றெடுத்த தாயோ, உடன் பிறந்த சகோதரியோ மனைவியோ யாராக இருந்தாலும் பெண் பெண்தான். வீதிகளில் அவர்களுடன் நடப்பதோ அவர்களோடு பேசுவதோ நற்செயல்களையெல்லாம் அழித்துவிடும் பெரும் பாவம் அது. ஆன்மிக வாழ்வுக்கே பேராபத்தாக போய் விடும் என்று நம்பினார்கள்.

கேள்விப்படுவோர் அழுவதா சிரிப்பதா என்று எண்ணத்தக்க அளவிலான இப்படிப்பட்ட ஏராளமான நிகழ்வுகளை லேகி எடுத்துரைக்கிறார்.

## கட்டுக்கடங்காத உலகாதயத்தை ஒழுங்கு படுத்த துறவுக் கோட்பாட்டால் இயலவில்லை

இவ்வாறாக துறவுச் சிந்தனை எல்லை கடந்து நின்றதை வாசிக்கும் நீங்கள் 'அப்பபடியானால் ரோமர்களிடம் மண்டியிருந்த உலகாதாய வெறியை துறவு வந்து வீழ்த்தியிருக்குமே...! மடை உடைத்துப் பாயும் உலகாதாயத்தை அடக்கியிருக்குமே. . . ' என்று எண்ணி விடாதீர்கள்.

அப்படியெல்லாம் ஒன்றும் நடக்கவில்லை. அது நடக்கவும் செய்யாது. மனித சுபாவமும் அதை ஏற்காது. இப்படி ஒரு (போலியான கொள்கை இன்னொரு போலியான கொள்கையை அடியோடு வீழ்த்திய) நிகழ்வு நடந்ததாக வரலாற்றில் ஒரு துணுக்கை கூட காண முடியாது.

உலகாதாயச் சிந்தனையின் வீரியத்தைக் கட்டுப்படுத்தி அதை சமன்பாட்டுக்குக் கொண்டு வந்து மனிதனை சம நிலையான தொரு வாழ்க்கையை வாழ வைக்க வேண்டுமானால் துறவுக் கோட்பாட்டால் அது இயலாது.

மாறாக அது, அழகிய மனித சுபாவத்துக்கு ஏதுவான நுண்ணறிவுடன் கூடிய சட்டங்களைக் கொண்ட ஒழுக்கத்தைப் போதிக்கின்ற ஒரு நல்ல மார்க்கத்தால் மட்டுமே இயலும்.

அந்த மார்க்கம், மனித சுபாவத்தையே மாற்றிக் காட்டுகிறேன் பார் என்று மல்லுக்கு நிற்கக்கூடாது. ஏனென்றால் மனித சுபாவமென்பது ஒரு போதும் மாறப் போவதில்லை. எனவே சுபாவத்தை மாற்ற முயற்சிப்பதற்குப் பதிலாக அதை பயனுள்ள வழிக்கு மடை மாற்ற வேண்டும்.

தீய வழிக்கு பயன்பட்ட ஒரு இயல்பை நல்வழிக்கு பயன்படுத்த வேண்டும். இப்படித்தான் இஸ்லாம் செய்தது. அண்ணல் நபி(ஸல்) இப்படித்தான் செய்தார்கள்.

அரபுக்களிடமிருந்த வீரம் என்ற சுபாவம் இன வெறிக்கும் சகோதரச் சண்டைக்கும் உள்நாட்டுப போருக்கும் பழைய பகைக்குப் பழித் தீர்ப்பதற்குமே பயன்பட்டுக் கொண்டிருந்தது. இதை அல்லாஹ்வின் பாதையில் அறப் போர் புரிந்திடவும் அல்லாஹ்வின் வாக்கை மேலோங்கச் செய்யவும் இஸ்லாம் பயன்படுத்தியது.

தம்மிடமிருந்த தாராளமனத்தால் வீண் செலவு செய்துகொண்டிருந்த அரபுக்களை

இறைவனின் பாதையில் அறப்பணிக்கு வாரி வழங்கும் வள்ளல்களாக்கியது இஸ்லாம்.

அஞ்ஞான வழிகேட்டில் சிக்கியிருந்த வர்களை மீட்டு இஸ்லாம் எனும் நேர்வழிக்குத் திருப்பியது. ஒன்றைக் கொண்டு (நல்லதைக் கொண்டு தீயதை) ஒன்றை அகற்றினார்கள்.

இதனால் அனைவரும் உளப்பூர்வ மாகவும் மெத்த உற்சாகத்துடனும் இயங்கி னார்கள்.

அறிஞர் இப்னுதைமிய்யா அழகு படச் சொல்லுவார் : "ஏதேனுமொன்றில் ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்களை அதை விட வைக்க வேண்டுமென்றால் அதற்கு மாற்றாக மற்றொன்றில் ஈடுபடுத்த வேண்டும். ஏனென்றால் மனித சுபாவங்கள் செயல்பட ஏற்றதாகவே படைக்கப்பட்டுள்ளன. செயல் படாமலிருப்பதற்காக அவை படைக்கப் படவில்லை. மனித சுபாவத்தை மாற்று வதற்கோ, அழிப்பதற்கோ இறைத் தூதர்கள் வரவில்லை. அதை முழுமைப்படுத்தி அதற்கு வேலை கொடுக்கவே வந்தார்கள்" (காண்க : இப்னுதைமிய்யாவின் நூல்கள் இக்திழாவுஸ் சிராத்தில் முஸ்தகீம் மஹாலஃபத்த அல் ஹாபில ஜஹீம் பக்கம் : 143 மற்றும் நுபுவ்வாத்)

பெருமானார் (ஸல்) அவர்கள் அரபுக்களை எப்படி செயல்பட வைத்தார்கள் என்பதற்கு ஓர் உதாரணம் கூறுகிறேன் பாருங்கள்.

அண்ணல் நபி (ஸல்) மதீனாவுக்கு வந்து (அங்கே ஓர் இஸ்லாமிய அரசை நிறுவிய) பொழுது அம்மக்கள் (வருடத்தில்) இரண்டு தினங்கள் மகிழ்ச்சி பொங்க விளையாடும் பெருநாள்களாகக் கடைபிடித்து வந்தனர்.

அதனை அறிந்த நபி(ஸல்) "இவை என்ன தினங்கள்?" என்று கேட்க "அஞ்ஞான காலத்தில் இந்நாட்களில் நாங்கள் மகிழ்ச்சி பொங்க விளையாடிக் கொண்டிருப்போம்" என்று அம்மக்கள் கூறினர்.

அதற்கு நபி(ஸல்) அவர்கள் "இவ்விருதினங்களுக்கும் மாற்றாக இவற்றை விட சிறந்த வேறு இரு தினங்களை அல்லாஹ் உங்களுக்கு வழங்கிவிட்டான். அவை ஈதுல்ஃபிதர் எனும் ஈகைத் திருநாள், ஈதுல் அள்ஹா எனும் தியாகத் திருநாள்" என்று கூறினார்கள். (அறிவிப்பாளர் : அனஸ்(ரழி) நூல்: அஹ்மது அபூதாவூத், நஸமீ)

மேலும் அன்னை ஆயிஷா (ரழி) கூறுகிறார்கள். ஒரு நாள் என் தந்தை அபூபக்ர் (ரழி) என் வீட்டுக்கு வந்த போது மதீனத்துச் சிறுமிகள் இருவர் என் வீட்டில் இருந்தனர். அவர்கள் பாடகிகளல்லர். எனினும் மதீனாவாசிகளிடையே (நடந்த உள் நாட்டுப் போர்) புஆஸ்போர் நடந்த நாள் பற்றி பாடல்களை அவர்கள் பாடினர்.

இதைக் கேட்ட போது அபூபக்ர் (ரழி) "பெருமானாரின் வீட்டில் அஞ்ஞான வாத்தியங்களா?" என்று கேட்டார்கள். இது நடந்தது ஒரு பெருநாள் தினத்தன்று.

உடனே நபி(ஸல்) கூறினார்கள் "அபூபக்ர் அவர்களே! ஒவ்வொரு சமுதாயத்துக்கும் பெருநாள் உண்டு. இன்று நம்முடைய பெருநாள்".

"அபூபக்ரே! அவ்விருவரையும் தடுக்காதீர்கள். ஏனெனில் இன்று பெருநாள்" என்று நபி(ஸல்) கூறியதாக மற்றொரு அறிவிப்பில் காணப்படுகிறது. (நூல்: புஹாரி, முஸ்லிம்).

எனவே பழையதை அகற்ற புதியதைப் பயன்படுத்த வேண்டும். இதுவே நபி வழி. இதுவே மனித சுபாவம் ஏற்கும் வழி.

ஆனால் ரோமானிய கிறஸ்தவம் மனித இயல்பை மாற்றவும் அகற்றவும் அனாவசிய மாக முயற்சித்தது. மனித ஆத்மாவால் தாங்கிக் கொள்ள முடியாத மனித சுபாவம் ஏற்க விரும்பாத, ஏற்க இயலாத ஒரு வழிமுறையை மனிதனிடம் திணித்தது. அதை ஏற்கச் சொல்லி ஆசையூட்டியது.

அதாவது உலகாதாயச் சிந்தனையை துறவுச் சிந்தனையால் மாற்ற முயன்றது.

மனித சுபாவமோ தன் மீது வலிந்து திணிக்கப்பட்ட துறவுக் கோட்பாட்டை வேறு வழியின்றி ஏற்க மனமின்றி ஏற்றது. பின்னர் விரைவாக அதிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு அதன் மீது எதிர்த்தாக்குதல் நடத்தியது.

உலகாதாயத்தை தன் வாழ்க்கை வழியாக விரித்துக் கொண்டதால் மக்களிடம் ஒழுங்கீனமும் பாவச் செயில்களும் அன்றாடச் செயல்களாயின. இதை வீழ்த்திட துறவுக் கோட்பாட்டை கிறிஸ்தவம் முன்னெடுத்தது. இது மனித சுபாவத்துக்கு எதிரானதாக இருந்ததால் கிறிஸ்தவத்தால் உலகாதாயத்தை வீழ்த்த முடியவில்லை.

வீழ்ச்சியை நோக்கி விரைந்து கொண்டிருந்த மனித நாகரீகத்தைக் காப்பாற்றி கிறிஸ்தவம் மேற்கொண்ட முயற்சிகள் பலன் தரவில்லை.

இதனால் கிறிஸ்தவ உலகம் இருவேறு பாதைகளில் நடைபோட்டது. ஒரு புறம் வாழ்க்கையே ஜாலியாக வாழ்ந்து பார்ப்பதுதான் ஜோலி என்ற சிந்தனை (லிபரலிசம்) கொண்டோர் இருந்தனர். இவர்கள் உலகம் மனிதன் அனுபவிக்கவே படைக்கப்பட்டது. இங்கே தடை செய்யப்பட்ட செயல் என்று எதுவுமில்லை. யாரும் எதையும் எப்போதும் எங்கும் செய்யலாம் என்ற கொள்கையுடைவர்கள்.

மறுபுறம் துறவுச் சிந்தனையாளர்கள் வாழ்ந்தனர். இவர்கள் உலகில் உள்ள எதுவும் பயன்படுத்துவதற்கல்ல துறப்பதற்கே என்ற கொள்கையுடையவர்கள்.

கிறிஸ்தவ நாடுகளில் இப்படி இருவேறு துருவங்களை நோக்கி இழுக்கும் இரு முரண்பட்ட கொள்கைகள் இருந்தன.

இதை இன்னும் சரியாகச் சொல்வ தானால், துறவுக் கோட்பாட்டைக் கடைப் பிடிப்பவர்கள் இவ் உலக வாழ்வினுள்ள எல்லாத் தொடர்புகளையும் அறுத்துக் கொண்டு மனித சஞ்சாரமற்ற காடுகளிலும், பாலைவனங்களிலும் போய் ஒதுங்கிக் கொண்டனர்.

லிபரலிஸ்ட்கள் எனப்படும் ஆபாசத்தில் நாட்டமுள்ள உல்லாச பேர்வழிகளோ பெரு நகரங்களிலும், சிறு நகரங்களிலும் வாழ்வாங்கு வாழ்ந்தனர்.

**தொடரும்...**

**தமிழ் வடிவம் : இல்யாஸ் ரியாஜி**


**தமிழன்**

**தொலைக்காட்சியில்**

**தரீக்குல் குர்ஆன்**

**வாரந்தோறும் செவ்வாய்க்கிழமை**

**இரவு 10.00 மணி முதல் 10.30 மணி வரை**

**வைகறை வெளிச்சம்**

**துணை ஆசிரியர்**

**இல்யாஸ் ரியாஜி**

**திருக்குர்ஆன் விரிவுரை**

**நிகழ்த்துகிறார்**

**RSD வீடியோ நிறுவனம்**

**இந்நிகழ்ச்சியை**

**நடத்துகிறது.**

**காணத்தவறாதீர்கள்**

**தொடர்புக்கு :**

**காயல் தர்வேஷ்**

**9841898044**



Owned and published by M. Gulam Mohamed from 52/1, Mannady Street, Mannady, Chennai - 600 001. Editor M. Gulam Mohamed, Printed by M. Gulam Mohamed at Chennai Offset Printers, 19/1, 21/2, Kitabath Khan Bhadhur Street, Chennai - 600 002.